இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 28 °c
குறைந்த வெப்பநிலை 24 °c
மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.


பொங்கல் சிறப்பிதழ் உள்ளே..


கழிப்பறை குழிகளின் மீது கடைகள் பக். 3

உக்ரைனில் போராட்டம் பக். 7

சம்பியனானது ஆவரங்கால் மத்தி பக். 22

ஆஸ்திரேலியா அபார வெற்றி பக். 23

உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
பக்கம்: 48
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30
சுடர்: 29 கதிர்: 049 வள்ளுவர் ஆண்டு: 2044 தை 01, செவ்வாய் 14.01.2014

# ஒபாமாவுக்குக் கூட அஞ்சாதவர் மஹிந்த

## மார் தட்டுகின்றார் டியூ குணசேகர

கொழும்பு, ஜனவரி 14
"இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற போது அமெரிக்க ஜனாதிபதி, ஐ.நா. செயலாளர் நாயகம், கனேடிய பிரதமர், பிரிட்டன் பிரதமர் ஆகியோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு போரை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்தனர். அவ்வாறான நிலையிலும், ஜனாதிபதி, எதற்கும் அஞ்சாமல் தீர்மானம் எடுத்துப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். அன்று ஜனாதிபதி தமது உறுதியான நிலைப்பாட்டிலிருந்து தளர்ந்திருப்பாரானால் அமெரிக்கர்கள் பிரபாகரனை மீட்டுக் கொண்டு சென்றிருப்பர்" - இவ்வாறு போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற இரகசியத் தகவலை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும், அமைச்சருமான டியூ குணசேகர வெளிப்படுத்தியுள்ளார்.
காலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள்சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு. "எமக்குச் சர்வதேச ரீதியில் சவால்கள் இருக்கின்றன. 2009ஆம் ஆண்டு மே மாத இறுதி வாரம் 18ஆம் திகதி


எனக்கு ஞாபகம் இருக்கிறது. மே 13ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை அமைச்சரவை கூடிப் பேச்சு நடத்தியது. இதுதான் எமது நாட்டின் தீர்மானம் மிக்க தருணம். அந்தச் சமயத்தில் ஜனாதிபதி உறுதியாகத் தீர்மானம் எடுத்தார் என நான் நினைக்கிறேன்.
- டியூ குணசேகர

21 ஆம் பக்கம் பார்க்க

## மினி முகாம்கள் அவசரமாக அகற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 14
யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்த இராணுவ மினி முகாம்கள் அவசர அவசரமாக அகற்றப்பட்டு வருகின்றன. அந்த மினி முகாம்களில் கடமையாற்றிய படையினர் அந்தப் பகுதிகளிலுள்ள பெரிய முகாம்க

21 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், ஜன. 14
யாழ்ப்பாணச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 20 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இன்னும் 100 மீனவர்கள் வரை தொடர்ந்து தடுத்து வைக்கப்

21 ஆம் பக்கம் பார்க்க

## ஏழு பேரின் உறுப்புரிமை நீக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 14
வலி. கிழக்குப் பிரதேச சபையின் வரவுசெலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்த ஆளுங்கட்சியான தமிழரசுக் கட்சியின் ஏழு பேரும் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் எனக் கட்சியின் பொதுச்

21 ஆம் பக்கம் பார்க்க

## பரீட்சை திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14
இந்த ஆண்டுக்குரிய தேசியப் பரீட்சைகளின் திகதிகள் பரீட்சைத் திணைக்களத்தினால் நேற்றைய தினம் வெளியிடப்பட்டுள்ளன.
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 5

21 ஆம் பக்கம் பார்க்க


உதயனின் வாசகர்கள், விளம்பரதாரர்கள் விநியோகத்தர்கள் அபிமானிகள்,
**அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்**



தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் உள்ள சந்தைகளில் பொங்கல் பொருள்கள் விற்பனை சூடு பிடித்தது. திருநெல்வேலிச் சந்தையில் பொங்கலுக்குத் தேவையான பானை, கரும்பு, பழங்கள் என்பவற்றை கொள்வனவு செய்வதில் மக்கள் மும்முரம் காட்டினர். (த-21)

## தமிழீழத்தை அடைய பொங்கலில் சபதம்

*எடுப்போம் என்று வைகோ அறைகூவல்*

யாழ்ப்பாணம், ஜன. 14
ஈழத் தமிழரின் விடிவுக்கு தமிழீழம் ஒன்றே தீர்வு. அதை அடைவதற்குத் தன்மானத் தமிழர்கள் அனைவரும் இன்றைய பொங்கல் திருநாளில் சபதம் ஏற்போம் என்று அறைகூவல் விடுத்துள்ளார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் வை.கோபாலசாமி.
"துன்ப இருளில் இன்னமும் தவிக்கும் ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைக்க - விடியலின் வெளிச்சத்தை அவர்கள் காண, சுதந்திரத் தமிழ் ஈழம் ஒன்றே தீர்வாகும். அந்த இலக்கை அடைவதற்கு

21 ஆம் பக்கம் பார்க்க

## ஐக்கியத்தின் அடையாளமே தைப்பொங்கல் பெருநாள்

*ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து*

கொழும்பு, ஜன.14
"தைப்பொங்கல் மக்களினதும் சமூகங்களினதும் நாளாந்த வாழ்விலும் தெய்வ வழிபாட்டிலும் ஐக்கியத்தை அடையாளப்படுத்தி நிற்கிறது. இது எமது நாட்டில் சமாதானத்துக்காகவும், மக்கள் மத்தியிலான நல்லிணக்கத்துக்காகவும் நன்றி செலுத்தும் சந்தர்ப்பமாகும்" என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது பொங்கல் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## காணி விற்பனை குடாநாட்டில் கடந்த வருடம் பெரும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 14
கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் காணி தொடர்பான சட்ட ரீதியான பதிவுகளின் எண்ணிக்கை கடும் வீழ்ச்சி கண்டுள்ளது. அதற்கு முந்திய வருடங்களுடன் ஒப்பிடுகையில் இது மிகப் பெரிய சரிவு என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.
கடந்த வருடம் முழுவதும் 25 ஆயிரத்து 174 காணிப் பதிவுகளே இடம்பெற்றுள்ளன யாழ். மாவட்ட பதிவாளர் திணைக்களம் தெரிவித்தது. உறுதிகள் மற்றும் காணி தொடர்பான பதிவுகளே இவை என்று தெரிவித்துள்ளன.
இதற்கு முந்தைய 2011, 2012 ஆம் ஆண்டுகளில் 30 ஆயிரத்திற்கும் அதிகமான காணிப் பதிவுகள் இடம்பெற்றுள்ளதாகவும் திணைக்களம் கூறு

21 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 3 நாள்களில்
Gold Sponsor
(C/10523)

## ஐ.நா. மனித உரிமை அமர்வில் 23ஆவது விடயமாக இலங்கை

யாழ்ப்பாணம், ஜன. 14
ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் 25 ஆவது அமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதில் இலங்கை தொடர்பான அறிக்கை 23 ஆவது விடயமாக எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஜெனீவா மனித உரிமைகள் சபையில் இலங்கை இந்த வருடம் அங்கத்துவம் பெறாத போதும், இலங்கை தொடர்பில்

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராதனை சுகாதார விஞ்ஞான பீடம் மூடல்

கொழும்பு.ஜன 14

பேராதனைப் பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்கள் கடந்த 20 நாள்களாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதன் காரணமாக அந்தப் பீடம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது எனப் பேரதானைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அத்துல சேனாரத்ன தெரிவித்தார்.

இணைந்த சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்பு, நான்கு வருடங்களில் இருந்து மூன்று வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்கள், பேராதனை.- கலஹா சந்தியில் மேடை அமைத்து தமது போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர்.

இதற்கமைய இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தை நேற்றிலிருந்து மூடுவதாகவும், அந்தப் பீடத்தின் மாணவர்கள் நேற்று மாலை 4 மணிக்கு முன்னதாக விடுதிகளில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த)



*சீனக் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு போர்க் கப்பல்கள் நேற்றுத் திங்கட்கிழமை திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன. சீனாவுக்கும் இலங்கைக்குமான நட்புறவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இந்தக் கப்பல்கள் வந்துள்ளன. இந்தக் கப்பல்களில் ஒன்று சீனன்குடா அஷ்ரப் துறைமுகத்திலும் மற்றையது வெளித்துறை முகத்திலும் நங்கூரமிட்டுள்ளன.*

*ஜிம்ஜம்பா (999) என்னும் பெயரைக் கொண்ட கப்பல் 210 மீற்றர் நீளம் கொண்டதாகும். மற்றையது கென்சு (572) என்னும் பெயரைக் கொண்ட கப்பல் 134.1 மீற்றர் நீளம் கொண்டது. இவ்விரண்டு கப்பல்களிலும் 680 பணியாளர்கள் உள்ளனர். (த)*

## காட்டிக் கொடுத்தது மோப்ப நாய்

யாழ்ப்பாணம்,ஜன.14

உடுவிலில் கத்தி உட்பட ஆயுதங்களுடன் சென்று திருட்டில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் அங்கு விசாரணை மேற்கொண்ட போது மோப்ப நாய் ஒருவரைக் காட்டிக் கொடுத்தது.

சந்தேகத்தின் பேரில் அவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர். தற்போது அவர் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உடுவில் அம்பலவாணர் வீதியில் கடந்த சனிக்கிழமை பட்டப்பகலில் இந்தத் திருட்டு இடம் பெற்றிருந்தது. இதில் ஏழரைப் பவுண் நகைகள், பணம், கைத்தொலைபேசி என்பன திருட்டுப் போயிருந்தன. அது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட போதே சம்பவ இடத்திலிருந்து சுமார் 150 மீற்றர் தூரத்திலுள்ள அதே இடத்தைச் சேர்ந்த ஒருவரை மோப்ப நாய் காட்டிக்கொடுத்துள்ளது.

(த-4)

## மாட்டுவண்டி சவாரி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் இன்று நடத்தப்படவிருந்த மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி மழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

தைப்பொங்கலை முன்னிட்டு, மூளாய் பொன்னாலையில் அமைந்துள்ள சவாரித்திடலில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி இன்று இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நேற்றைய தினம்பெய்த மழை காரணமாக தரை ஈரலிப்பாகியுள்ளமையால், சவாரிப் போட்டி இன்று நடைபெறாதெனவும், நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (த-5)

# தமிழ் அரசியல் கைதிகளைச் சிறையில் இரு மாதங்களில் சந்திப்பார் முதல்வர்

யாழ்ப்பாணம், ஜன. 14

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை இன்னும் இரண்டு மாதங்களுக்குள் அனுமதி பெற்று தான் மீளவும் சந்திப்பார் என்று வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

பொங்கல் தினத்தையொட்டி அரசியல் கைதிகளைப் பார்ப்பதற்காக மகஸின் சிறைச்சாலைக்கு ஞாயிற்றுக்கிழமை சென்றிருந்தார் வடக்கு மாகாண முதலமைச்சர்.

சிறைச்சாலைக்கு வந்த முதலமைச்சர், அரசியல் கைதிகளைச் சந்திக்கவில்லை என்றும், சாதாரண குற்றவாளிகளான தமிழ் கைதிகளையே சந்தித்தார் எனவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் மின்னஞ்சல் மூலம் கேட்டபோது அவர் அதற்கு நேரடியாகப் பதிலளிக்கவில்லை.

“சிறையில் 137 தமிழ் அரசியல் கைதிகள் இருக்கின்றனர்.

> **“அனுமதி பெற்று இரண்டு மாதங்களில் அரசியல் கைதிகளை மீளவும் சந்திப்பேன் என்று உறுதிமொழி வழங்கியுள்ளேன். ஆனாலும் என்னைச் சந்திப்பதில் மட்டும் பயனில்லை. உங்களின் விடுதலைக்காக இணைந்து செயற்படுவோம் என்பதை அவர்களிடம் கூறினேன்.**

அவர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் சந்திப்பதற்கான அனுமதிக் கடிதத்தில் சிறைச்சாலைகள் அமைச்சர் நாட்டில் இல்லாமையால் ஒப்பமிடவில்லை.

இதனால் சிறைச்சாலைகள் ஆணையாளர் கைதிகளை 12 மற்றும் 5 பேர் கொண்ட குழுக்களாக அவரது அறையில் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தந்தார். இதற்கமைய 50 தொடக்கம் 60 பேர் வரையிலானோரைச் சந்தித்திருந்தேன்.

அனுமதி பெற்று இரண்டு மாதங்களில் அரசியல் கைதிகளை மீளவும் சந்திப்பேன் என்று உறுதிமொழி வழங்கியுள்ளேன். ஆனாலும் என்னைச் சந்திப்பதில் மட்டும் பயனில்லை. உங்களின் விடுதலைக்காக இணைந்து செயற்படுவோம் என்பதை அவர்களிடம் கூறினேன்.

அதன் பின்பு பெண்கள் விடுதிக்கு சென்றேன். அங்கு 4 பேரையே சந்திக்க முடிந்தது” என்று தனது பதிலில் தெரிவித்திருந்தார் முதலமைச்சர். (உ-5)

# தாதியர் கல்லூரிக்கு தெரிவானோரில் 42 பேர் கற்கைக்கு செல்லவில்லை

### *நேர்முகத் தேர்வு தாமதமானது காரணமாகலாம்*

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்.தாதியர் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்ட 73 பேரில் 42 பேர் கற்கைக்குச் செல்லவில்லை. நேர்முகத் தேர்வு நடத்தி ஒரு வருடத்தின் பின்னர் இந்தத் தெரிவு இடம்பெற்றதால் தாதியர் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்கள் வேறு வேலைகளைத் தேடிச் சென்றமை இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கல்லூரியின் அதிபர் றஜீலா வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.தாதியர் கல்லூரியில் கற்கையை மேற்கொள்ளவென 73 பேரின் பெயர் விவரங்கள் சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டன. 73 பேரும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆனால் 73 பேரில் 31 பேர் மாத்திரமே வந்து பதிவுசெய்துள்ளனர். அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் கடந்த 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிகுதி 42 பேரும் இதுவரை வந்து பதிவு செய்யவில்லை. அவர்கள் உட்படப் பலருக்கு ஒரு வருடத்தின் முன்னர் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டிருந்தது. ஆனால், ஒரு வருட காலமாக அவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்காத நிலையில் அவர்கள் வேறு வேலைகளை நாடிச் சென்றிருக்கலாம். அதனாலேயே 42 பேரும் கற்கைக்கு வரவில்லை என்று கருத வேண்டியுள்ளது.

இந்தப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட அனைவரும் விஞ்ஞான பிரிவு மாணவர்கள். இவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஆங்கில மொழி மூலமானதாகவே இருக்கும்.

6 ஆயிரம் பேரைத் தாதியர்களாக உருவாக்கும் திட்டத்திலேயே இந்த நேர்முகத் தேர்வு நடைபெற்றது. அதில் முதலாவது அணியாகவே 73 பேரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இரண்டாவது அணியினருக்கான பயிற்சிகள் எதிர்வரும் மார்ச் அல்லது ஏப்ரல் ஆரம்பமாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. எதிர் காலத்தில் ஆங்கில மொழி மூலமாகவே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இருக்கும் - என்றார். (த-4)

# மீனவர் பேச்சுக்கு யாழில் தனிப்பட்ட ரீதியில் ஒருவர்

இந்தியாவில் இடம்பெறவுள்ள மீனவர் பிரச்சினை தொடர்பான பேச்சுக்கு இலங்கையில் இருந்து 15 பேர் கொண்ட குழு இன்று இந்தியா செல்கின்ற போதும் யாழ். மாவட்டத்தில் இருந்து ஒருவருக்கு மட்டுமே தனிப்பட்ட ரீதியில் கடற்றொழில் அமைச்சினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று மீனவர் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் மகா சம்மேளனம் கடந்த 6 மாத காலமாகச் சீராக செயற்படாத நிலையில் மகா சம்மேளனத் தலைவராகக் கடமையாற்றிய நா. பொன்னம்பலத்துக்கு மட்டும் தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கங்களுடன் கலந்துரையாடல் கூட மேற்கொள்ளப்படவில்லை. மீனவர் தொடர்பான பேச்சுக்கு யார் செல்கிறார்கள் என்பது கூடத் தமக்குத் தெரியாது என்று மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வடமாகாண சபைத் தேர்தலில் மகா சம்மேளனத் தலைவர் நா.பொன்னம்பலம் போட்டியிட்டமை காரணமாகச் சங்கங்கள் இணைந்து அவரைத் தலைமைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்தன.

மகா சம்மேளனத்தின் கீழ் 39 சங்கங்கள் செயற்படும் நிலையில் கடந்த 6 மாத காலமாக மகா சம்மேளனக் கூட்டங்கள் எதுவும் இடம்பெறவில்லை. அத்துடன் மீனவர் தொடர்பான தற்காலப் பிரச்சினைகளும் இந்த மகா சம்மேளனத்தால் ஆராயப்படவில்லை.

இந்த நிலையில் இலங்கை மீனவர்கள் தொடர்பாக இந்தியாவில் இடம்பெறவுள்ள பேச்சுக்குக் கடற்றொழில் அமைச்சு சார்ந்தவர்கள் செல்லவுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் இருந்து மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் எவரும் அழைக்கப்படவில்லை.

யாழ். மாவட்ட மீனவர் மகா சம்மேளனத் தலைவர் யார் என்று கூட அங்கத்தவர்கள் அறிந்திராத நிலையில் மகா சம்மேளனத் தலைவராகக் கடமையாற்றிய நா. பொன்னம்பலத்துக்கு அமைச்சில் இருந்து தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அங்கத்தவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இன்று இலங்கையில் இருந்து 15 பேர் கொண்ட குழுவினர் இந்தியா செல்லவுள்ளனர். இதில் பொன்னம்பலம் மட்டுமே அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடத்துநர், சாரதியின் அலட்சியப் போக்கு

அக்கராயன், ஜன.14

தனியார் பஸ்ஸில் பயணித்த முதியவர் ஒருவர் மதுபோதையில் இருந்த வேறு இருவரால் தாக்கப்பட்ட போது அந்த பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் அது குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையென சக பயணிகள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து முழங்காவில் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் கடந்த 8 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மதுபோதையில் காணப்பட்ட இரண்டு இளைஞர்கள் முதியவரின் தலை மற்றும் வாய்ப் பகுதிகளில் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. முதியவர் ஸ்கந்தபுரம் கிராமத்தில் பஸ்ஸில் இருந்து இறங்கியுள்ளார். தாக்குதலுக்கு உள்ளானவர் ஏற்கெனவே ஒரு கண்ணை இழந்துள்ளார். அந்த இரண்டு இளைஞர்களும் முழங்காவில் நோக்கிப் பயணித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற போது நடத்துநரும், சாரதியும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் பஸ்ஸில் பயணித்த ஏனையவர்கள் தெரிவித்தனர்.

பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்களை பொலிஸில் ஒப்படைப்பது சாரதி மற்றும் நடத்துநரின் முக்கிய பொறுப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

# வடக்கில் பணியாற்றுவதற்கு 159 மருத்துவர்கள் நியமனம்

### பெப். 2 இல் சுகாதார அமைச்சர் வழங்குவார்

யாழ்ப்பாணம்.ஜன.14

யாழ்.போதனா வைத்திய சாலை உட்பட வட மாகாணத்திலுள்ள அனைத்து வைத்திய சாலைகளிலும் பணிபுரிவதற்கென 159 மருத்துவர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

எதிர்வரும் 2 ஆம் திகதி கொழும்பில் வைத்து சுகாதார அமைச்சர் 159 பேருக்கும் நியமனக் கடிதங்களை வழங்கவுள்ளார். மறுநாள் மருத்துவர்கள் நியமனம் பெற்ற வைத்திய சாலைகளில் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

அதன்படி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 33 மருத்துவர்களும், யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வைத்திய சாலைகளுக்கு 23 மருத்துவர்களும், வவனியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட வைத்திய சாலைகளுக்கு 29 மருத்துவர்களும், மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட வைத்திய சாலைகளுக்கு 24 மருத்துவர்களும், முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட வைத்திய சாலைகளுக்கு 25 மருத்துவர்களும், கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் திணைக் களத்துக்குட்பட்ட வைத்திய சாலைகளுக்கு 25 மருத்துவர்களும் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

கடந்தமுறை இவ்வாறு 58 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலமாக மருத்துவர்களுக்கான தேவை ஓரளவு சீர் செய்யப்படுகிறது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்தது. (ஐ-4)



வவுனியா வடக்கு பிரதேசத்தை மது மற்றும் புகைத்தல் அற்ற பிரதேசமாக மாற்ற வேண்டும் எனப் பிரதேச செயலக மற்றும் சுகாதார திணைக்களத்தின் ஊழியர்கள் பாடசாலை மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இந்த நிகழ்வில் முதற்கட்டமாக வவுனியா வடக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கருத்தரங்கு இடம்பெற்றது.

## வீட்டினுள் நுழைந்த ஆயுததாரிகள் தப்பியோட்டம்

### சுன்னாகம் மேற்கு பகுதியில்

வலி.வடக்கு, ஜன.14

சுன்னாகம் மேற்கு, குண்டுக் குளம் பகுதியில் உள்ள வீடொன்றினுள் ஆயுததாரிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு நுழைந்த போதிலும் வீட்டுக்காரர்கள் சத்தமிட்டதைத் தொடர்ந்து அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

ஆள்கள் நடமாட்டம் குறைந்த பகுதியில் உள்ள அந்த வீட்டு வளவினுள் ஆயுததாரிகள் நுழைந்ததாகவும் இதனை உணர்ந்த வீட்டுக்காரர்கள் விழித்தெழுந்து நடக்கும் சம்பவத்தை யன்னல் வழியாக பார்த்துக் கொண்டு இருந்தனர்.

அந்தவேளை கதவை உடைத்து உள் நுழைவோம் என கதைப்பதைக் கேட்டு வீட்டுக்காரர்கள் கூக்குரல் இட்டதைத் தொடர்ந்து அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த அவர்கள் தமது மோட்டார் சைக்கிள்களை சுமார் முந்நூறு யார் தூரத்துக்கு அப்பால் உள்ள சந்தியில் நிறுத்திவிட்டு வயல் வெளியில் அமைந்துள்ள வீட்டுக்கு கால்நடையாகச் சென்றுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸாருக்கு இது குறித்து உடனடியாக அறிவித்த போதிலும் பொலிஸார் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று குறித்த பகுதியில் உள்ள மக்கள் கவலையுடனும் விரக்தியுடனும் தெரிவித்துள்ளனர்.

அது தொடர்பில் கிராம அலுவலரிடமும் மற்றும் பொலிஸாரிடமும் முறையிடப்பட்டுள்ளது. (வ-86)

## மூடிய வடிகாலுக்குள் நுளம்புப் பெருக்கம்

### சாவகச்சேரி நகர் வர்த்தகர்கள் விசனம்

தென்மராட்சி, ஜன.14

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கடந்த வருடம் அமைக்கப்பட்ட மூடப்பட்ட வடிகால்களுக்குள் காணப்படும் நுளம்புகளால் சிரமங்களை எதிர்நோக்குவதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக மூடப்பட்டுள்ள வடிகால் மூடிகளில் உள்ள துவாரங்களால் வெளியேறும் நுளம்புகள் மாலை வேளைகளில் வர்த்தக நிலையங்களில் நிற்போரை மொய்த்து தாக்குவதாகவும் தெரிவித்தனர்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை தொடக்கம் சாவகச்சேரி ரயில் நிலைய வீதிச் சந்தி வரை சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வடிகால் அமைக்கப்பட்டு மூடி போடப்பட்டுள்ளது.

" _ "

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை தொடக்கம் சாவகச்சேரி ரயில் நிலைய வீதிச் சந்தி வரை சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வடிகால் அமைக்கப்பட்டு மூடி போடப்பட்டுள்ளது.

மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் அதனுள் நுளம்புகள் பெருகி மக்களையும் வர்த்தகர்களையும் தாக்கி வருவதாகவும் இதனால் பல வர்த்தகர்கள் காய்ச்சல் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர். (வ-9)

## அக்கராயன் ஊடான பஸ் சேவைக்கு வழித்தட அனுமதி

### வழங்கப்படும் என்கிறார் துணுக்காய்ப் பிரதேச செயலர்

அக்கராயன்.ஜன.14

துணுக்காயிலிருந்து அக்கராயன் வழியாக கிளிநொச்சி வரை பஸ் சேவையில் ஈடுபட முன்வருபவர்களுக்கு வழித்தட அனுமதியைப் பெற்றுத்தருவதற்கு தயாராகவுள்ளதாக துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்தார்.

துணுக்காய் பகுதி கிராமங்களில் வசிக்கும் மக்களின் நலன் கருதி அக்கராயன் வழியாக கிளிநொச்சி வரை பஸ் சேவைகளை நடத்துமாறு தொடர்ந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்றது.

பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் மக்களின் நலன்கருதி பஸ் சேவைகளை நடத்துவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## ஓட முடியாத பஸ்ஸிலும் பயணிகள் ஏற்றி இறக்கும் ஏமாற்று வேலை

### *பருத்தித்துறை பஸ் நிலையத்தில்*

ஓட முடியாத பஸ்ஸை பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நிறுத்தி வைத்து பெயர்ப் பலகையைப் போட்டு, பயணிகளை ஏமாற்றும் வேலையில் அங்கு கடமையில் இருக்கும் பணியாளர்கள் ஈடுபடுகின்றனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஓட முடியாத பஸ்ஸே இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அநேகமாக ஞாயிற்றுக் கிழமைகளில் வல்லிபுரக் கோயில் எனப் பெயர்ப் பலகை போடப்பட்டே இந்த 'நாடகம்' நடப்பதாக பயணிகள் கூறுகின்றனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதனால் வல்லிபுரக் கோயிலுக்குச் செல்லும் அடியவர்களில் முதியோர்கள், சிறுவர்கள் எனப் பல தரப்பினரும் தமக்கான இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். கட்டைக்காடு, பொற்பதிக்குச் செல்லும் பஸ்கள் பஸ் நிலையத்துக்கு வந்ததும் ஓடாத அந்த பஸ்ஸில் இருந்து பயணிகள் இறக்கப்பட்டு பொற்பதி, கட்டைக்காடு பஸ்களில் ஏற்றப்பட்டனர்.

இவ்வாறு ஞாயிறு தினங்களில் வயோதிபப் பயணிகளும் ஆலயத்துக்குச் செல்லும் அடியவர்களும் ஏற்றி இறக்கப் படுவதால் பெரும் சிரமத்துக்கு ஆளாகின்றனர். இதுதொடர்பாக பருத்தித்துறைடிப்போ முகாமையாளர் கவனத்தில்எடுத்துஇவ்வாறானசிரமங்களைத் தவிர்க்குமாறும் அவர்கள்தெரிவிக்கின்றனர். (ஓ-422)

## கழிப்பறைக் குழிகளுக்கு மேல் கடைகள்

### *வாடகைப் பணத்துக்காக மாநகர சபையினரின் நடவடிக்கை*

யாழ்ப்பாணம்.ஜன.14


யாழ்.நகரில் கழிப்பறைக் குழிகளைக் கூட மாநகர சபை விட்டு வைக்கவில்லை. அவற்றின் மேலும் வர்த்தக நிலையங்களை அமைத்து வாடகைப் பணம் பெறுவதில் குறியாகவுள்ளது. ஆனால் வர்த்தகர்களது பிரச்சினை தொடர்பாக மாநகர சபை கண்டு கொள்ளவில்லை என்றும் வர்த்தகர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

யாழ்.நகரில் நவீன சந்தைப் பகுதியில் தகரங்களைக் கொண்டு 4 வர்த்தக நிலையங்களை மாநகர சபை அமைத்துள்ளது.

ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களில் வியாபாரம் இல்லாத நிலையில் புதிதாக இந்த வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சந்தைப் பகுதி வர்த்தகர்கள் பயன்படுத்தும் கழிப்பறைக் குழிக்கு மேலாக குறித்த வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.


மாநகர சபை தனது வருமானத்துக்காக வர்த்தகர்களது வசதிகளைக் கருத்தில் கொள்ளாமல் சுகாதாரக் கேடான இடத்தில் வர்த்தக நிலையத்தை அமைத்துள்ளமை தொடர்பாக வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-14)



கழிப்பறைக் குழிகளைக் கூட விட்டு வைக்கவில்லை மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜிதவின் கருத்துக்கு நாராயணசாமி கண்டனம்



டில்லி, ஜன.14

இலங்கை சிறையில் வாடும் 275 தமிழக மீனவர்கள் ஓரிரு நாளில் விடுவிக்கப்படுவார்கள் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியிருந்தார்.

இந்தநிலையில் இதனை மறுக்கும் வகையில் இலங்கை கடற்றொழில் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்தின, பேச்சுக்கு பின்னரே மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

மீனவர்களின் விடுதலை குறித்து இலங்கை அமைச்சரின் கருத்துக்கு மத்திய அமைச்சர் நாராயணசாமி கடும் கண்டனம் தெரிவித் துள்ளார்.

அவர், "பேச்சுவார்த்தையை காரணம் காட்டி விடுவிப்பதை காலம் தாழ்த்தக்கூடாது. பேச்சு என்பது வேறு; மீனவர்களை விடுவிப்பது என்பது வேறு" என்று தெரிவித்துள்ளார்.(வ)

# பேச்சுக்கு முன் தமிழக மீனவரை விடுதலை செய்ய வேண்டும்

### கருணாநிதி வலியுறுத்து

சென்னை, ஜன.14

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழக மீனவர்களை பேச்சுக்கு முன்பாகவே விடுதலை செய்ய வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முதலமைச்சர் பெயரால் ஓர் அறிக்கை வெளிவந்துள்ளது. அதில் எதிர்வரும் 20 ஆம் திகதி இந்திய மீனவர்களும், இலங்கை மீனவர்களும் சந்தித்துப் பேசுவார்கள் என்றும் இலங்கைச் சிறையில் வாடும் தமிழக மீனவர்கள் 275 பேரும் ஓரிரு நாளில் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அறிவித்திருக்கிறார்.

இந்தத்தகவலை நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நான் ஏற்பாடு செய்ததன் பேரில் கடந்த மாதம் தமிழக மீனவர்களின் பிரதிநிதிகளை டில்லியில் பிரதமரை 27.12.2013 அன்று சந்திக்க வைத்த போதே மீனவர் பிரதிநிதிகளிடமும் டி.ஆர். பாலுவிடமும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வாக்கில் இரண்டு நாட்டின் மீனவர்களின் பிரதிநிதிகளும் சந்திப்பார்கள் என்று பிரதமர் உறுதி கூறி அந்தச் செய்தி அனைத்து ஏடுகளிலும் அப்போதே வெளி வந்து விட்டது.

அந்தத்தகவலைத் தான் பதினைந்து நாள்கள் கழித்து தமிழக முதலமைச்சர் அறிக்கையாகத் தெரிவித்திருக்கிறார். எப்படியோ அந்தப் பேச்சு நடைபெற்று சிறந்த முடிவுகள் எடுக்கப்பட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு ஏற்பட்டாக வேண் டும்.


ஆனால் அந்தப் பேச்சு நடைபெறுவதற்குமுன்பாக இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு தொடர்ந்து காவல் நீடிக்கப்பட்டு அங்கே சிறையில் இருக்கும் அனைத்து இந்திய மீனவர்களும் அந்த அரசால் விடுதலை செய்யப்பட வேண்டும். பேச்சின்போது ஒரு சுமூகமான முடிவுக்கு வர அது மிகவும் உதவியாக இருக்கும். தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் நிச்சயமாக அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று இன்றைய அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். இந்தத் தகவல் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை.

முதலமைச்சர் ஜெயலலிதா தனது அறிக்கையில் மீனவர்களுக்கு அ.தி.மு.க. அரசு செய்த உதவிகளையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார். அவ் வாறு மீனவர்களுக்குச் செய்த உதவிகளை நினைவூட்ட வேண்டுமேயானால், தி.மு.க. ஆட்சியில் செய்த நிறைய நிவாரண உதவி களை நான் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆனால் முதலமைச்சர் விடுத்த அறிக்கையில் வழக் கம்போல என்னைப் பற்றியும் பல கண்டன விமர்ச னங்களைச் செய்திருக்கிறார். மீனவர் பிரச்சினை குறித்து 7-1-2014 அன்று முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு கடிதம் வாயிலாகவிடுத்த வேண்டுகோளைப் பற்றி நான் குறிப்பிடும்போது, மத்திய அரசின் சார்பில், இரண்டு நாடுகளின் மீனவர் பிரதிநிதிகளைச் சந்திக்க வைக்க நாள் குறிப்பிட வேண்டும் என்று தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் தமிழக அரசிடமிருந்து பதில் வரவில்லை என்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறாரே அதற்கு முதலமைச்சரின் பதில் என்ன என்று நான் கேட்டதற்கு குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதுபோல என்ற பழமொழி நினைவுக்கு வருவதாகத் தெரிவித்திருக்கிறார்.

இது குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கின்ற பிரச்சினை அல்ல. நடுக்கடலிலே மீன் பிடிக்கின்ற பிரச்சினை என்பதை முதலமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்- என்றுள்ளது. (வ)

## வவுனியாவில் இடம்பெற்றது ஓட்டோ சங்கத்தின் கூட்டம்



வவுனியா, ஜன.14

வவுனியா மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் வவுனியா நகரசபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம் பெற்றது.

சங்கத் தலைவர் இ.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பொதுக்கூட்டத்தில் வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர், மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, இ.இந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மங்கல விளக்கேற்றல், விருந்தினர்கள் வரவேற்பு ஆகியவற்றைத் தொடர்ந்து சென்ற வருட கூட்ட அறிக்கை மற்றும் செயலாளர் அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டன.

நிகழ்வின் முக்கிய நிகழ்வாக நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

மேலும் சங்கத்தின் உறுப்பினரான சேவையில் இருந்த போது மரணமடைந்த எஸ். ஆனந்தன் என்பவரின் மனைவிக்கு ஓட்டோச் சங்கத்தினால் வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபாவை வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் இறந்தவரின் மனைவியிடம் கையளித்தார். (க-421)

# ஈழத் தமிழர் பிரச்சினைக்கு பரிகாரம் காண்பாரா 'ஜெ'

### பழ. நெடுமாறன் கேள்வி



சென்னை, ஜன.14

தமிழக முதலமைச்சர் இலங்கையின் வடக்கு மாகாண முதலமைச்சரையும் கிழக்கு மாகாண முதலமைச்சரையும் அழைத்து இரு மாநிலங்களுக்கும் இடையே உள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டும் என்று உலகத் தமிழர் இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் உள்ள தமிழ் நாடும் இலங்கையில் உள்ள தமிழீழமும் ஒரே நாடாக இருந்தது இல்லை. மொழி, பண்பாடு போன்றவற்றின் அடிப்படையில் இரு நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் இடையே ஆழ்மான நெருங்கிய உறவு பல நூறாண்டு காலமாக நிலவி வருகிறது. அந்த அடிப்படையில் இதனை அணுக வேண்டும்.

இலங்கையின் தமிழர் பகுதிகளில் நிலவும் நிலைமை குறித்து இலங்கை அரசு கூறும் தகவல்கள் உண்மையானவையா, இல்லையா என்பது குறித்து வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச் சர்களை அழைத்துப்பேசி முழுமையான உண்மை களை தமிழக முதலமைச்சர் தெரிந்து கொள்ள முடியும்.

அதற்கிணங்க இந்திய அரசுடன் பேசி ஈழத் தமிழர் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணுமாறு வற்புறுத்த முடியும்.

தமிழக சட்டசபையில் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து அடுக்கடுக்கான தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலமோ அல்லது, பிரதமருக்குத் தொடர்ந்து கடிதம் எழுதுவதன் மூலமோ பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண முடியாது.

மாறாக வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர்களை அழைத்துப் பேசி முழு உண் மைகளையும் அறிந்து கொண்டு அதற்காக மத்திய அரசுடன் இன்னும் வலுவுடன் போராட முடியும்.

அதைச் செய்வதற்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முன்வர வேண்டும்.

இல்லையென்றால் அவர் இந்தப் பிரச்சினையில் ஒப்புக்காக சட்டசபையில் தீர்மானங்களை நிறைவேற்றுகிறார், பிரதமருக்குக் கடிதம் அனுப்புகிறார் என்று மக்கள் கருதுவார்கள்-என்றார். (வ)



## அமைச்சரின் கருத்தால் பேச்சுக்கு பின்னடைவு

***ஜி.கே.வாசன் சாடல்***

இலங்கை அமைச்சர் ராஜிதவின் கருத்து மீனவர்கள் இடையேயான பேச்சுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே. வாசன் சாடியுள்ளார்.

சென்னை துறைமுகத்தில் நேற்று திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பேச்சு மூலம் மீனவர்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று கூறுவது மீனவர் நலனுக்கு எதிரானது.

எதிர்வரும் 20 ஆம் திகதி நடக்கும் பேச்சுக்கு முன்பே தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.(வ)

## மரண அறிவித்தல்

### *பசில் பிராயன் கோமஸ்*



அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, மோதரயை வசிப்பிடமாகவும் கொண்ட பசில் பிறாயன் கோமஸ் நேற்று (13.01.2014) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பசில் கோமாஸ் - எலிசபெள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் பரமேஸ்வரி(கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், அருள்தேவியின் அன்புக் கணவரும், வினோதினி (கனடா), வினோவதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாகரனின் மாமனும், ருஷ்ஷிகா(கனடா), பிரணாப் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், சந்திரகுமாரனின் (கனடா) மைத்துனரும், பற்றிக் டொறிஸ், துரை றொதிற்ரா, நோபட், கொட்றிக், றெயினோட் (சனா), காலஞ்சென்ற ஜெறாட் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.01.2014) செவ்வாய்க்கிழமை 300, வீட்டுத் திட்டம் நாவற்குழியில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு நாளை (15.01.2014) புதன்கிழமை நல்லடக்கத்துக்காக மு.ப. 11.00 மணிக்கு உடுவில் அப்போஸ்தல சபை, மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரர்கள், குடும்பத்தினர்.

## கிளிநொச்சி பாடசாலை ஒன்றின் தற்காலிக கொட்டகை வீழ்ந்தது

### காயமின்றித் தப்பினர் மாணவர்கள்



முறிந்து வீழ்ந்த வகுப்பறைக் கொட்டகை

கிளிநொச்சி, ஜன.14

கிளிநொச்சிப் பாடசாலை ஒன்றின் தற்காலிக கொட்டகை முறிந்து வீழ்ந்துள்ளது. அந்த வேளையில் அங்கு கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாணவர்கள் காயங்கள் ஏதுமின்றித் தப்பிக் கொண்டனர்.

மழை பெய்துகொண்டிருந்தபோது கிளிநொச்சி புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கடந்த 8 ஆம் திகதி தற்காலிகக் கொட்டகை ஒன்று முறிந்து வீழ்ந்த போதிலும் மாணவர்கள் காயங்கள் எதுவுமின்றித் தப்பிக் கொண்டனர்.

சுமார் 470 மாணவர்கள் கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில் ஒரு தொகுதி மாணவர்கள் தற்காலிகக் கொட்டகையில் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்த நிலையில் கொட்டகையின் ஒரு பகுதி முறிந்து வீழ்ந்துள்ளது. மாணவர்கள் அங்கிருந்து துரிதமாக வெளியேறித் தப்பிக் கொண்டனர்.

இந்தப் பாடசாலையில் இடநெருக்கடி காணப்படுகின்றது. நிரந்தரக் கட்டடங்களை அமைக்குமாறு பெற்றோர் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (க-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவக வீதிப் புனரமைப்பு 20 மாதங்களில் பூர்த்தி

*கலந்துரையாடலில் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.14
யாழ்.பண்ணை, ஊர்காவற்றுறை, குறிகாட்டுவான் பகுதிகளுக்கான வீதி அமைக்கும் பணிகள் 20 மாதங்களில் நிறைவடையக் கூடியதாக செயற்படுத்தப்படும் என்று வேலணை பிரதேச செயலகத்தில் குறித்த வீதிகள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, சரவணை பிரிவுகளுக்கென வீதி அபிவிருத்தி அதிகார சபை இணைப்பதிகாரி உட்பட கிராம அலுவலர், வீதிப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் முக்கிய நிறுவனம் அடங்கலாக கிராமத்துக்கு ஒருவர் என 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்படுவர். குறித்த பகுதிகளில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து குழு முடிவெடுக் கும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் தலைமையில் குழு தனது ஆலோ சனைகளை முன்னெடுக்கும். பிரதேச செயலர் நடவடிக்கைகளை கண்காணிப்பார் என்று கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (வ-7)

# சாவகச்சேரி அலுவலகத்துக்கு தனியார் கட்டடம் கோரல்

*இலங்கை மின்சார சபைக்கு*

தென்மராட்சி.ஜன.14
இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி பாவனையாளர் அலுவலகத்துக்கு தனியார் கட்டடம் வாடகைக்கு கோரப்பட்டுள்ளது.

சாவகச்சேரி அலுவலகத்துக்கு நிரந்தரக்கட்டடம் இல்லாததால் இதுவரை காலமும் தனியார் கட்டடங்களை வாடகைக்குப்பெற்று அலுவலகத்தை நடத்தி வருகின்றனர்.

தற்போது சாவகச்சேரி கச்சாய் வீதியில் இயங்கிவரும் அலுவலகக் கட்டடம் அதன் உரி மையாளரிடம் கையளிக்கப்படவுள்ளதால் அலுவலகத்தின் நான்கு வாகனங்களையும் மின்சாரப் பொருள்களையும் வைத்திருக்கக்கூடிய வசதிகளுடன் தனியார் கட்டடத்தை வாடகைக்கு கோரியுள்ளனர்.

மின்சார சபையின் சாவகச்ரேி அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க சாவகச்சேரி நகரசபையினர் தனங்களப்பு வீதியில் 7பரப்புக் காணியை வழங்கியுள்ளனர்.

இந்தக் காணியில் புதிய கட்டடம் அமைப்பதற்கான ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-115)

# தப்பிப் பிழைத்த நெற்பயிர் கால்நடைகளினால் நாசம்



வலி.தென்மேற்கு, ஜன.14
வயல்வெளிகளில் மேயவிடப்பட்டுள்ள கால்நடைகளால் தப்பிப்பிழைத்து வரும் நெற்பயிர்களைப் பாதுகாக்க முடியாமல் திண்டாடும் விவசாயிகள், அவற்றை அறுவடை செய்யும் வரை கால்நடைகளைக் கட்டி வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விவசாய சம்மேளனங்களைக் கோரியுள்ளனர்.

குடாநாட்டில் பருவமழையை நம்பி மேற்கொண்ட காலபோக நெற்செய்கை போதிய மழையின்மை காரணமாக, எதிர்பார்த்த பயனை எட்ட முடியாதவாறு பெரும்பாலான பயிர்கள் வாடிவதங்கி மஞ்சள் நிறமாகக் காட்சியளிப்பதால் போட்டி போட்டுக் கொண்டு கால்நடைகளை மேயவிடுவதில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். இதனால் அயலிலுள்ள நெற்பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள விவசாயிகள் தப்பிப் பிழைத்து வளரும் நெற்பயிர் களைப் பாதுகாத்து அறுவடைசெய்யும்வரை கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (வ-115)

# ஆலயத் திருட்டைத் தடுக்க மாபெரும் வாகனப் பேரணி

*சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில்*

யாழ்ப்பாணம், ஜன.14
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "இந்து ஆலயங்களில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி" குடாநாட்டில் எதிர்வரும் 24 ஆம் திகதி மாபெரும் வாகனப் பேரணி நடத்தப்படவுள்ளது. இந்தப் பேரணியில் வெளி மாவட்டங்களில் .இருந்தும் வாகனப் பேரணிகள் பங்கேற்கவுள்ளன என்று சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவர் சபா வாசுதேவக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காலத்தின் வேகத்துக்கு ஏற்ப மக்களும் தமது வாழ்க்கை நடைமுறைகளை விரைவுபடுத்தியுள்ளனர். இதன் காரணமாக சமூகத்தில் பல மாற்றங்களை அவதானிக்க முடிந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இன்று ஆலய வழிபாடுகள், அதன் அனுட்டானங்கள் பேணுதல், பெரியவர்களை மதித்தல், குருமார்களைக் கனம் பண்ணுதல் போன்றவை அருகி வருகின்றன. அத்துடன் ஆலயப் பிணக்குகள் அதிகரித்ததுடன் அவை நீதிமன்றங்களையும் நாடி நிற்கின்றன. இதனால் இந்து ஆலயங்களின் புனிதத் தன்மை குறைந்து வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**யாழ்.மாவட்டத்தில் முதல் முறையாக நடத்தப்படும் இந்த சிவ பேரணியில் இந்துக் குருமார்கள், பாடசாலை மாணவர்கள், சமூக நிறுவனங்கள், இந்து மக்கள் பங்குபற்றி பேரணிக்கு வலுச் சேர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றனர்.**

குறிப்பாக ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதுடன் ஆலயத் தெய்வ விக்கிரகங்கள் உட்பட தெய்வங்களைச் சுமக்கும் வாகனங்களும், ஆலயப் பொருள்களும் களவாடப்பட்டு வருகின்றன. அத்துடன் சில பகுதிகளில் ஆலயங்கள் சேதமாக்கப்படுவதுடன் உடைக்கப்பட்டும் வருகின்றன.

ஆலயத்தின் புனிதத் தன்மை அற்றுப்போகும் விதத்தில் இவ்வாறான சம்பவங்கள் இனி மேலும் எமது பிரதேசத்தில் நடைபெற்றால் சமூகத்தின் ஒழுக்க நெறிகள், சமூகக் கட்டமைப்புக்கள், பாரம்பரியங்கள், வரலாற்றுச் சுவடுகள் அற்றுப்போகும்.


இவற்றைக் கருத்தில் கொண்டு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் இந்த ஆன்மிகப் பிரார்த்தனைப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'ஓம் நமசிவாய' என்ற ஆன்மிக வங்கியில் மக்களால் கிடைக்கப்பெற்ற கோடிக் கணக்கான மந்திரச் சுவடிகளை சிவ ஆராதனையுடன் சிவ அர்ப்பணம் செய்யும் விதத்தில் இந்தப் பேரணி நடைபெறவுள்ளது.

குடாநாட்டின் சகல பிரதேசங்களைச் சேர்ந்த ஆலயங்களில் இருந்தும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த ஆலயங்களில் இருந்தும் சிவ ஆராதனையுடன் 'ஓம் நமசிவாய' மந்திரத்தைத் தாங்கியவாறு வாகனங்களில் ஊர்வலம் நகரை வந்தடைந்து வண்ணை சிவன் ஆலயத்தில் உச்சிக்காலப்பூசையை நடத்தி பேரணியாக கே.கே.எஸ்.வீதியூடாக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடையும்.

யாழ்.மாவட்டத்தில் முதல் முறையாக நடத்தப்படும் இந்தச் சிவ பேரணியில் இந்துக் குருமார்கள், பாடசாலை மாணவர்கள் , சமூக நிறுவனங்கள், இந்து மக்கள் பங்கு பற்றி பேரணிக்கு வலுச் சேர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்தப் பேரணி எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்தப் படவிருந்தது. எனினும் பிரமாண்டமானளவில் பேரணியை நடத்த வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் பங்களிப்பு வழங்குவதால் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (வ-14)



## அங்கவீனர்களுக்கு செயற்கை அவயவம்

கிளிநொச்சி மாவட்ட அங்கவீனர்களுக்கான செயற் கைக் கால் பொருத்துதல் மற்றும் திருத்துதல் பணிகள் கடந்த மூன்று தினங்கள் கிளிநொச்சி கருணை இல்லத்தில் இடம்பெற்றன. கிளிநொச்சி மேத்தா நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட செயற் கைக் கால் பொருத்துதல், திருத்துதல் ஆகியனவற்றில் பளை, கண்டாவளை, பூநகரி, கரைச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 50 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## திறந்த வெளி அரங்கு நாளை திறப்பு

தென்மராட்சி, ஜன.14
தென்மராட்சி தெற்கு மறவன் புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் புதிதாக 15 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட திறந்த வெளி கலையரங்கு நாளை மறுதினம் புதன் கிழமை மாலை 4 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வித்தியாலய பழைய மாணவனும் நாவற்குழி கிராம சபை உறுப்பினருமான இளையப்பா சட்டநாதர் என்பவரால் அமைத்து வழங்கப்பட்ட கலையரங்கே இவ்விதம் திறந்து வைக்கப்படவுள்ளது.

வித்தியாலய அதிபர் யோ. ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் முதன்மை விருந்தினராகக்கலந்து கொண்டு புதிய கலையரங்கைத் திறந்து வைப்பார்.

போர்க் காலத்தில் முற்றாக அழிக்கப்பட்ட வித்தியாலய கட்டடங்கள் சுவிஸ் ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தினால் புனரமைத்து வழங்கப்பட்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக் கது. (ஒ-9)

# அத்துமீறிக் குடியிருக்கும் குடும்பத்தை வெளியேற்ற நீதிமன்றில் வழக்கு

*வலி.தென்மேற்கு பிரதேச சபை நடவடிக்கை*

வலி.தென்மேற்கு, ஜன.14
வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் இருந்து வெளியேற மறுப்பவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள பிரதேச சபை, நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் அமைப்பதற்காக பொது மக்களின் நிதி உதவியுடன் வாங்கப்பட்ட சிவன் கோயிலுக்குச் சொந்தமான காணியில் ஐந்து குடும்பங்கள் குடிசை அமைத்து வாழ்ந்து வந்தன.

தலைமைக் காரியாலயத்தை அமைப்பதற்கு வசதியாக, அந்தக் காணியில் வசித்து வந்த ஐந்து குடும்பங்களையும் பிரதேச சபையினால் வாங்கப்பட்ட கட்டுடையிலுள்ள காணியில் குடியமர்த்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட பிரதேச சபை, அவர்களுக்குக் குடிசைகள் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கியதுடன் குடிதண்ணீர், மலசல கூடம் போன்ற அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத் தது.

ஆனால் கட்டுடையில் வாங்கிக் கொடுக்கப்பட்ட காணியில் 4 குடும்பங்கள் குடிசைகள் அமைத்து வாழ்ந்து வருகின்றன. ஒரு குடும்பம் மட்டும் அங்கு போக மறுத்து தலைமைக் காரியாலயத்துக்குச் சொந்தமான காணியில் தொடர்ந்தும் வசித்து வருகின் றது.

இந்தக் குடும்பத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முன் வந்துள்ள பிரதேச சபை சட்டத் தரணியின் உதவியுடன் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவ டிக்கையை மேற் கொண்டுள்ளது. (ஒ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெஜ்ரிவாலுக்கு உயர் பாதுகாப்பு

## உத்தரப் பிரதேச பொலிஸார் முடிவு

புதுடில்லி. ஜன.14
தமக்குத் தனிப்பட்ட பாதுகாப்பு எவையும் தேவையில்லை என்று புதுடில்லியின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள அர்விந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ள போதும், அவருக்கு உயர் பாதுகாப்பு வழங்குவதற்குப் பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இதுகுறித்து உத்தரப்பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் தர்மேந்திர சிங் கூறுகையில்,

"அர்விந்த் கெஜ்ரிவாலுக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. அதன்படி அவருக்கு 30 மெய்பாதுகாவலர்கள் நியமிக்கப்படுவார்கள். புதுடில்லியில் அவர் தங்கியுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பின் பாதுகாப்புக்கு என 10 பாதுகாவலர்கள் பணியில் அம்த்தப்படுவார்கள். அதேபோன்று கெஜ்ரிவால் பயணம் மேற்கொள்ளும்போது பாதுகாப்புப் பிரிவின் இரு வாகனங்கள் அவருடன் பயணிக்கும். இவற்றை கெஜ்ரிவால் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இந்தப் பாதுகாப்புகள் அவருக்கு வழங்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, புதுடில்லி முதலமைச்சர் கெஜ்ரிவாலின் பாதுகாப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே, "கெஜ்ரிவால் பாதுகாப்பை மறுத்துள்ள போதும் அவருக்குத் தெரியாமலே அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)



சரத் பவார்

# பிரதமர் பதவிக்கான பந்தயத்தில் இல்லை

## சரத் பவார் திட்டவட்டம்

புதுடில்லி. ஜன.14
பிரதமர் பதவிக்கான பந்தயத்தில் நான் கலந்துகொள்ளவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் தேசியவாதக் காங்கிரஸ் தலைவரும், மத்திய விவசாய அமைச்சருமான சரத் பவார்.

மத்திய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே ஊடகவியலாளர்களுக்குக் கருத் துத் தெரிவிக்கும்போது, "சரத் பவார் பிரதமராகத் தெரிவானால் மகிழ்ச்சியடைவேன்" என்று தெரிவித்திருந்தார். அதுகுறித்து சரத் பவாரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

*பந்தயத்தில் நான் இல்லை*

இதுகுறித்து சரத்பவார் கூறுகை யில்,

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை. அதுகுறித்து திட்டவட்டமாக முடிவெடுத்து விட்டேன். அப்படியிருக்கும் போது நான் எப்படிப் பிரதமராக முடியும். பிரதமர் பதவிக்கான ஓட்டப் பந்தயத்தில் நான் கலந்துகொள்ளப்போவதில்லை." என்று தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தி அறிவிக்கப்படவுள்ள நிலையில் சுஷில்குமார் ஷிண்டே தெரிவித்திருந்த கருத்து காங்கிரஸ் வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

*ஷிண்டே விளக்கம்*

அதேவேளை, தாம் கூறிய கருத்துத் தொடர்பில் விளக்கமளித்திருந்த சுஷில்குமார் ஷிண்டே, "சரத் பவார் பிரதமராகத் தெரிவானால் நீங் கள் ஏற்றுக் கொள்வீர்களா?" என்று தம்மிடம் கேட்கப்பட்ட போதே "சரத் பவார் பிரதமராகத் தெரிவானால் மகிழ்ச்சியடைவேன் என்று தெரிவித்திருந்தேன்" என்று கூறியிருந்தார். (ற)

# போலியோ இல்லாத இந்தியா

நியூயோர்க். ஜன.14
கடந்த மூன்று ஆண்டுகளாக எந்தக் குழந்தைக்கும் போலியோ நோய் தாக்காததை அடுத்து போலியோ இல்லாத நாடாக இந்தியாவை உலக சுகாதார அமைப்பு அறிவிக்க உள்ளது. இந்தியாவில் 2011ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் திகதியே ஒரு குழந்தைக்கு போலியோ பாதிப்பு ஏற்பட்டது என்று பதிவாகியுள்ளது. அதன்பின்னர் கடந்த 3 ஆண்டுகளில் எந்தக் குழந்தைக்கும் போலியோ பாதிப்பு ஏற்படவில்லை. ஒரு நாட்டில் 3 ஆண்டுகள் போலியோ பாதிப்பு இல்லை எனில் அந்த நாட்டை போலியோ இல்லாத நாடாக உலக சுகாதார அமைப்பு அறிவிக்கும். (ற)

# நவீனப்படுத்தப்படும் இந்திய இராணுவம்

புதுடில்லி. ஜன.14
இந்திய மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளபோதும் இந்திய இராணுவத்தை நவீனமயமாக்கும் பணி தொடர்ந்து நடைபெறுகின்றது.

2013-2014ஆம் ஆண்டு பாதுகாப்பு துறைக்காக ஒதுக்கப்பட்ட 2.3 லட்சம் கோடி ரூபா நிதியில், இராணுவத்தை நவீனமயமாக்கும் பணிக்காக இதுவரை 82 சதவீத தொகை செலவிடப்பட்டிருக்கிறது. எஞ்சிய தொகையும், இன்னும் ஓரிரு வாரங்களில் செலவிடப்பட்டு விடும் என்று பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை செலவிடப்பட்ட நிதியைக் கொண்டு, பத்து சி-17 கனரக விமானங்கள், 12 சரக்கு போக்குவரத்து விமானங்கள், 12 நீர்மூழ்கி எதிர்ப்பு போர் விமானங்கள், அகுலா 2 நீர்மூழ்கி கப்பல், சூ-30 எம்.கே.ஐ. விமானம் ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. (ற)

# கனிமொழி மீது வழக்கு

புதுடில்லி. ஜன.14
2 'ஜி' வழக்குத் தொடர்பாக தி.மு.க. சட்டசபை உறுப்பினர் கனிமொழி மீது பணமோசடி வழக்கு பதிவு செய்யுமாறு இந்திய சட்டமா அதிபர் மோகன் பராசரண் உத்தரவிட்டுள்ளார். அதனையடுத்து சட்ட நடைமுறைப்படுத்தல் பிரிவு கனிமொழி மீது பண மோசடி வழக்கு பதிவு செய்துள்ளது. 2013ஆம் ஆண்டு ஜூலை மாதம், கலைஞர் தொலைக்காட்சிக்கு ரூபா 200 கோடி அளித்த விவகாரம் தொடர்பாகவே பண மோசடி சட்டப் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உக்ரைனில் போராட்டம்

உக்ரைனில் மீண்டும் மக்கள் போராட்டங்களில் இறங்கியுள்ளனர். உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைய வேண்டும் என்று கோரி அந்த நாட்டு மக்கள் போராட்டங்களை நடத்திவருகின்றனர். சற்று ஓய்ந்திருந்த அந்தப் போராட்டங்கள் மீண்டும் வலுப் பெற ஆரம்பித்துள்ளன. உக்ரைன் அரசு மீது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பொருளாதாரத் தடை விதிக்க போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

## பியூட்டோ ரிக்காவில் நிலநடுக்கம்

நியூயோர்க். ஜன.14
பியூட்டோ ரிக்காவின் வட கிழக்கு கடற்கரைப் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் 6.5 ஆகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தால் அந்தப் பகுதியில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் சேத விவரங்கள் குறித்த விரிவான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ற)

## ஜேர்மனியிடம் மன்னிப்பு கேட்டது கூகுள்

நியூயோர்க். ஜன.14
கூகுள் நிறுவனம் தனது இணைய வரைபடத்தில் சேவைகள் மூலம் தவறாக ஹிட்லர் பெயரை பயன்படுத்தியதை அடுத்து ஜேர்மனி அரசிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டுள்ளது. பல்வேறு வசதிகளை அளித்து வரும் கூகுள். நாட்டின் வரைப்பட சேவைகளையும் வழங்கியுள்ளது. அந்த வரைபடத்தில் தியோடர் ஹியூஸ் பிளாட்ஸ் என்பதற்கு பதிலாக, அடால்ப் ஹிட்லர் பிளாட்ச் என்று குறிப்பிட்டு விட்டது. அதனை தொடர்ந்து கூகுள் நிறுவனம் ஜேர்மனி அரசிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டுள்ளது. (ற)

# தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளித்தார் பர்வேஷ் முஷாரப்


### *அமெரிக்க முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் குற்றச்சாட்டு*

**தீவிரவாத அமைப்புகளுடன் முஷாரப் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு, ஆப்கனில் அவர்கள் மீண்டும் தலையெடுப்பதற்கு வழிவகுத்தார்.**

வொஷிங்டன். ஜன.14
பாகிஸ்தானின் ஜனாதிபதியாக பர்வேஷ் முஷாரப் பதவி வகித்த போது அல்-குவைதா மற்றும் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மறுத்தார் என்று கூறியுள்ளார் அமெரிக்க முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரொபேர்ட் கேட்ஸ்.
2006ஆம் ஆண்டு டிசெம்பர் முதல் 2011 ஆம் ஆண்டு ஜூலை வரை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சராகஇருந்தவர்ரோபேர்ட் கேட்ஸ். அவர் "கடமை: போரில் ஒரு அமைச்சரின் நினைவுகள்' என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதி வருகிறார். அந்தப் புத்தகத்திலேயே மேற்கண்ட தகவலை அவர் தெரிவித்துள்ளார்.
அந்த நூலில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.
"பர்வேஷ் முஷாரப் தனது ஆட்சிக் காலத்தில் அல்-குவைதா அமைப்புக்கும், தலிபான் அமைப்புக்கும் எதிரான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்தார். அந்த அமைப்புகளுக்கு ஆதரவளித்தார். அந்த தீவிரவாத அமைப்புகளுடன் முஷாரப் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு. ஆப்கனில் அவர்கள் மீண்டும் தலையெடுப்பதற்கு வழிவகுத்தார்.
2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பை நான் தனிப்பட்ட முறையில் சந்தித்து தீவிரவாதிகளின் பட்டியல் ஒன்றைக் கொடுத்து அவர்களைப் பிடித்துத் தரும்படி வேண்டுகோள் விடுத்தேன். அந்தப் பட்டியலில் குறிப்பாக 3 தலிபான் தீவிரவாதிகள் பெயரும் தீவிரவாத அமைப்புகளின் தலைவர்கள் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தன.
ஆனால், அது தொடர்பாக முஷாரப் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேசமயம் நடவடிக்கை எடுப்பதுபோல பாசாங்கு செய்தார்' என்றுள்ளது. (ற)

## விமான விபத்தில் 4 பேர் சாவு

### *ஜேர்மனியில் சம்பவம்*



பெர்லின். ஜன.14
ஜேர்மனியில் சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.
பிரிட்டனில் இருந்து ஜேர்மனி நோக்கிப் பயணித்த அந்த விமானத்தில் இரு விமானிகளும், இருபயணிகளும்பயணித்துள்ளனர் விமானம் ஜேர்மனியின் டிரியர் நகர் அருகே பறந்கொண்டிருந்தபோது கடும் பனிமூட்டம் காரணமாக கட்டுப்பாட்டை இழந்து வீழ்ந்து நொருங்கியுள்ளது.
விபத்தில் விமானத்தில் பயணித்த அனைவரும் உயிரிழந்துள்ளனர்.
விபத்துக்குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# கடன் கொடுப்பதற்கு உதவும் 'பேஸ்புக்'

நியூயோர்க். ஜன.14
கடன் கேட்டு விண்ணப்பிப்பவர்களின் சமூக வலைத்தளங்களை ஆய்வு செய்தபின் கடன் வழங்குவதற்கு முடிவு செய்துள்ளன அமெரிக்க மற்றும் பிரிட்டன் வங்கிகள்.
அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் உள்ள சிறிய நிதி நிறுவனங்கள், தங்களிடம் கடன் கேட்டு விண்ணப்பிப்பவர்களின் பேஸ்புக். டுவிற்றர் வலைத்தளங்களிலுள்ள கணக்குகளில். சுய விவரத்தில் கூறப்பட்ட தகவல்களுடன் ஒப்பிட்டு. அவர்களுக்கு கடன் வழங்கலாமா என்பது குறித்து முடிவு செய்கின்றன. தற்போது பெரிய நிதி நிறுவனங்களும், வங்கிகளும் இந்த முறையை பின்பற்ற ஆரம்பித்துள்ளது.
வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் இந்த அணுகுமுறைக்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். பெரும்பாலான வாடிக்கையாளர்கள். சமூக வலைத்தளங்களில் தங்களுடைய சுய விவரங்களை புதுப்பிப்பதில்லை. எனவே அவர்கள் பணிமாற்றம் செய்து இருந்தாலோ அல்லது பணியில்லாமல் இருந்தாலோ வங்கிகளுக்கு தெரியாது.
வாடிக்கையாளரின் பெயரில். போலி கணக்கு தொடங்கப்பட்டு இருந்தாலோ அல்லது பொய்யான தகவல்களை அளித்திருந்தாலோ கடன் பெறுவதில் சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதன் காரணமாக வாடிக்கையாளர்கள் வங்கிகளின் புதிய அணுகுமுறைக்கு அதிருப்தி தெரிவித்துள்ளனர். (ற)

# சிரியாவில் மோட்டார் தாக்குதல்: 19 பேர் சாவு

அலப்போ. ஜன.14
சிரியாவின் மத்திய பகுதியில் நடத்தப்பட்ட மோட்டார் குண்டுத் தாக்குதலில் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.
சிரியாவில் 2011ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் இலட்சக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். அங்கு அமைதியை நிலைநாட்டும் பொருட்டு ஐ.நா. அமைதிப் பேச்சுக்களில் ஏற்பாடு செய்துள்ளது. எனினும் அங்கு தொடர்ந்து நடைபெறும் மோதல்களால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
இந்த நிலையில் மத்திய சிரியாவில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஹாம்ஸ் பிராந்தியத்தில் உள்ள கோடா மற்றும் காம்-அல்-ஷமி பகுதிகளில் மோட்டார் குண்டுகளை வீசி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். அதில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.(ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் தின நிகழ்வுகள்

இளங்கலைஞர் மன்றம் நடத்தும் பொங்கல் தினச் சிறப்புக் கலையரங்கு இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணிக்கு இளம் கலை ஞர்மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலை நிகழ்வுகளில் வாய்ப்பாட்டிசை, இசை யரங்கு, நாட்டிய நாடகம் என்பன நடைபெற வுள்ளன. (ந)

◆ ◆ ◆

கிளிநொச்சி மலையாளபுரம் கற்பகபுரி ஸ்ரீ கற்பக முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 1008 பானைகளில் பொங்கல் விழாவும், 1008 சங்காபி ஷேகமும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விஷேட பூசை நடைபெற்று சுவாமி வீதி உலா வரு வ்துடன் தொடர்ந்து பரிசளிப்பு விழாவும் நடை பெறும். (ந)

◆ ◆ ◆

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 'யாழ். சேவை'பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தைப் பொங்கல் விழா இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சுன்னாகம் வாழ்வக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். சேவையின் கட்டுப்பாட்டாளர் திரு. வீர சேன ஹினிதுமவின் தலைமையில் நடை பெறும். இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். (ஒ)

◆ ◆ ◆

வலி.மேற்கு தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் பொங்கல் விழாவும் சக்தி முன்பள்ளியின் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை மாலை 6 மணிக்கு சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெறும்.

நிலையத் தலைவர் சி.சதீஸ்வரன் தலைமை யில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந் தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங் கன் கலந்துகொள்வார்.

நிகழ்வில் 'மனிதன் மரணிக்கின்றான்" என்னும் தலைப்பிலான கவியரங்கும், வில்லிசை மற் றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-9)

## கெற்பேலிப் பகுதி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

தென்மராட்சி, ஜன.14

தென்மராட்சி கிழக்கு கெற்பேலிப் பகுதி மாண வர்களுக்கு இலவசமாக கற்றல் உபகரணங் கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கெற் பேலி தரவையம்பதி நாச்சிமார் ஆலய மண் டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகர ணங்களை வழங்கினார். (ஒ-9)

# ஒட்டுசுட்டானில் தனியானதொரு பிரதேச சபை அமைக்க வேண்டும்

### *மாகாண சபை உறுப்பினரிடம் கோரிக்கை*

புதுக்குடியிருப்பு, ஜன.14

புதுக்குடியிருப்பு பிரதேச சபையை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை மாகாண சபை உறுப்பினரிடம் விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 46 கிராம அலுவ லர் பிரிவுகளைக் கொண்ட புதுக்குடியிருப்பு பிர தேச சபையை இரு பிரதேச சபைகளாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் விடுக் கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 27 கிராம அலுவலர் பிரிவுகளையும். புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள் ளடக்கியதாக சுமார் 968 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை உள்ளடக்கியதாக புதுக்குடியிருப்பு பிரதேசசபை பிரதேசம் அமைந்துள்ளது.

இந்த நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை யின் உப அலுவலகம் ஒட்டுசுட்டானில் இயங்கி வருகின்றது. இந்த நிலையில் புதுக் குடியிருப்பு பிரதேச சபையை இரண்டாகப் பிரித்து ஒட்டு சுட்டானில் தனியானதொரு பிரதேச சபையை அமைக்க வேண்டுமென மாகாண சபை உறுப் பினர் வீ.கனகசுந்தர சுவாமியிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)

# குருநகர் செபஸ்தியார் ஆலயத் திருவிழா

குருநகர், ஜன.14

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திரு விழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு செபமாலை வழிபாட்டைத் தொடர்ந்து 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள் ளது. நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு செபமாலை வழிபாட்டைத் தொடர்ந்து திருப் பலி நடைபெறும்.

தொடர்ந்து நாளாந்தம் மாலை வழிபாடுகள் நடைபெற்று எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை நாதர் விழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப் பலியும் நடைபெறும். அன்று மாலை 5.30 மணிக்கு புனிதரின் திருச்சொரூபப் பவனியும் புனிதரின் திருச்சொரூப ஆசீரும் வழங்கப்படும் என்று யாழ். மரி யன்னை பேராலயத் தின் பங்குத் தந்தை வண.பிதா ஆர்.எச். சகாயநாயகம் அடிக ளார் அறிவித்துள் ளார். (ஒ-51)

## சாவகச்சேரி சிவன் ஆலயத்தில் இன்று தேர்

தென்மராட்சி,ஜன.14

சாவகச்சேரி வாரியப்பர் சிவன் ஆலய பெரும் திருவிழாவின் தேர்த் திருவிழா தைப்பொங்கல் தினமான இன்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும்.

நாளை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். ஆலயத்துக்கு புதிதாக நிர்மாணிக் கப்படவுள்ள சித்திரத் தேருக்கான கால்கோள் விழாவும் இடம்பெறும். (ஒ-9)

## சமய சந்நிதி

அளவெட்டி.ஜன.14

அளவெட்டி கும்பிழா வளைப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று அதிகாலை 4 மணிக்கு சங்கிராந்தித் தீர்த்த உற்சவமும் விசேட பூசைகளுடன் அபி ஷேக ஆராதனை கள் நடைபெற்று சுவாமி வீதி உலாவருவார். பிற்பகல் 3 மணிக்கு கொண்டலடி வைர வர் பொங்கல் இடம்பெற்று விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும். (ந-36)

## நாடகப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தில் நாடகப் பயிற்சி நெறியில் புதிய பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

நாடகமும் அரங்கியலும் தொடர்பான அனைத் துப் பரிமாணங்களையும் உள்ளடக்கிய இந்தப் பயிற்சி நெறிக்கு 16 வயதுக்கு மேற்பட்ட நாடகக் கலையில் ஆர்வம் உடையவர்கள் விண்ணப் பிக்கலாம்.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 25 ஆம் திக திக்கு முன்னதாக பிரதி இயக்குநர், திரு மறைக் கலா மான்றம், 238, பிரதான வீதி, யாழ்ப் பாணம் என்ற முகவரிக்கு விண் ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். (ந-14)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஜன.14

"நனோ தொழில் நுட் பம் மற்றும் வானவி யலும் இயற்கை விஞ் ஞானமும்" பற்றிய இரு கலந் துரை யாடல்களை யாழ்.முகாமையாளர் சம்மேளனம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யூரோ வில் மாநாட்டு மண்ட பத்தில் நடத்தப்படவுள் ளது. இந்தக் கலந்து ரையாடலில் சிறப்பு பேச்சாளர்களாக பொறி யியலாளர் இ.தேவ மாறன் மற்றும் எஸ். தவராஜா ஆகியோர் கலந்து கொள்வார் கள். ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறி வித்துள்ளனர். (ஒ)

# அராலியில் உழவர் விழா

சங்கானை, ஜன.14

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் 'உழவர் விழா' இன்று செவ்வாய்க் கிழமை பி.ப. 12.30 மணிக்கு மேற்படி விளை யாட்டு மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, விளை யாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலரா சாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான த.சித்தார்த்தன், ச.அனந்தி, ச.சுகிர்தன், ப.கஜதீபன், யாழ்.பல் கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் க.சிற்றம்பலம் ஆகியோ ருடன் வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ந.நடனேந்திரன், ஓய்வுபெற்ற அதிபர் வீ.சிவ ஞானபோதம், வலிகாமம் லீக் தலைவர் நா.நவ ரட்ணராசாவுடன் சமுர்த்தி அலுவலர், கிராம அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொள்கின் றனர்.

இந்த நிகழ்வில் சிறுவர் நிகழ்ச்சி, சங்கீதக் கதிரை, மெதுவான சைக்கிள் ஓட்டம், கைக் கொடி மாட்டுச் சவாரி, உதைபந்தாட்டம், கயிறு இழுத்தல் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ-29)


**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்.சுண்டுக்குளி, நல்லூர், பிரதானவீதி, கச்சேரி, ஆகிய பிரதேசங்களில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 706 6000

**பொங்கல் வாழ்த்துக்கள்**



கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் எனது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

**பொருளியல் உதயன்**

(30 வருட சேவை கடந்த ஆசிரிய சேவை)

Economics Hall, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (41007)(7.6.3)



**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு**

வழங்குபவர்: இரா.இராஜேஸ்கண்ணன் (சிரேஷ்ட விரிவுரையாளர் சமூகவியற்துறை யாழ். பல்கலைக்கழகம்)

விடயம்: வட மாகாணத்தில் போருக்குப் பிந்திய சமூகப் போக்குகள்

காலம்: நாளை (15.01.2014) புதன்கிழமை

நேரம்: பி.ப. 3.30 மணி

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை : PC PARK, JAFFNA (42241) (4.6.3)

**தேவை**

கார்த்திகைக் காய்களின் பருவம் இது. நன்கு முற்றிய பச்சைக் காய்கள் தேவை.

தொடர்புக்கு: EK & CO 55/1, ஸ்ரீ மகிந்த தர்மமாவத்தை, கொழும்பு -00900 T.P:011267 707 7/011269 772 9 (41631)(4.6.3)

**வீடு வாடகைக்குண்டு**

No.9, மருதடி வீதியில் 3 படுக்கை அறையுடன் 2 குளியலறை, வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக் உண்டு.

தொடர்பு: 077 973 5893

**தவறவிடப்பட்டுள்ளது**

திருக்கேதீஸ்வர ஆலய சுற்றாடலில் 12.01.2014 ஞாயிற்றுக்கிழமை Sony கமரா தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத் தவர்கள் கீழ்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 771 6960 (43597)(4.6.3)

**E.S.S.MULTI PLUS**

கொம்பியூட்டர்கள்& போன்கள் ரிப்பெயரிங் மற்றும் கொம்பியூட்டர் / போன்கள் Parts for Sale பான்சி பொருள்களும் இங்கு கிடைக்கும்

தொடர்பு: 077 174 8751

587, Beach Road, Gurunakar, Jaffna.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பட்டமளிப்புவிழாவில் 11.01.2014 அன்று B.A (Hons) (Geography Spl) பட்டம் பெற்ற செல்வி செல்வராசா சிவகௌசி அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அம்மா, அண்ணா, அக்கா, தம்பி, சித்தி, மாமா

Best Wishes

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29ஆவது பட்டமளிப்புவிழாவில் B.SC (Hons) in Agriculture பட்டம்பெற்ற நாவலர் சனசமூக நிலையத் தலைவர்

**லோகநாதன் சஞ்ஜீவன்**

அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: நிர்வாகசபை நாவலர் சனசமூக நிலையம், சுதுமலை வடக்கு, ஈஞ்சடி, மானிப்பாய். (42242)(12.3.6)

**ஆச்சி பூட் சென்ரர்**



மற்றும்

**ஆச்சி Hot Food நிறுவனத்தினர்கள்**

தமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட சமையல் கலை நிபுணர்களினால் தரமாகவும் சுவையாகவும் தயாரிக்கப்பட்ட சைவ, அசைவ உணவுகளை உங்கள் வீடு தேடிக் கொண்டு வருகின்றோம். (யாழ்.மாநகரசபை எல்லைக்குள்)


திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் மற்றும் அனைத்து வைபவங்களுக்கும் சூடான சுவையான உணவு விநியோகிக்கப்படும்.

தயாரிப்பு: Aache Hot Food

Kaithady East, Kaithady 021 205 7455 (C/11003)(3.6.4)

இல.117, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2092, 077 329 4341


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



ரயில் நிலையத்தில் தேங்கி நிற்கும் வெள்ளநீர்

## ரயில் நிலைய வளாகத்தில் குளம் போன்று வெள்ளம்

அக்கராயன், ஜன.14

கிளிநொச்சி ரயில் நிலைய வளாகத்தில் குளம் போன்று மழை வெள்ளம் தேங்கி நிற்பதைக் காணமுடிகின்றது.

தினமும் பெருமளவு பயணிகள் வந்து செல்லும் இந்த இடத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படு வதற்கான வாய்ப்புக் காணப் படுகின்றது.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு தொடர்பான கூட்டத்தில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இதனால் பயன் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இயந்திரங்களைப் பயன்படுத்தி வேலைகள் இடம்பெற்ற பகுதிகளில் குழிகள் தோன்றியுள்ளதால் அங்கு மழை வெள்ளம் தேங்கிநிற்கும் நிலை கிளிநொச்சி நகரில் காணப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. (க-18)

## போதிய வசதிகள் இல்லாத திருவள்ளுவர் ஆரம்ப வித்தி.

முல்லைத்தீவு, ஜன.14

முல்லைத்தீவுமாவட்டம்மாந்தை கிழக்கிலுள்ள பாண்டியன் குளம் திருவள்ளுவர் ஆரம்ப வித்தியாலயம் போதிய அடிப்படைவசதிகள் இல்லாது இயங்கி வருவதால் இங்கு கல்வி கற்று வரும் 138 மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப் பட்டு வருகின்றனர்.

பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் கடந்த ஆண்டு ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து இந்தப் பாடசாலையின் தரம் 1 முதல் 5 வரையான வகுப்புக்களைக் கொண்டு பாண்டியன்குளம் திருவள்ளுவர் ஆரம்ப வித்தியாலயம் உருவாக்கப்பட்டது. இந்த நிலையில் மலசலகூட வசதி, குடிதண்ணீர் வசதி உள்ளிட்ட போதிய அடிப்படை வசதிகள் இங்கு இல்லாததால் இங்கு கல்வி கற்றுவரும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட நிலையில் காணப் படுகின்றது. (க-55)

## பழுதடைந்த சீனி மூடைகள் சோதனையில் சிக்கின

வவுனியா, ஜன.14

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சுந்தரபுரம் கிளையில் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட சீனி மூடைகளை சுகாதாரப் பரிசோதகர்கள் பறிமுதல் செய்துள்ளனர்.

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது;


பொங்கல் கால விற்பனைக்கென சுந்தரபுரம் கிளையால் சீனி தேவை என சங்கத்தின் தலைமையகத்துக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டது. இதையடுத்து பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் களஞ்சிய சாலையில் இருந்து கடந்த 7 ஆம் திகதி சுந்தரபுரம் கிளைக்கு 5 மூடை சீனி வழங்கப்பட்டது.

சீனி இறக்கப்பட்டு இரண்டு நாள்களின் பின்னர் சுந்தரபுரம் சங்கக் கிளைக்கு பரிசோதனைக்காக சென்ற பொது சுகாதார பரிசோதகர்கள் அங்கு உடைக்கப் படாத நிலையில் இருந்த 5 மூடை சீனியும் பழுதடைந்த நிலையில் உள்ளதைக் கண்டு பிடித்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா நகர மேற்பார்வை பொது சுகாதாரப்பரிசோதகரிடம்கேட்ட போது, "இவ்வாறான தொரு சம் பவம் இடம்பெற்றுள்ளமை உண்மைதான்" என்று தெரி வித்தார்.

இதேவேளை, வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளரிடம் கேட்டபோது; சீனி மூடைகள் சமாசத்திடம் இருந்தே கொள்வனவு செய்யப்பட்டதாகவும் சீனி பழுதடைந்துள்ளதா என்பதைப் பரிசோதிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (க-402)

# அடிப்படை வசதிகளின்றி அந்தோனியார் கிராமம்



துணுக்காய், ஜன.14

மன்னார் மாவட்டம் இலுப்பைக் கடவைப் பிரதேசத்தில் உள்ள அந்தோனியார்புரம் கிராமத்தில் வாழும் சுமார் 165 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் அவல வாழ்வு வாழ்வதைக் காண முடிகின்றது.

*மீளக் குடியமர்ந்து 3 ஆண்டுகள்*

இந்த மக்கள் மீளக்குடியமர்ந்து 3 வருடங்கள் கடந்த நிலையிலும் நிரந்தர வீடுகள் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது. மேலும் தொழில் வாய்ப்பு இல்லாத நிலையில் பெரும் பொருளாதாரக் கஷ்டத்தையும் இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் அனுபவிக்கின்றனர்.

இங்கு வாழும் 165 குடும்பங்களும் மீளக்குடியமர்ந்த போது தற்காலிக தகர கொட்டகைகளையும், மலசலகூடங்களையும் 'சோஆ' நிறுவனம் வழங்கியது. கடற்றொழிலை மேற்கொண்டு வரும் இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் கூட ஆற்று வாய்க்கால் பகுதிகளில் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது.

சந்தை மற்றும் வைத்திய சாலை வசதிகளுக்காக இங்குள்ள மக்கள் நீண்ட தூரத்திலுள்ள விடத்தல்தீவு அல்லது மன்னார் பகுதிகளுக்குச் சென்று வருகின்றனர்.

*குடிதண்ணீரை தேடி அலையும் மக்கள்*

மேலும் குடிதண்ணீர் வசதிகளும் இந்தக் கிராமத்தில் ஏற்படுத்தப்படாமையால் நீண்ட தூரம் சென்று இதனைப் பெற வேண்டிய நிலையிலும் மக்கள் உள்ளனர். இங்கு மின்சார வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை. உள்ளூர் வீதிகள் புனரமைக்கப்படாமையாலும் மக்கள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். (க-415)

## மாணவரை வரவேற்கும் கால்கோள் விழா

வவுனியா, ஜன.14

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம்-1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா நாளை மறுதினம் 16ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் ம.ச.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா கலந்து கொள்வார்.

ஐயாத்துரை மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வின்போது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதுடன் 'மகரந்தம்' என்ற சஞ்சிகையின் வெளியீடும் இடம் பெறும். இந்த சஞ்சிகையின் முதற் பிரதியை பிரதம விருந்தினரான சி.சத்தியசீலன் பெற்றுக் கொள்வார். (க-402)


நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும்
பொங்கல் தினச் சிறப்புக் கலையரங்கு

இடம் : இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபம்
காலம் : இன்று (14.01.2014) செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 4.30 மணி மாணவர்களின் வாய்ப்பாட்டிசை
பிற்பகல் 5.00 மணி சிறப்பு இசையரங்கம்



இலங்கையின் மூத்த இசைமேதையும்,
பிரபல பாடகியுமான
இன்னிசை வேந்தர், கலாபூஷணம்,
இசைக்குயில் திருமதி சத்தியபாமா இராஜலிங்கம்
அவர்களின் புதல்வியும், மாணவியுமான
திருமதி கிருஷ்ணப்பிரியா ஆனந்தராஜன்
அவர்களின்

இசையரங்கம்

அமெரிக்காவில் வசித்து வரும் இவர் தனது 15ஆவது வயதில் அரங்கேற்றம் கண்டு இன்று வரை பல நாடுகளில் இசைக் கச்சேரிகள் நிகழ்த்தி வருகின்றார். குறிப்பாக வருடா வருடம் சென்னையில் நடைபெறும் இசை விழாவில் இசைக் கச்சேரி நிகழ்த்தி வருகின்றார். இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக அமெரிக்காவில் YCMA, USA என்ற இசைமன்றத்தை நிறுவி கடந்த 10 வருடங்களாக கர்நாடக இசை வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகின்றார். சென்னையில் பாரம்பரிய இசைச் சங்கம் என்ற அமைப்பில் அறங்காவலர் சபை உறுப்பினராக இருந்து வருகின்றார்.

அணிசேர் கலைஞர்கள் :-
வயலின் : நுண்கலைமாணி சு.கோபிதாஸ்
மிருதங்கம் : தன்னுமைவேந்தன் மா.சிதம்பரநாதன்
கடம் : இளஞ்சுடர் செல்வன் ஞானவேல் வசந்
கெஞ்சிரா : கலாவித்தகர் ந.நந்தகுமார்

பிற்பகல் 6.30 மணி கலைவாரிதி செல்வி சி.பேரின்பநாயகி அவர்களின்
வடமராட்சி குருஷேத்திரம் நாட்டியப் பள்ளி மாணவர்கள் வழங்கும்


"நிருத்தியார்ப்பணம்"

கலை ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

– மன்ற நிர்வாகத்தினர்.

(42735)(7-3-3)


## வெள்ள அபாயத்தில் 7 குடும்பங்கள்



அக்கராயன், ஜன.14

கிளிநொச்சிக் குளத்தின் வான் வெள்ளம் பாய்ந்து செல்லும் பகுதியில் வெள்ள அபாயத்துக்கு மத்தியில் ஏழு குடும்பங்கள் வசித்து வருகின்றன.

கிளிநொச்சி நகரில் தமக்கு நிரந்தரக் காணி வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ள இந்தக் குடும்பங்கள் மழை வெள்ளத்தினால் ஏற்படும் அபாயத்தை எதிர்கொண்டு வருகின்றன.

இந்தக் குடும்பங்களின் நிலை தொடர்பாக கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரனிடம் கேட்டபோது; மேற்படி குடும்பங்களுக்கு அறிவியல் நகரில் காணி வழங்குவதாகக் கூறிய போதிலும், அதை ஏற்க மறுத்து தற்போதைய இடத்தில் இருந்து வெளியேறுவதற்கு மறுத்து வருகின்றன. தமது இறுதிக் காலம் வரை இந்த இடத்தில் வாழப் போவதாகவும் இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்- என்றார்.

கிளிநொச்சிக் குளத்தின் வான் பகுதியில் அமைந்துள்ள மேட்டான பகுதியில் இந்தக் குடும்பங்கள் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)


உதயன் விளம்பரங்களுக்கு
021 567 1111
என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்

KANDY HOMES
& Construction




(42124)

81. Pallaly Road,
Illupaiyadi Junction,
Jaffna.

T.P :- 0777462889
0777463469
0217917623

Email :- kandyhomes11@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தைப்பொங்கலை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் உள்ள புடைவை விற்பனை நிலையங்களில் மக்கள் புத்தாடைகளைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

# களை கட்டியது தைப்பொங்கல்

## திருமலையில் அங்காடி வியாபாரமும் அதிகரிப்பு

திருகோணமலை.ஜன.14
திருகோணமலை மாவட்டத்தில் தைப் பொங்கல் களை கட்டியுள்ளது.
தைப்பொங்கலையொட்டி திருகோணமலை மாவட்டத்தின் புறநகர்ப் பகுதிகளில் இருந்து வருபவர்களின் தொகை அதிகரித்துள்ளது.
தைப்பொங்கலுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டி வரு கின்றனர். பானை, கரும்பு, ஆடைகள் முதலானவற்றைப் பெரும்பாலானோர் கொள்வனவு செய்து வருகின்றனர்.
திருகோணமலையின் வட கரை வீதி, பிரதான வீதிகளில் மக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.
தென்பகுதியில் இருந்து வருகை தந்துள்ள அங்காடி வியாபாரிகளின் வியாபாரங்களும் அதிகரித்துள்ளதுடன் மக்களின் வருமானத்துக்கு ஏற்றவகையில் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர். (ச)

# அதிபர்களுக்கு இடமாற்றம்

அம்பாறை.ஜன.14
கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் பிரதி அதிபர்களாகக் கடமையாற்றி வருகின்ற அதிபர் சேவை தரத்தில் உள்ள ஆறு பேர் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.
உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலரினால் அவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.
இதன் பிரகாரம் றிபா ஹுசைன் மருதமுனை ஸம்ஸ் கல்லூரிக்கும், அமீரா லியாக்கத் அலி மாளிகைக்காடு சபீனா வித்தியாலயத்துக்கும், திருமதி பனூன் ஏ.கரீம் சாய்ந்தமருது மல்ஹருஸ் சம்ஸ் மகா வித்தியாலயத்துக்கும் , ஏ.எம்.றஃமான் இஸ்லாமா பாத் வித்தியாலயத்துக்கும், எம்.சாதிக் மருதமுனை அக்பர் வித்தியா லயத்துக்கும் ,அஸ்மி காரியப்பர் நிந்தவூர் அல்பத் றியா வித்தியாலயத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ச)

# தமிழர் உரிமையைப் பெற இணைந்து போராடுங்கள்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் வேண்டுகோள்

மட்டக்களப்பு.ஜன.14
தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறவேண்டியதன் தேவை கருதி நாங்கள் அரசுக்கு எதிராக எமது சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கு ஒற்றுமையாக போராட வேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா) வேண்டுகோள் விடுத்துள்ளார்.
தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) இளைஞர் அணி மட்டக்களப்பில் உருவாக்கப்படவுள்ளது என்று வெளியான தகவல்கள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு



தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழீழ விடுதலை இயக்கத்தின் பல உறுப்பினர்களும், இயக்கத்தில் இணைந்துகொள்ள ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியை உருவாக்குமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளேன்.
எனினும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணியே இன்றைய காலத்தில் தேவை என்ற அடிப்படையில், கூட்டமைப்பின் இளைஞர் அணியை விரைவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கவுள்ளேன். இதில் இணைந்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளைப் பெற அரசியல் ரீதியாகப் போராடவிரும்பும் இளைஞர், யுவதிகள் தொடர்பு கொள்ளமுடியும்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணியை உருவாக்க ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.
தனிப்பட்ட கட்சி ரீதியான அரசியல் செய்யாது தமிழ் மக்களுக்கு தற்கால ஓட்டத்துக்கு ஏற்ப நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து அரசியல் ரீதியாக குரல் கொடுக்க வேண்டும்.
தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறவேண்டியதன் தேவை கருதி நாங்கள் ஒன்றாக அரசுக்கு எதிராக எமது சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கு ஒற்றுமையாகப் -போராட வேண்டும் - என்றார். (ச)

# பொங்கலையொட்டி கவியரங்கம் இன்று

திருகோணமலை.ஜன.14
தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு 'தைமகள் சிரித்து வந்தாள்' என்ற தலைப்பில் சிறப்பு கவியரங்கம் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கிண்ணியா- ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
தாமரைதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கவியரங்கில் கலாபூஷணம் ஏ.எம்.எம்.அலி, கலாநிதி கே.எம்.எம். இக்பால், கலாபூஷணம் பி.ரீ. அஸீஸ் உட்பட பலர் கலந்து கொள்வர்.
இந்த நிகழ்வில் கலை, கலாசார நிகழ்சிகளும் இடம்பெறவுள்ளன. (ச)

# முஸ்லிமை நியமிப்பதை நாம் எதிர்க்கவில்லை

## தவறாக விளங்க வேண்டாம் என்கின்றனர் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள்

மட்டக்களப்பு.ஜன.14
கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக முஸ்லிம் ஒரு வரை நியமிப்பதை நாம் எதிர்க்க வில்லை. ஆனால் அந்த அமைச் சில் வேறு ஒரு இனத்தைச் சேர்ந்த அதிகாரி இருக்க வேண்டும் என்றே கோரினோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.
மட்டக்களப்பு சபராஜ் இன் ஹொட்டலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடக வியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
இத தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபை உறுப்பி

> "-"
>
> கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சில் முஸ்லிம் அதிகாரிகளே அதிகளவில் உள்ளனர்.

னர்கள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக முஸ் லிம் அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டாம் என்று கோர வில்லை. அதனை நாம் கிழக்கு ஆளுநருக்கு வழங்கிய கடிதத்தில் தெளிவாகக் குறிப் பிட்டிருந்தோம். அரசில் முஸ்லிம் ஒருவர் உள்ளூராட்சி அமைச்சராக இருப்பதுடன் அமைச்சின் செயலர் முதல் முக்கிய அதிகாரிகள் முஸ் லிம்களாகவும் சிங்களவர்களாகவும் உள்ளனர்.
இதேவேளை, கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சர், உள்ளூராட்சி அமைச்சர், அமைச்சின் செயலர் உட்பட அனைத்து உயர் அதிகாரிகளும் முஸ்லிம்களாக உள்ளனர்.
கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சில் முஸ்லிம் அதிகாரிகளாக உள்ளார்கள். அதனால் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மாத்திரம் தான் வேறு ஓர் இனத் தவராக இருந்த நிலையில் அந் தப் பதவிக்கும் முஸ்லிம் ஒருவரை நியமிக்காது மற்றைய இனத்தில் இருந்து ஒருவரை நியமிக்குமாறே கோரியிருந் தோம்.
எமது நோக்கம் முஸ்லிம் அதிகாரி ஒருவரை நியமிப்பதை எதிர்ப்பதல்ல. அந்த அமைச்சின் கீழ் உள்ளூர்அதிகாரியாவது ஏனைய இனத்தவராக இருக்க வேண்டும். இதனை பிழையாக முஸ்லிம் மக்கள் கருதக் கூடாது - என்றனர். (ச)

# முதல்வரின் முன்மாதிரியான தைப்பொங்கல் ஒன்றுகூடல்



அம்பாறை.ஜன.14
கல்முனை மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பரின் ஏற்பாட்டில், முன்மாதிரியான தைப்பொங்கல் ஒன்றுகூடல் நடைபெற்றது.
கல்முனை மாநகர சபையில் கடமையாற்றும் நூற்றுக்கு மேற்பட்ட சுகாதாரத் தொழிலாளர்களை அவர்களது மனைவி, பிள்ளைகள் சகிதம் அழைத்து இந்த தைப்பொங்கல் ஒன்றுகூடலை அவர் நடத்தினார்.
இந்த ஒன்றுகூடல் கல்முனை இருதயநாதர் வரவேற்பு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.
இந்த ஒன்றுகூடலுக்கு முதல்வர் நிஸாம் காரியப்பர் தனது துணைவியார் ஜனாபா மிஸ்றியா நிஸாம் காரியப்பர் சகிதம் வருகை தந்தமை தொழிலாளர்களை மகிழ்வுக்குள்ளாக்கியது.
இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் கல்முனை மாநகர முதல்வர் நிஸாம் காரியப்பர் தொழிலாளர் குடும்பத்தினருக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கினார். இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் முஸ்லிம்க ாங்கிரஸ் உறுப்பினர் ஏ.எம்.பறக்கத்துல்லா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான கமலதாஸன், ஜெயக்குமார், அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் போராளிகளுக்கு வெளிநாட்டில் தொழில் வாய்ப்பு

கொழும்பு.ஜன.14
புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களைத் தொழில் வாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
முதல் கட்டத்தில் 20 முன்னாள் போராளிகளுக்கு வெளிநாடுகளில் தொழில்கள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது என்று புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜகத் விஜேதிலக்க தெரிவித்தார்.
அதற்கமைய அவர்கள் சிங்கப்பூர் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட வுள்ளனர் என்று அவர் கூறினார்.
இந்த முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குத் தொழில் பயிற்சிகளுடன் வெளிநாட்டு மொழிகள் தொடர்பான தெளிவூட்டல்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



*முன்னாள் அமைச்சர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருனிகா இணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டமைக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வழங்கினார்.*

## சுதந்திர கட்சியில் ஹருனிகா

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு இணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ஹிருனிகா பிரேமசந்திர மேல்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தெரியவருகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடைபெற்ற விசேட கலந்துரையாடலையடுத்தே அவருக்கு சுதந்திரக் கட்சியின் இணை அமைப்பாளர் பதவி நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது, சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திர வின் புதல்வியான ஹிருனிகா, ஐ.தே.க வில் இணையவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே அவருக்கு சுதந்திரக் கட்சியில் முக்கிய பதவி வழங்கப்பட்டுள்ளது. (ச)

## நுகர்வோர் சட்டத்தை மீறியோர் மாட்டினர்

கொழும்பு.ஜன.14
நுகர்வோர் சட்டத்தை மீறும் வகையில் பொருள்களை விற்பனை செய்த 16 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டனர் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.
கடந்த இரண்டு நாள்களாக கம்பஹா மற்றும் றாகம ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அதிகார சபையின் கம்பஹா மாவட்ட அதிகாரி ரஞ்சித் வீரவர்த்தன கூறினார்.
கூடுதல் விலையில் குளிர்பானம் விற்பனை செய்தமை, விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தாமை, காலாவதியான பொருள்களை விற்பன்னை செய்தமை, விலை மாற்றம் செய்தமை போன்ற குற்றச்சாட்டுகளின்கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார். இந்த வர்த்தகர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ச)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு

கொழும்பு. ஜன.14
மாத்தறை, தும்மோதர, துடாவ பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் செல்கையில் பிரதேசவாசிகளால் சந்தேகநபர் ஒருவர் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.
சந்தேகநபர், கடுவெல, பன்னிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இந்நபரிடமிருந்து துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் 5 பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
பணப் பிரச்சினை காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் முதற்கட்ட விசார ணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.
கடுவெல, பன்னிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தநபரே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# 17ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துக

### *ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை*



கொழும்பு.ஜன.14
17ஆம்திருத்தத்தைநடைமுறைப் படுத்த வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.
ஐக்கிய பிக்குகள் முன்னணியினால் கட்சித் தலைமையகத்தில் நடத்தப்பட்ட கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
17 ஆம் திருத்தத்தை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.
அவ்வாறு நடைமுறைப்படுத்தினால் நாட்டுக்குள் போதைப் பொருள் மற்றும் எதனோல் கொண்டு வருவோர் பற்றிய தகவல்களை வெளிப்படுத்த மக்கள் முன்வருவார்கள்.
அரசு போதைப் பொருள், கசினோ, மதுபானம் போன்றவற்றை முதன்மைப்படுத்த முயற்சிக்கின்றது. அதற்கு எதிராக பௌத்த பிக்குகளே முதலில் குரல் கொடுத்துள்ளனர்.
போதைப் பொருள் கொள்கலனை விடுவிக்க பிரதமர் அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசின் தெளிவான நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டும்.
போதைப் பொருள் வர்த்தகர்களை அரச சாட்சியாளர்களாக மாற்றி விடுதலை செய்கின்றனர்.
முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கப்பட்டதன் ஊடாக நீதிமன்றின் சுயாதீனத் தன்மை சீர்குலைந்துள்ளது.
17 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நீதிமன்றம், பொலிஸ், தேர்தல் போன்றவற்றின் சுயாதீனத் தன்மையை உறுதி செய்ய முடியும் - என்றார். (ச)

## வெளிநாட்டு ஊடகவியலாளர் 265 பேர் இலங்கை வருகை

### *35 ஆவணப் படங்களும் தயாரிக்கப்பட்டன*

கொழும்பு.ஜன.14
இலங்கையின் உள்நாட்டு நிலைவரங்கள் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதற்காக கடந்த வருடம் 265 வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் வந்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
கடந்த வருடம் ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் இவர்கள் இலங்கைக்கு வந்துள்ள னர்.
அவர்களுக்குத் தேவையான விசாக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அவசியமான ஒத்துழைப்புகள் அளிக்கப்பட்டதாகவும் அமைச்சு தெரிவிக்கிறது.
கடந்த வருடம் வெளிநாட்டு ஊடகவியலாளர்களால் 35 திரை மற்றும் ஆவணப்படங்களையும் இலங்கையில் எடுத்துள்ளனர்.
அதற்கான சகல ஏற்பாடுகளும் ஒத்துழைப்பும் வெளிவிவகார அமைச்சினால் வழங்கப்பட்டதாகவும் அமைச்சு வெளியிட்டுள்ள 2012 ஆம் ஆண்டுக்கான அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

## ஆடம்பர பொருளாக மாறியுள்ளது பருப்பு

### *அதற்கும் வரி அறவிடப்படுகிறது என்கிறார் சரத் பொன்சேகா*



கொழும்பு.ஜன.14
இலங்கையில் ஆடம்பர உணவுப் பொருளாகப் பருப்பு மாற்றமடைந்துள்ளது என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.
பட்டபொல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் பருப்பு ஓர் ஆடம்பர உணவுப் பண்டமாக மாற்றமடைந்துள்ளது.
ஆடம்பரப் பொருள்களைப் போன்றே பருப்புக்கும் வரி அறவீடு செய்யப்படுகின்றது.
பிரதான எதிர்க்கட்சிகள் என்று கூறிக்கொள்ளும் தரப்பினர் தங்களது கடமைகளைச் செய்யத் தவறியுள்ளனர்.
எதிர்க்கட்சிகள் தங்களது கடமைகளை உரிய முறையில் செய்தால், மக்கள் துன்பங்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படாது.
நாட்டின் அரசியல்வாதிகள் தங்களது சுயலாபத்தை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகின்றனர்- என்றார். (ச)

# மனித உரிமை நிலை குறித்து தெளிவுபடுத்தப்படுவதில்லை

### *மஹாநாமஹேவா தெரிவிப்பு*

கொழும்பு.ஜன.14
மனித உரிமை நிலைமைகள் குறித்து உரிய முறையில் தெளிவுபடுத்தப்படுவதில்லை என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரதிபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாட்டின் மனித உரிமைப் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து சர்வதேச சமூகத்துக்கு உரிய முறையில் தெளிவு படுத்தப் படுவதில்லை.
நாட்டின் இடம்பெறும் சிறிய விடயம் தொடர்பிலும் பழ. நெடுமாறன், வீ.உருத்ர குமாரன் போன்றோர் இணை யம் அல்லது வேறு ஊடகங்களின் ஊடாக பிரச்சாரம் செய்கின்றனர்.
எனினும், இது தொடர்பில் சரியான தெளிவுபடுத்தல்களை அரச தரப்பு மேற்கொள்வதி ல்லை.



பொறுப்பு வாய்ந்த தரப்பினர் சர்வதேச ரீதியில் நிலவும் பிழையான கருதுகோள்களை மாற்[illegible] சாட்சியாளர்கள், பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சட்டத்தை நடைமுறைப்படுத்தல், தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப் படுத்தல், 2009 ஆம் ஆண்டு முதல் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு எதிரான விசாரணைகளைத் துரிதப்படுத்தல் போன்றவற்றின் மூலம் அரச, சர்வதேச ரீதியாக எழும் குற்றச் சாட்டுக் களுக்கு பதிலளிக்க முடியும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## துணிச்சலான நடவடிக்கை மூலமே முட்டுக்கட்டையை நீக்க முடியும்

இலங்கை எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் மூன்றாவது தீர்மானத்தை எதிர்நோக்குகிறது. ஜெனிவாவில் இலங்கைக்கு அபாயமணி அடிக்கப்படுவதாக விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இப்படியான நிலையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் இன்னமும் பூஜ்ஜியத்திலேயே உள்ளன. ஜனாதிபதி துணிச்சலாக சில முடிவுகளை எடுக்கவேண்டும். எடுக்க முடியாதுபோனால் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாது. இஸ்ரேல் பிரதமராக இருந்த யிட்ஷாக் ரபீனும் பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தும் 1993இல் செய்துகொண்ட ஒஸ்லோ ஒப்பந்தம் இதற்கு ஓர் முன்னுதாரணமாகும்.

ஜனாதிபதி ராஜபக்ஷ சமீபத்தில் பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் பயணம் செய்திருந்தார். இலங்கை - பலஸ்தீன நட்புறவுச் சங்கத் தலைவராக ஆரம்ப காலம் முதல் ஜனாதிபதி இருந்து வருகிறார். பலஸ்தீன பயணத்தின் போது அந்த நாட்டின் பிரஜை அல்லாத ஒருவருக்கு வழங்கப்பட்ட அதி உயர் விருதான பலஸ்தீனத்தின் நட்சத்திரம் விருது அவருக்கு வழங்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பலஸ் தீன மக்களின் முழுமையான ஆதரவு இலங்கைக்கு இருந்தது. அதேசமயம் இஸ்ரேலின் அதிவேக டோறா படகுகள், கிபிர் குண்டுவீச்சு விமானங்கள், ஆளில்லா உளவு விமானங்கள் என்று இஸ்ரேல் வழங்கிய ஆயுத உதவியால் வடக்கு, கிழக்கில் தரையிலும் கடலிலும் இலங்கை அரசால் புலிகளைக் கணிசமான அளவு பலவீனப்படுத்த முடிந்தது. சீனாவுடனும் இந்தியாவுடனும் எப்படி உறவுகளைப் பேண முடிந்ததோ, அதே போன்ற உறவையே பலஸ்தீனத்துடனும் இஸ்ரேலுடனும் பேணுவதில் இலங்கை அரசு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் இஸ்ரேலை எதிரி நாடாகப் பார்க்கிறார்கள். ஜனாதிபதியின் இஸ்ரேல் பயணம் முஸ்லிம்களின் உணர்வுகளைப் பாதிக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். அதனால் இஸ்ரேல் பயணத்தை நியாயப்படுத்தும் தேவை அரசுக்கு உண்டு. சமீபத்தில் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியான கட்டுரையில் பலஸ்தீன மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளை இஸ்ரேல் தரப்பு நிவர்த்திசெய்வதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷவின் இஸ்ரேல் பயணம் உதவியாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.O

1993இல் அப்போதைய இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ரபீனும் யஸீர் அரபாத்தும் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோதிலும் தீர்வு காணப்படாத பிரச்சினைகள் இன்னும் உள்ளன. எனினும், விமானக்கடத்தல்களுக்கும், தற்கொலைத் தாக்குதல்களுக்கும், குண்டு வெடிப்புகளுக்கும் இந்த ஒப்பந்தம் முடிவு கண்டது. பலஸ்தீன அதிகாரசபை இயங்குகின்றது. பல நாடுகள் அங்கீகரித்து விட்டன. யூதக்குடியிருப்புகள் போன்ற சில முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் போது மத்திய கிழக்கில் அமைதிக்கான சூழ்நிலை ஓரளவு உருவாகிவிடும்.

வன்முறைகளையும் போர்களையும் ஒஸ்லோ ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது. ஒப்பந்தம் செய்யும்போது வலதுசாரி யூத தீவிரவாதிகளின் கடுமையான எதிர்ப்பை யிட்ஷாக் ரபீன் கவனத்தில் எடுக்கவில்லை. அதேபோன்று பலஸ்தீன மக்களினதும் அரபு நாடுகளினதும் எதிர்ப்பை யஸீர் அரபாத் பொருட்படுத்தவில்லை. இப்படியான துணிச்சலான நடவடிக்கையே இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அவசியமாகும். ரபீனும் அரபாத்தும் அன்று எடுத்த துணிச்சலான முடிவு மத்திய கிழக்கில் இரத்தக்களரிக்கு முடிவு கண்டுள்ளது. தீவிரவாதத்துக்கும் பேரினவாதத்துக்கும் முகம் கொடுத்து எடுக்கும் துணிச்சலான நடவடிக்கையே இன்று இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தேவை.

# மனித வாழ்வைச் சீர்குலைக்கும் இரசாயன உரப்பாவனை

கு.நிறோஜன்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தொன்றுதொட்டு பேசப்பட்டு வரும் பழமொழியும் நம்பிக்கையுமாக இருந்து வருகிறது. ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் தைப் பொங்கலை அண்மித்த காலப் பகுதியிலும் இந்த வாக்கியங்களை நாம் பலரிடமும் இருந்தும் கேட்டிருக்கிறோம். அந்த அளவுக்கு வருடத்தின் மிக முக்கியமான தருணங்களில் பிரதான நிகழ்வு ஒன்றாகத் தைப் பொங்கல் சிறப்புப் பெறுகிறது. தற்பொழுது பலர் தைப்பொங்கல் பொங்கி சூரியனுக்குப் படைத்து முடித்திருப்பர். சிலர் பொங்கலைச் சாப்பிட்டும் இருப்பர். இன்னும் சிலர் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டிருப்பர்.

உலகை வாழ்வில் உயிர்களின் நிலைத்தலுக்கு அத்தியாவசியமான உணவை வழங்கும் பிரதான காரணரான சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாக இந்தத் தைப்பொங்கலை அனைவருமே சிறப்பாக கொண்டாடுகின்றனர். சூரியன் இந்துக்களது பிரதான வழிபடு தெய்வமாகவும் விளங்குவதால் இந்துக்கள் தைப்பொங்கலைப் பெருமெடுப்பில் கொண்டாடுவர். இவ்வாறு உணவை வழங்கும் அடுத்த நன்றிக்குரியவர்களாக விவசாயிகள் மதிக்கப்படுகிறார்கள். அந்த வகையில் விவசாயிகள் மாத்திரமின்றி அனைவருக்குமே இன்று மகிழ்ச்சிகரமான நாள்.

இத்தகைய சந்தோசமான தருணங்கள் வாழ்வில் விவசாயிகள் உட்பட அனைவருக்கும் நீடித்தவண்ணம் இருந்தால் உங்கள் மனநிலை எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். முக்கியமாக விவசாயிகள் இதனைப் பற்றி ஒவ்வொரு கணமும் சிந்தியுங்கள். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு குடும்பமும் ஆரோக்கியமாக வாழும் சூழலை உங்களால் உறுதிப்படுத்த முடியுமா? அதற்காக ஒவ்வொரு விவசாயிலும் ஆரோக்கியமான உணவை வழங்க முடியுமா? என்பதே இன்று எம் அனைவரதும் முன்பாக உள்ள மிகப் பெரியகேள்வி.

உலகத்துக்கே உணவு வழங்குகிறார்கள் விவசாயிகள். இந்த நாட்டில் உள்ள விவசாயிகளின் உழைப்பில் ஏனையவர்கள் தங்கியிருக்கிறார்கள். நாம் உண்ணும் உணவில் எவ்வளவு நஞ்சு கலந்திருக்கிறது என்பது தெரியுமா? ஆதனை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். நஞ்சு கலந்துள்ளது என்பது விவசாயிகளுக்கே அதிகம் தெரியும். ஆனால் முன்னர் அது பற்றித் தெரியாமல் இருந்திருப்பர். பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலமாக அது தெரியவந்திருப்பதும் அது பற்றி விவசாயிகளுக்கு அறிவு றுத்தப் பட்டிருப்பதும் தெரிந்ததே. அவ்வாறு நச்சுத் தன்மை ஏற்பட, அதிகரிக்க பிரதான காரணம் பயிருக்கு விசிறும் இரசாயனப் பதார்த்தம் மற்றும் பயிருக்கு இடப்படும் உரவகைகளே. இதன் பயன்பாட்டை இயன்றளவு குறைக்குமாறு அல்லது முற்றாக நீக்கிவிட்டு சேதனப் பசளைகளைப் பயன்படுத்துங்கள் என்றே மருத்துவர்களால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது. இது பற்றி அனைவருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் எத்தனை பேர் இதனைப் பின்பற்றுகிறார்கள்?

காரணம் அளவுக்கு அதிகமான இரசாயன உரப் பாவனை காரணமாக பொதுமக்களுக்கு கல்லீரல் நோய், தொற்றா நோய்கள் என்ற பிரிவுக்குள் வரும் குருதி அமுக்கம், நீரிழிவு என பலவகைப் பட்ட நோய்களுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பொலநறுவை அனுராதபுரம் உட்பட சில மாவட்டங்களிலும் இதன் கடுமை யான தாக்கத்தை அங்குள்ள மக்கள் எதிர்கொண்டுள்ளனர். இங்குள்ளவர்கள் தற்பொழுதுதான் உணரத்தொடங்கியுள்ளனர். இந்த நிலை நாடளாவிய ரீதியாக அதிகரித்து வருகிறது. அதிலும் வடக்குக் கிழக்கிலேயே அதிகளவு இரசாயன உரப் பாவனை அதிகரித்துள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னரெல்லாம் வயதான சிலருக்கே இந்த நோய்கள் ஏற்பட்டன. ஆனால் இன்று வயதானவர்களுக்குச் சர்வ சாதாரணமாக மட்டுமின்றி சிறார்கள் கூட கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பல வருடங்கள் நாட்டில் நடந்த போர் காரணமாக இரசாயன உர வகைகள் குறிப்பிட்ட அளவிலேயே வடக்குக் கிழக்குக்கு கிடைத்து வந்தன. அதனால் இயற்கை உரங்களையே விவசாயிகள் பயன்படுத்தி வந்தனர். அதனால் நோய்களும் ஏற்பட்டிருக்கவில்லை. ஆரோக்கியமாகவே வாழ்ந்தனர்.

நெற்பயிர்களுக்கு இடப்படும் இரசாயன உராங்களில் ஆசனிக் எனப்படும் இரசாயனப்பதார்த்தம் அதிகள வில் உள்ளது. மரக்கறிவகைகளிலும் மிகத் தாராளமாகவே உள்ளது. வாழைப்பழங்களைப் பழுக்க வைப்பதற்கென விசிறப்படும் மருந்துகள்கூட மிக ஆபத்தானவை. தவிர வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அப்பிள் போன்ற பழங்களிலும் நஞ்சு நிறையவே கலந்துள்ளது. அங்கு மரத்திலிருந்து பறிக்கப்பட்ட பழங்கள் பல மாதங்களின் பின்னரே இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அந்தளவுக்கு மருந்து விசிறப்படுகிறது. அதனை கொள்வனவு செய்பவர்கள் தாமும் அவற்றுக்கு மருந்து விசிறுகின்றனர். அதனால்தான் அப்பிள் உள்ளிட்ட பழங்கள் மெழுகு போல் பளபளக்கின்றன என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

வெளிநாடுகளில் நுகர்வோருக்கான பாதுகாப்பு சிறப்பாகவே நடைமுறைப்படுத்தப்படுகிறது. எமது நாட் டில் அது இல்லாத அல்லது போதாத தன்மையும் இதற்கு ஒரு காரணம்.

இங்கு விவசாயிகள் பயிர்களுக்கு மருந்து விசிறும் போது வாய்க்கு துணியொன்றைக் கட்டி உடலிலும் ஏற்ற ஒழுங்குகளுடனேயே மருந்து விசிறுகின்றனர். அதன் தாக்கம் தெரிந்தே பாதுகாப்புக்காக அவ்வாறு செய்கின்றனர். அப்படியிருக்க அவ்வாறு மருந்து விசிறிய பயிர்களை எப்படி உண்ண முடியும்? எனவே விவசாயிகள் மனித வாழ்க்கையின் நிலைப்பாட்டை உணர்ந்து பொறுப்புடன் செயற்படவேண்டும். மக்களுக்கு தீங்கற்ற உணவு வழங்குவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.

சேதன உரப்பாவனை மூலமாக சிறப்பாக நெல் உட்பட பயிர்களிலிருந்து சிறந்த அறுவடையைப் பெறமுடியும். இந்த முறையை நாட்டின் ஒரு சில பகுதிகளிலேயே அரசு ஊக்கப்படுத்துகிறது. அந்த நடைமுறை விரிவுபடுத்தப்பட வேண்டும்.

வடக்கில் பயிர்களுக்கு நோய் ஏற்படும் பட்சத்தில் அது பற்றி விவசாய போதனாசிரியர்களுக்கு அறிவித்தால் அது என்ன நோய் என்றும், மருந்து விசிறு வதற்கான அளவு தொடர்பாகவும் அறிவுரை வழங்குவர் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் மருத்துவரின் பற்றுச்சீட்டு இல்லாது மருந்து பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் பயிர்கள் மூலமாக தேவையற்ற விதத்தில் அளவுக்கதிகமான உடல் நலத்துக்கு ஒவ்வாத மருந்தை உட்கொள்கிறோம்.

இதுபற்றி விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையை பிரதேசங்கள் தோறும் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனையும் விவசாயிகள் கவனத்தில் கொண்டு செயற்படுங்கள். அதன் பயன்களை அனுபவிப்பது விவசாயிகளாகிய நீங்கள் உட்பட அனைவரும்தான். உங்கள் முடிவு - செயல்கள் அனைத்தும் சமூகத்தை மேம்படுத்துவதாக இருக்கட்டும்.



**அப்பிள் உள்ளிட்ட பழங்கள் மெழுகு போல் பளபளக்கின்றன என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். வெளிநாடுகளில் நுகர்வோருக்கான பாதுகாப்பு சிறப்பாகவே நடைமுறைப் படுத்தப்படுகிறது. எமது நாட்டில் அது இல்லாத அல்லது போதாத தன்மையும் இதற்கு ஒருகாரணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகைகளை மறக்க வைக்கும் பொருளாதாரச் சுமை

சோபனா

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகை இன்று தமிழர்களால் உலகெங்கும் கொண்டாடப்படும் நிலையில் குடா நாட்டு மக்கள் மத்தியில் பொங்கலுக் கான முன்னாயத்தங்கள் பெரிதாகக் களை கட்டவில்லை. மக்கள் மனதில் பண்டிகைக் காலங்கள் சாதாரண ஒரு நிகழ்வுகளாகவே மாறிக்கொண் டிருக்கின்றன.

பொங்கல் தினத்தை கிராமத்தவர் களே அதிகளவு சிறப்புக்களுடன் கொண்டாடுவது வழமை. குறிப்பாக அது விவசாயக் கிராமமாக இருந்தால் இன்னும் சிறப்புடையதாக இருக் கும்.

பொங்கலை எப்படிக் கொண்டாடப் போகிறோம் என்பது அவர்களது எதிர்பார்ப்பல்ல. பொங்கலைக் கொண் டாட என்ன செய்யப் போகிறோம் என் பது தான் ஒவ்வொருவருடைய எதிர் பார்ப்பாகவும் உள்ளது. பொங்கலுக் குத் தேவையானவற்றை எப்படிப் பெற்றுக் கொள்ளப் போகிறோம்? எங்கள் வீட்டு முற்றத்திலும் பொங்கல் பானையில் அரிசி பொங்குமா? குடும் பத் தலைவர்களுக்கு அது பெரும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

இது பெண்களைத் தலைமைத்துவ மாகக் கொண்டவர்களுக்கு இரண்டு மடங்கு தலைவலியைக் கொடுத் துள்ளது. வாழ்க்கையின் கால ஓட் டத்தில் அத்தியாவசியப் பொருள்க ளின் விலையேற்றங்கள் காரண மாக இருதலைக்கொள்ளி எறும்பாக அவர்கள் தவிக்கிறார்கள். நாகரிக மாற்றங்களால் மற்றவர்களைப் போல் தம்மையும் மாற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு.



“பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டவர்களுக்கு இரண்டு மடங்கு தலைவலியைக் கொடுத்துள்ளது. வாழ்க்கையின் கால ஓட் டத்தில் அத்தியாவசியப் பொருள்க ளின் விலையேற்றங்கள் காரணமாக இருதலைக்கொள்ளி எறும்பாக அவர்கள் தவிக்கிறார்கள். நாகரிக மாற்றங்களால் மற்றவர்களைப் போல் தம்மையும் மாற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு.”

### பொங்கலைக் கூட மறந்து விட்டனர் யாழ்ப்பாண மக்கள்

எங்களுக்கு வியாபாரம் இல்லை யென்றாலும் குடாநாட்டுக் கலாசாரம் மெல்ல மெல்ல அழிந்து கொண்டு போகுது. முந்தியெல்லாம் ஏதாவது கொண்டாட்டக் காலம் என்றால் எங் களுக்கு கடைய விட்டு விலத்த முடி யாத சனம் வந்து கொண்டிருப்பார் கள். நாங்கள் சாப்பிடாமல்கூட நின்று வியாபாரம் செய்வம். அப்படி வியா பாரம் நடக்கும். ஒரு கிழமைக்கு முன்னமே ரவுனுக்க விலத்த முடி யாத சனம் இருக்கும். இப்ப நீங்களே பார்க்கிறீங்கள் தானே, வியாபாரம் இல்லை. வியாபாரத்துக்கு எண்டு வேண்டிப் போட்ட சாமான்கள் அப் பிடியே கிடக்குது. யாழ். நகர நவீன சந்தையில் 25 வருடத்துக்கு மேலாக கடை வியாபாரம் செய்யும் வர்த்தகர் ராசன் கூறுகிறார்.

வர்த்தக நிலையங்களில் தேவைக்கு ஏற்ப பொருள்கள் வாங்கிக் குவிக்கப் பட்டிருந்தாலும், அவற்றை சந்தைப் படுத்த முடியாது வர்த்தகர்கள் இக் கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள் ளார்கள் .

பண்டிகைக் காலங்களில் யாழ்ப்பா ணம் களை கட்டத் தொடங்கிவிடும். மக்கள் ஆரவாரப்படுகிறார்களோ இல்லையோ வர்த்தகர்கள் முன் கூட்டியே தமது வர்த்தக நடவடிக் கைகளுக்கு தேவையானவற்றை தயார்ப்படுத்தத் தொடங்கி விடுவார் கள். பண்டிகைக் காலங்களில் போட்ட முதலை இலாபத்துடன் தேடி விடலாம் என்கின்ற எதிர்பார்ப்பு வர்த்தகர்க்ள் மத்தியில்.

### கடன்காரராய் மாறிவிட்ட வர்த்தகர்கள்

நாங்கள் காலம் காலமாக பரம்பரை பரம்பரையா யாழ்.நகருக்குள் தான் வியாபாரம் செய்யிறம். முந்தி இருந்த கொட்டில் கடைகளில் நடந்த வியா பாரம் கூட இப்ப இல்லை. எல்லாக் கடைகளும் கட்டடங்களாக மாறினது தான் மிச்சம். வர்த்தகர்கள் முழுக்க கடன்காரராத்தான் இருக்கினம். ஒரு வியாபாரமும் இல்லை. மாநகர சபைக்கு மாசா மாசம் வாடகைக் காசைக் கட் டிப் போட்டு வர்த்தகர்கள் விடுப்புத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறம். எந்தக் கடையில போய் கேட்டாலும் வர்த்தகர்கள் இதைத்தான் சொல்லு வினம். பரம்பரைத் தொழிலாக நகருக் குள் பலசரக்குக் கடை வைத்திருக் கும் வர்த்தகர் முத்தையா தன்னுடைய ஆதங்கத்தையும் கொட் டித் தீர்த்தார்.

யாழ். நகர் வர்த்தகர்கள் ஒரு புறம் கடன் சுமைக்குள் தள்ளப்பட்டாலும் தொடர்ந்தும் வியாபார நடவடிக்கை கள் பாதிப்படைந்து வருவதால் இன்னும் தொடர் சுமைகளை சுமக்க வேண்டிய நிலைமைக்கே தள்ளப் பட்டுள்ளனர். என்னதான் வர்த்தக நிலையங்கள் கட்டடங்களால் காட் சிப்படுத்தப்பட்டு மெருகூட்டப்பட்டா லும் வர்த்தகர்களின் நிலை தொடர் பாக தொடர்புடைய அதிகாரிகள் மௌனம் சாதித்து வருகிறார்கள்.

### வெறும் காட்சிக் கூடமாய் நகர்

யாழ்.நகருக்கு ஒவ்வொருநாளும் எவ்வளவு சனம் வந்து போகுது. நகர் இப்ப எல்லாருக்கும் புதுமையான இடமா இருக்கு . எங்கட ஊர்ச் சனமே அதிசயமாகத் தான் பார்க்குதுகள், அந்தளவுக்கு நகர் பளபளப்பா இருக்கு. உள்ளுக்க இருக்கிற எங்களுக்குத் தான் இதோட வலி தெரியும். வேற இடங்களில் இருந்து வாறவையும் வெளிநாட்டுக்காரரும் ஏதோ அதிச யத்தை படம் பிடிப்பதைப் போல பிடிச் சுக் கொண்டு போவினம். யாரும் முன் வந்து உதவி செய்யிறதா இல்லை. எங்கட அதிகாரிகளே பேசாம இருக் கும் போது வெளிநாட்டவர்களா எங் களுக்கு உதவி செய்யப் போகினம். தேர்தல் காலத்தில் அதைச் செய்யிறம் இதைச் செய்யிறம் என்று துண்டு களைத் தந்து போட்டு போச்சினம். நாங்களும் யார் என்று தெரியாத வைக்கு கூட வோட் போட்டம். எந்தப் பிரயோசனமும் இல்லை. யாழ்ப் பாணத்தின் பொருளாதாரம், யாழ். நகர வர்த்தகர்கள் என்றதெல்லாம் வெறும் பேச்சளவில் மட்டும் தான். யாழ். நகர் வெறும் காட்சிக் கூடம் எனக் குறை கூறுகிறார் நகர வர்த்தகர் சுந்தரம்.

### நடமாடும் வர்த்தகத்தால் பாதிப்பு

தைப்பொங்கல் பண்டிகை சோபை யிழந்து காணப்படுவதால் நகர வர்த்தகர்களின் முகத்தில் சிரிப்புக் கூட இல்லை.

நகரக் கடைகளுக்கு இப்ப எந்தச் சனம் வருகுதுகள். ஊருக்குள்ள எங்க பார்த்தாலும் வாகனங்களில் கொண்டு வந்து என்ன தேவையென்றாலும் விற்கிறாங்கள். சனம் அங்கதானே வாங்கும். பஸ் பிடிச்சு சனம் இஞ்ச வாறத எதிர் பார்க்க முடியாதுதானே. சும்மா நாளிலேயே கொண்டு திரிஞ்சு விற்கிறாங்கள். அதுவும் கொண் டாட்ட நாள் என்றா சொல்லவே வேணும். பிறகெப்படி சனம் இந்தக் கடைகளுக்கு வரப்போகுதுகள். தென்னிலங்கை வர்த்தகர்களால் தமது வர்த்தக நடவடிக்கைகள் பெரி தாகப் பாதிப்படைந்துள்ளது என்று குறை கூறுகிறார் வர்த்தகர் ஒரு வர்.

பொங்கல் வியாபாரம் இந்த வருசம் அறவே இல்லாம போச்சு. எங்கட யாழ்ப்பாணத்துச் சனம் பொங் கலையே மறந்து போச்சுதுகள். சனம் எல்லாம் லீசிங், பாங்க் கடன் என்று யாரைப் பார்த்தாலும் கடனில இருக்குதுகள். பிறகெப்பிடி பொங் கலைக் கொண்டாடுறது. கடன் கட் டவே சனம் கடனுக்கு மேல கடன் படுகுதுகள். பண்டிகைக் காலங் களையே சனம் மறந்து போச்சுது கள். இந்த வருசம் பொங்கலும் அதே நிலையிலதான் இருக்கு என வர்த் தகர் விஷ்வா கூறுகிறார்.

ஒட்டு மொத்தத்தில் சாதாரண நாள் களில் இடம்பெறும் வியாபாரப் பாதிப் புக்கள் போன்றே தைப்பொங்கல் பண்டிகைக்கான வியாபாரமும் நக ரில் களை கட்டவில்லை.

வர்த்தக நிலையங்கள் சோபையி ழந்து காணப்படுவதைப் போல வர்த் தகர் களும் மனம் தளர்ந்த நிலையில் உள்ளனர். இவர்களது பிரச்சினை களுக்குத் தீர்வு வழங்குவது யார்?



பரம்பரை பரம்பரையாக யாழ்.நகருக்குள்தான் வியாபாரம் செய்யிறம். முந்தி இருந்த கொட்டில் கடைகளில் நடந்த வியாபாரம் கூட இப்ப இல்லை எல்லாக் கடைகளும் கட்டடங்களாக மாறினதுதான் மிச்சம். வர்த்தகர்கள் முழுக்க கடன்காரராத்தான் இருக்கினம். ஒரு வியாபாரமும் இல்லை. மாநகர சபைக்கு மாசா மாசம் வாடகைக் காசைக் கட்டிப் போட்டு வர்த்தகர்கள் விடுப்புத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** கடன் பிரச்சினைகள் தீரும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.



**இடபம்**: பழைய கசப்பான சம்பவங்களைப் பேசிக் கொண் டிருக்க வேண்டாம். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகு முறையை மாற்றுங்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.



**மிதுனம்**: உங்கள் செயல்கள் தாமதம் இன்றி நிறைவேற கூடுதல் சுறுசுறுப்பு அவசியம். பிறருக்காக தகுதிக்கு மீறிய வாக்குறுதி எதுவும் வழங்க வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். முக்கிய செலவுக்காக கொஞ்சம் கடன் பெறுவீர்கள்



**கடகம்**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசால் ஆதாயம் உண்டு. யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.



**சிங்கம்**: நீண்ட நாளாக தள்ளிப்போன காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.



**கன்னி**: எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர் களைச் சந்திப்பீர்கள்.



**துலாம்**: வேலைகளை உடனே முடிக்க வேண்டுமென நினைப்பீர்கள். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற் றாக வாங்க வேண்டி வரும். உத்தியோகத்தில் சில சூட் சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**விருச்சிகம்**: எதிர்பாராத சந்திப்பு நிகழும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். எதிலும் முன் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.



**தனுசு**: வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும்.



**மகரம்**: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவி கள் கிடைக்கும். மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.



**கும்பம்**: முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச் சில் கம்பீரம் பிறக்கும்.



**கும்பம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனை வரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வேலையாள்க ளின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தி யோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவீர்கள். புதிய எண்ணாங்கள் மனதில் தோன்றும்.

## நாளை

**தை-02 புதன்கிழமை | 15.01.2014**

திதி: சதுர்த்தசி மு.ப.08.40 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.ப.11.13 வரை
சுபநேரம்: 05.04-06.34 வரை
இராகுகாலம்:12.34-02.04 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




# கலை

இயற்கையை, அதன் மிக நுட்பமான விளக்கங்களுடன் பிரதிபலிக்கச் செய்யும் திறமையே கிரேக்கரின் கலை ரகசியம். ஆனால், இந்தியக் கலையின் ரகசியமோ லட்சிய விளக்கம். ஒரு மாமிசத் துண்டைச் சித்திரிப்பதிலேயே கிரேக்க ஓவியன் தன் முழுத் திறமையைச் செலவிடுவான்; அவன் வரைந்த அந்த மாமிசத் துண்டை உண்மை என்று நம்பி, நாய் ஒன்று அதை நோக்கி உண்ணச் செல்லும் அளவுக்கு அதில் அவன் வெற்றி பெற்றுவிடுவான். இயற்கையை அப்படியே பிரதிபலிக்க முயல்வதில் என்ன பெருமை இருக்கிறது? உண்மை மாமிசத் துண்டையே நாயின் முன் வைத்துவிட்டால் என்ன?

லட்சியத்தைக் காட்ட வேண்டும், புலன்களுக்கு எட்டாததைப் புலப்படுத்த வேண்டும் என்ற இந்திய ஓவியங்களின் உயர் நோக்கம், நாளடைவில் சிறிது சிறிதாகப் பெருமை இழந்து, பலவகை வேடிக்கையான உருவங்கள் படைப்பதில் முடிந்துவிட்டது. உண்மையான ஓவியத்தை ஓர் அல்லி மலருக்கு ஒப்பிடலாம். அது நிலத்திலிருந்து கிளம்புகிறது; தன் உணவையும் நிலத்திலிருந்தே பெறுகிறது; நிலத்தை ஆதாரமாகக் கொண்டே நிற்கிறது. என்றாலும், நிலத்தை விட உயர்ந்த நிலையிலேயே இருக்கிறது. இப்படி இருப்பது தான் உண்மைக் கலையின் அடையாளம். இது போலவே கலையும் இயற்கையுடன் தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும். அது இல்லையென்றால், கலை தன் பெருமையை இழந்துவிடும். என்றாலும், இயற்கையை விட உயர்ந்தும் இருக்க வேண்டும்.

# புற்று நோய் பரவுவதை தடுக்கும் சோதனை வெற்றி



உயிர்கொல்லி வியாதியான புற்றுநோய்க்கு இலக் கானவர்களுக்கு சாவைத் தவிர மருந்து ஏதும் இல்லை என பேசப்பட்டு வந்த பழைய வேதாந்தம் இதன் மூலம் முறியடிக் கப்பட்டுள்ளது.

அதிலும் மார்பகப் புற்று நோய் மிக வேகமாக பரவக் கூடியது என்பதால் இந்நோயால் தாக்கப்பட்ட கோடிக் கணக்கான பெண்களின் ஆயுட்காலத்தின் பெரும் பகுதி பயத்திலும் பீதியிலும் வலியிலும் வேதனையிலும் தான் கழிந்து வந்தது. பெரும்பாலான புற்று நோய் சார்ந்த இறப்புக்களுக்கு நோய்க் கிருமிகள் மனித உடலுக்குள் வேகமாகப் பரவி இரத்த அணுக்களைச் சிதைத்து அழிப்பதே கார ணம் எனக் கண் டறியப்பட்டது.

இவ்வகையிலான புற்றுக் கட்டியில் இருக்கும் கிரு மிகள் வேகமாகப் பரவுவதைத் தடுக்கும் தீவிர ஆராய்ச் சியில் அமெரிக்காவில் உள்ள கார்னெல் மருத்துவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச் சியாளர்கள் நீண்ட காலமாக ஈடுபட்டு வந்தனர்.

இவர்களின் பல ஆண்டு கால உழைப்புக்கு தற்போது முதல்கட்டப் பயன் கிடைத்துள்ளது. புற்று நோயால் பாதிக்கப்பட்ட மனித இரத்தம் மற்றும் எலிகளின் இரத்தத்தில் ஒட்டும் தன்மை கொண்ட ஒருவித 'நானோ' துகள்களைச் செலுத்தி ஆய்வு செய்ததில் அதி சயிக்கத்தக்க வகையில் பெரும் மாற்றம் நிகழ்ந்துள்ளது.

இதன்மூலம் புற்று நோய்க் கிருமிகள் வேறு இடத்துக்கு பரவுவது முற்றிலுமாக தடுக்கப் பட்டதுடன் புற்று நோய்க் கிருமிகளும் கொல் லப்பட்டன. 2 மணித் தியாலத்துக்குள் இந்த அரிய மாற்றம் நிகழ்ந்ததாக ஆராய்ச் சியாளர் கள் பெருமிதத்துடன் குறிப் பிட்டனர்.

சோதனை முயற்சியாக நடத்தப்பட்ட இந்த முதல்கட்ட ஆய்வு இன்னும் பலகட்ட சோதனைகளையும் மேம் பாடுகளையும் கடந்து வெற்றிகரமான செயல் வடி வத்தை பெறும் போது புற்று நோய் சார்ந்த இறப்புகள் முற்றிலுமாக குறைந்து விடும் என்பதை உறுதியாக நம்பலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | | 4 | | 1 | 3 |
| | | | 1 | | 9 | 7 | | |
| 1 | 3 | | 2 | | 6 | | | |
| | 5 | | 6 | 9 | | | 4 | |
| 7 | | 6 | | 1 | | 8 | | 9 |
| | 4 | | | 2 | 5 | | 7 | |
| | | | 9 | | 8 | | 2 | 6 |
| | | 8 | 3 | | 2 | | | |
| 2 | 9 | | 7 | | | 4 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 4 | 3 | 6 | 5 | 8 | 1 | 2 |
| 6 | 1 | 2 | 8 | 7 | 4 | 5 | 9 | 3 |
| 3 | 5 | 8 | 9 | 2 | 1 | 6 | 7 | 4 |
| 8 | 2 | 3 | 7 | 5 | 9 | 1 | 4 | 6 |
| 5 | 7 | 1 | 2 | 4 | 6 | 3 | 8 | 9 |
| 9 | 4 | 6 | 1 | 8 | 3 | 7 | 2 | 5 |
| 2 | 6 | 7 | 5 | 9 | 8 | 4 | 3 | 1 |
| 1 | 8 | 5 | 4 | 3 | 2 | 9 | 6 | 7 |
| 4 | 3 | 9 | 6 | 1 | 7 | 2 | 5 | 8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கைவங்கி
BOC
BANK OF CEYLON இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

www.boc.lk
தலைமைக்காரியாலயம், "இலங்கை வங்கி சதுக்கம்", இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
சேவை மையம் (+94) 011 220 4444
Fitch Rating AA+(lka)
(C/10524)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர்
## சந்திரா சிவகுருநாதன்

திதி 14.01.2014
(சதுர்த்தசி)

| மலராக | சருகாக |
| --- | --- |
| 21.12.1948 | 19.01.2011 |

எம் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்ததம்மா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் அன்னையே....
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்......

**குடும்பத்தினர்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குருஸ்தான்,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

[42348](2.6.3)

## அறிவோர் ஒன்றுகூடல்

அக்கராயன். ஜன.14

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் நடத்தும் அறிவோர் ஒன்றுகூடல் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறவிருக்கும் இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் "தமிழ் வளர்ச்சி" என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஒன்றை இலங்கை வங்கி முகாமையாளர் கு.சிவஞான சுந்தரம் வழங்கவுள்ளார்.

சொற்பொழிவின் நிறைவில் கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## அக்கராயனில் கால்கோள் விழா

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் ஒன்று வகுப்பில் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழா நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் ஒரு மணியளவில் திருமதி அ.நிஜாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் க.மருதநாயகம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சிவஸ்ரீ பாலச்சந்திர சர்மா, மெதடிஸ்த திருச்சபையின் போதகர் சா.துசாகரன், அக்கராயன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எம்.டி.என். சதுரங்க, அக்கராயன் கிராம அலுவலர் கு.துஸ்யந்தன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் தனது சொந்தக் காணியில் இயங்கத் தொடங்கிய பின்னர் இடம்பெறும் முதலாவது கால்கோள் விழாவாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## யோகாசனமும் தளர்வுப் பயிற்சியும்

யாழ்ப்பாணம். ஜன.14

ஓம் பதஞ்சலி யோகேந்திரா நிலையத்தின் ஏற்பாட்டில் யோகாசனமும் தளர்வுப் பயிற்சியும் நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு நல்லூர் ஸ்ரீ வீரகாளி அம்மன் ஆலயத்தின் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பில் வயது வேறுபாடின்றி எவரும் பங்குபற்றலாம். தொடர்ந்து இந்தப் பயிற்சிகள் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை 6 மணிக்கு நடைபெறும். (ந-14)

## திரைப்படப் பாடல் ஆசிரியருக்கான பயிற்சிப் பட்டறை

இலங்கையின் கலை, இலக்கிய வரலாற்றில் முதல் தடவையாக 'அகரம்' கலை இலக்கிய ஊடக நிலையத்தின் ஏற்பாட்டில் புதிய தலை முறைக் கலைஞர்களை, படைப்பாளிகளை உருவாக்கும் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக திரைப்படப் பாடலாசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் திரைப்படத்தில் பாடல் எழுதும் நுட்பங்கள் பற்றி பொத்துவில் அஸ்மின் கருத்து வழங்கவுள்ளார்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வோருக்கு தென்னிந்திய சினிமாவில் கால் பதிப்பதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுவதோடு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் பயிற்சிப் பட்டறையின்போது உருவாக்கப்படும் பாடல்கள் இசையமைக்கப்பட்டு இறுவட்டுக்களாக வெளியிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை அமைப்பாளர், அகரம் கலை இலக்கிய ஊடக நிலையம், இல.77, அருணோதய மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ந-10)

## சைக்கிள் வழங்கும் நிகழ்வு

கைதடி பிரதேசத்தில் வாழும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு இன்று தைப்பொங்கல் தினத்தன்று பிற்பகல் 3 மணிக்கு கைதடி தெற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.

டென்மார்க்கில் உள்ள கைதடி வாழ் மக்களின் நிதி உதவியுடன் கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தினரால் இவை வழங்கப்படவுள்ளன.

கழகத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மறவன்புலோ க.சச்சிதானந்தனும் சிறப்பு விருந்தினர்களாக பண்டாரவளை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ந-9)

## முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டோரை பராமரிக்கும் மருத்துவ நிலையம்

*வவுனியாவில் 17ஆம் திகதி திறந்து வைப்பு*

முள்ளந்தண்டில் ஏற்பட்ட பாதிப் புக்களால் உபாதைக்குள்ளான வர்களைப் பராமரித்து உரிய சிகிச்சைகளை வழங்குவதற் கான மருத்துவ நிலையம் வவுனியாவில் திறந்து வைக் கப்படவுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச் சின் ஏற்பாட்டில் அமைக்கப் பட்டுள்ள இந்த மருத்துவ நிலையத்தை வடமாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் எதிர்வரும் 17ஆம் திகதி வெள் ளிக்கிழமை முற்பகல் 10 மணி யளவில் திறந்து வைப்பார்.

வவுனியா பம்பைமடுப் பகுதி யில் அமைந்துள்ள சித்த ஆயுள் வேத மருத் துவமனைக்கு அருகில் இந்த மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது.

போரின்போது பலர் முள்ளந்தண்டில் பாதிப் புக்களை எதிர் கொண்ட நிலையில் உபாதை களுக்குள்ளாகி வருகின்றனர். இவர்களில் வீட்டில் வைத்துப் பராமரிக்க முடியாதவர்கள் முதற் கட்டமாக இந்த மருத்து வமனையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சையளிக்கப்படவுள்ள னர். தற்போது இத்தகைய 20 பேருக்கு இங்கு வைத்துச் சிகிச்சை வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள் ளன. இதில் 10 ஆண் களுக் கும் அதேதொகையான பெண் களுக்குமென தனித்தனி விடு திகளும் உள்ளன.

தேவையேற்படும் பட்சத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இது போன்று மருத்துவமனை களை அமைப்பதற்கான நடவ டிக்கை கள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

மேற்கூறிய தகவல்களை வட மாகாண சுகாதார அமைச் சரின் பிரத்தியேக செயலாளரான ப.சத்தியசீலன் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## திருநெல்வேலி ஆலயத்தில் பௌர்ணமி நாளில் ஆன்மிக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.திருநெல்வேலி கிழக்கு வெள்ளைப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் இந்த வருடம் தொடக்கம் மாதத்தின் பௌர்ணமி தினத்தன்று ஆன்மிக சொற்பொழிவை ஆலயத்தில் நடத்தவுள்ளனர்.

இதன் பிரகாரம் நாளை புதன்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்.சின்மய மிஷன் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகளின் ஆன்மிக உரை இடம்பெறும்.

இதேவேளை பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆலய மாலைப் பூசையை அடுத்து சிறப்பு சமயச் சொற்பொழிவுகள், பஜனைகள் ஆகியவை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

9ஆம் ஆண்டு நினைவுகளில்...

அமரர்
செல்லையா ரஜனிகாந்
(சுரேன்/சங்கமன்)
திதி: தைமாத வளர்பிறை சதுர்த்தசி

தோற்றம் 22★11★1974
மறைவு 25★01★2005



இதயத்தில் பங்கு தந்து
எளிமையில் அழகமைத்து
நேர்மையில் சிகரம் காட்டி
எம்மை நினைவு
நூலாய் பின்னி நிற்கும்
நேசமிகு சுரேனே...
நீ மறைந்து விட்டாலும்
உன் நினைவுகளோடு
வாழ்ந்துகொண்டிருப்போம்.

குடும்பத்தினர்.
4/2, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
(42318)(3.6.4)

10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
பேரானந்தம் உமாசுதன்
(போட்டோ சுதன்)
மண்ணில் 11 ★ 12 ★ 1974
விண்ணில் 15 ★ 01 ★ 2004



எம் குல விளக்கே!
பாரினிலே எம்மைத் தவிக்கவிட்டு
பத்தாண்டுகள் கடந்தனவே
சுதன் பல்கலையில் பட்டம் பெற்று
பேரறிஞராக வருவாய் என்று
நாம் கோட்டை கட்டினோம்
எல்லாம் கனவாகிப் போயிருக்க
உம் நினைவுகளுடன் இருக்கின்றோம்.

காராளர் வளவு,
அல்வாய்கிழக்கு, அல்வாய்.
(43045)(3.6.4)
உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

நினைவு அஞ்சலி
முதலாம் ஆண்டு இரண்டாம் ஆண்டு





அமரர்
வேலுப்பிள்ளை பொன்னையா
மலர்வு 04.07.1931
உதிர்வு 26.01.2013

திருமதி
பொன்னையா அன்னலஷ்மி
மலர்வு 12.06.1937
உதிர்வு 28.12.2011

மடத்தடி வீதி,
கொடிகாமம்.
(சி/10799)(3.6.4)
என்றும் பாசமுடன்
குடும்பத்தினர்.

9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1986.05.04
மறைவு 2005.01.14

ஜெயக்குமாரன் தனுஷன்
(பழைய மாணவன் -
(கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.புத்தளம் இந்து ம.வி.)

ஆறாத்துயரில் ஆண்டு ஒன்பது
நினைவுகள் நீண்டது உறவுகள் மறைந்தது
கூடி வாழ்ந்த குடும்பமும் கண்ணீர்
விட்டுக் கலங்குதே கயவனால் அழிக்கப்பட்டதால்
கலங்குகின்றோம் நாம் இங்கே உமது
ஆறாத்துயரத்தில் மாண்டவர் மீண்டுவர
நினைக்கின்றோம் முடியவில்லை

- என்றும் நினைவில் குடும்பத்தினர்.
பழனியாண்டவர் கோயில், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி





திதி:பூர்வபக்க சதுர்த்தசி
(14.01.2014)

அமரர் கனகசபாபதிக்குருக்கள்
இரகுநாதக்குருக்கள்
தோற்றம் 1959.11.15
மறைவு 2009.02.08

அமரர் இரகுநாதக்குருக்கள்
கேசவசர்மன்
தோற்றம் 1984.02.03
மறைவு 2009.02.10

ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
வேண்டுகிறோம் உங்கள் அன்பை எந்நாளும்!
எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உமை இழந்த எம் வாழ்விற்கு உய்வுண்டோ?
ஏங்கித் தவிக்கின்றோம் தாங்க முடியவில்லை
மண்ணிலே மறைந்தாலும் மங்காது உங்கள் நினைவு

இல.205/1, முரசுமோட்டை,
பரந்தன்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னதான மண்டபம் திறப்பு; நாளை செல்வச்சந்நிதி சூழலில்

வடமராட்சி.ஜன.14

பிரசித்திபெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் ஒரு கோடி 50 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 'கந்தன் கருணை' அன்னதான மண்டபத் திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மண்டப நிர்வாக சபைத் தலைவர் க.நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர் ஆசியுரை யையும், செல்வச் சந்நிதி கோயில் பிரதம பூசகர் சைவத்திரு உலக குருநாத ஐயர், அறங்காவலர் சபைத் தலைவர் சைவத்திரு சிவசண்முக ஐயர் ஆகியோர் வாழ்த்துரைகளையும் வழங்குவார்கள்.

பிரதம விருந்தினராக யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிறேம்சங்கர், வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி நுண்கலைப் பீட மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். இறுதியில் மகேஸ்வரபூசை நடை பெறும். கந்தன் கருணை அன்னதான மண்டபம், திருமணம் மற்றும் கலைநிகழ்வுகள் நடத்தக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. (ஓ-173)

## முழுநிலா கலைவிழா

யாழ்ப்பாணம், ஜன.14

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி கல்வி வலயத்தின் தைத் திங்கள் முழு நிலா கலை விழா நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்வர்.

வலய மாணவர்களின் தமிழ் சிங்கள கலை நிகழ்வுகளும் இடம்பெறும். வலயத்தின் நூல் மற்றும் இறுவட்டு வெளியீடுகளும் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார். (ந-9)

## பளை இளைஞர் பிரான்ஸில் சாவு

பிரான்ஸில் வீதி விபத்தில் சிக்கி பளை வாசி உயிரிழந்துள்ளார் என்று உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பளை முல்லையடியைச் சேர்ந்த கண்ணப்பமூர்த்தி உமாகாந்தன் (வயது-28) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (ஓ-9)

## மீசாலையில் வெள்ளியன்று தைப்பூச பெருவிழா

தென்மராட்சி, ஜன.14

மீசாலை வேம்பிராய் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான கோட்டத்தின் தைப்பூசப் பெருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி தொடக்கம் இடம்பெறும்.

தைப்பூசப் பெருவிழாவையொட்டி நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களான விநாயகமூர்த்தி துர்க்கா, தனபாலு பிரதீபன், வரதராஜா விசாயினி ஆகியோர் அன்றையதினம் சிறப்பு பரிசுக்ள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுவர். போட்டியில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் ஆறுதல் பரிசில்கள் வழங்கலும் இடம் பெறும்.

நிகழ்வில் டில்லி பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் ஆர்.இராஜகோபால், ஓய்வு நிலை துணை ஆட்சியாளர் (இந்தியா), ஐ.இராமானுஜம், 'செஞ்சொற் செல்வர்' ஆறு.திருமுருகன், யாழ்.பல்கலைக்கழக இந்து கலாசாரத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குவர். (ஓ-9)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் 'வடமாகாணத்தில் போருக்குப் பிந்திய சமூகப் போக்குகள்' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இரா.இராஜேஸ்கண்ணன் கருத்துரைகளை வழங்குவார். (ந)

## கோமாதா பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன.14

பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் மாபெரும் பட்டிப்பொங்கல் விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.நகர் கே.கே.எஸ். வீதி பெரியகடை வீதியூடாக பஸ் நிலைய வீதியை அடைந்து யாழ்.ஆஸ்பத்திரி வீதியூடாக பசுக்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு சத்திரச் சந்தி ஞான வைரவர் ஆலயத்தில் பொங்கல் விழா இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்வார். (ந-14)

## மஞ்சவனப்பதியில் இரத்ததான முகாம்

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய கலியாண மண்டபத்தில் நாளை புதன்கிழமை இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

மஞ்சவனப்பதி ஆலய இந்து இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த இரத்ததான முகாம் நாளை முற்பகல் 10 மணி முதல் இடம்பெறும்.

அர்ப்பணிப்பு உணர்வு மிக்க குருதிக் கொடையாளர்கள் இந்த இரத்ததான முகாமில் குருதிக்கொடை வழங்கி குருதி தேவைப்படுவோருக்கு உதவ முன்வரவேண்டுமென கோரப்படுகிறது. (ஞ)

## சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் நாளை சிவதரிசனம், யாகம்

மாதகல் -சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை சிவ தொண்டர், சிவமங்கையர் அமைப்புக்களின் ஏற்பாட்டில் சிவதரிசனமும் கோமாதா பூசை மற்றும் யாகம் என்பனவும் இடம்பெறவுள்ளன. முற்பகல் 10 மணிக்கு நரசிங்க சித்தர் தலைமையில் இந்த வழிபாடுகள் நடைபெறும்.

மேற்படி அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்த ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தன்று யாகம் செய்யப்படவுள்ளது. இதன் முதலாவது யாகம் கோமாதா பொங்கல் தினமாகிய நாளை நடைபெறவுள்ளது. யாகம் மற்றும் பொங்கல் நிகழ்வு களைத் தொடர்ந்து சிவதரிசனம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மதியம் அன்னதானமும் இடம்பெறும்.

இந்த வழிபாட்டு நிகழ்வுகளில் தமது கோமாதாக்களையும் பங்குபற்றச் செய்வதற்கு விரும்புகின்ற அடியார்கள் கோமாதாக்களை அங்கு கொண்டு வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிவ தொண்டர், சிவமங்கையர்களாக தங்களை இணைத்துக் கொள்ள ஆர்வமுடைய தொண்டர்களும் அன்றையதினம் வருகை தந்து நரசிங்க சித்தர் முன்னிலையில் ஆசிபெற்று, உறுதிமொழிஎடுத்து தொண்டர்களாக இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-86)

# மரண அறிவித்தல்



## திருமதி சின்னம்மா செல்லத்தம்பி

யாழ். புங்குடுதீவு, 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், உடையார் கட்டு, சுதந்திரபுரம் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா செல்லத்தம்பி 11.01.2014 சனிக்கிழமை நூறாவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேலு-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை-வள்ளி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்தம்பியின் அருமை மனைவியும், நாகேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்க ளான ராசலிங்கம், இந்திரா மற்றும் கமலா (கனடா), கிளி (வவுனியா), யோகேஸ்வரி (யோகம், திருவையாறு), இராஜேஸ்வரி (உடையார்கட்டு) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, வைத்தியலிங்கம், கண்மணி, சின்னக்குட்டி, சீதப்பிள்ளை, பொன்னம்மா மற்றும் கந்தையா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் பூமணி (கனடா), காலஞ்சென்றவர்களான தியாகராசா, கனகையா, தணிகாசலம் மற்றும் கண்ணுத்துரை (திருவையாறு), கிருஷ்ணபிள்ளை (உடையார் கட்டு) ஆகியோரின் அன்பு மாமியும், ராணி (கனடா), காலஞ்சென்ற சாந்தன் மற்றும் சந்திரன் (லண்டன்), கனடாவில் வசிக்கும் மோகன், ரதனி, தேவன், கிருபா, லதா, சிவா, ஜெயா, வசந்தன், நந்தன், குமார், தர்சினி, ராகினி, பிரபாகரன், சுபா, காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் பிரபாஹினி (கனடா), வனிதா (வவுனியா) இந்திரன் (கனடா), சுகந்திரன் (கனடா), ரவி (வவுனியா), ரகு (கனடா), ரமணி (வவுனியா), வாணி (கனடா), சாவித்திரி (இத்தாலி), வாசுகி (இத்தாலி), ராதினி (ஜேர்மனி), அப்பன் (பிரான்ஸ்), விக்கி (லண்டன்), கேதீஸ் (பிரான்ஸ்), பவன் (லண்டன்), உடையார்கட்டில் வசிக்கும் தீபன், காலஞ்சென்ற திலீபன் மற்றும் தீபா, தினேஸ் (பிரான்ஸ்), சிந்து (பிரான்ஸ்), உடையார்கட்டில் வசிக்கும் ஜெனா, ஜெனனி, யாமினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.01.2014) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உடையார்கட்டு வடக்கு, இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார்கட்டு.

தகவல்: குடும்பத்தினர்.

077 345 6040, 077 895 5232.

(29737)
(10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2015 இல் கொக்குவில் இந்துக்கல்லூரியில்
உயர்தரப் பரீட்சையில்
சிறந்த புள்ளி பெற்ற (3A)
ஜெயக்குமாரக்குருக்கள் - உஷாதேவி
தம்பதியரின் தலைப்புதல்வி
**ஐஸ்வர்யா** (A/L - Commerce)
அவர்களை பாராட்டுவதுடன் அவர்
மென்மேலும் பட்டம் பல பதவி பெற
இறைவனை வேண்டி ஆசீர்வதித்து
எமது வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

முருகமூர்த்தி கோவிலடி உடுவில்.

வாழ்த்துவோர்:
சித்தப்பா, சித்தி, பிள்ளைகள்

## அதிர்ஷ்டலாபச் சீட்டு திகதி பிற்போடப்பட்டுள்ளது

வளர்மதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான நிதித் தேவைப்பாட்டிற்கான அதிர்ஷ்ட லாபச் சீட்டினை விற்பனை செய்வதற்கானதிகதியான 15.01.2014 ஆனது 15.04.2014 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு விற்பனை செய்து 15.04.2014 ஆம் திகதி அன்று அதிஷ்டம் பார்க்கப்படும்.

வளர்மதி சனசமூக நிலைய நிர்வாகம்
கல்லாரை மல்லாகம்

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் பழைய மாணவரும்,
விஞ்ஞான ஆசிரியரும், பகுதித் தலைவருமான
**செல்லையா ஜெயரத்தினம்**
அவர்கள் நேற்று13.01.2014 தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெற்றார். அவர் ஓய்வுக் காலத்தில் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

நலன்புரிக் கழகம்
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
29ஆவது பட்டமளிப்பு விழாவில்
கலைமாணி B.A (Hons)
பட்டம் பெற்ற
**கோபால சர்மா ரகுவரன்**
B.A (Hons)
அவர்களைப் பாராட்டுவதுடன்
மேலும் பல பட்டங்கள் பெற்று
உயர்வடைய வாழ்த்துகிறோம்.

முருக மூர்த்தி கோயிலடி,
உடுவில்.

வாழ்த்துவோர்:
சித்தப்பா, சித்தி, பிள்ளைகள்.

## NEW SCIENCE HALL JAFFNA

COMBINED MATHEMATICS
2014 A/L BATCH 2014 & A/L DAY BATCH)
அலகு ரீதியான துரித மீட்டல்
வகுப்புக்கள் ஆரம்பம்
ஆரம்பம் : 18.01.2014
சனி, ஞாயிறு காலை 7.00 - 8.00
MR. S. SENTHILRAJ B.Sc

**2016 A/L புதிய பிரிவு**
**சனி ஞாயிறு 9.30**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
11.01.2014 இல் நடைபெற்ற
29 ஆவது பட்டமளிப்பு விழாவில்
சட்டமாணி
(L.L.B) 2nd Class
பட்டம் பெற்ற
**நவநாதன்**
**தக்ஷாமினி**
அவர்களை அகமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.
அவர் மேன்மேலும்
பல பட்டங்களைப்
பெற எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்தித்து
ஆசி கூறுகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
செல்வநாயகம் - புஸ்பவதி.
செல்வகுமார் - பேரோஜினி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**10.01.2014 யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 29**
ஆவது பட்டமளிப்புவிழாவில்
முதுகலைமாணி பட்டம்பெற்ற
**ஜெகதீஸ்வரக்குருக்கள் மயூரன் (MA)**
அவர்களை மனதாரப்பாராட்டி வாழ்த்து வதுடன், அவர் மேன்மேலும் பல பட்டங் களைப் பெற்று புகழ்வளர வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

திருமலை,
சிற்பக்கலைக்கூடம்,
க.ஜெயந்திநாதசர்மா.

(33077)(3.6.4)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியராகிய
**திரு. இராசையா சிறீதரன்**
(B.B.A, PGDE, HNDE)
அவர்கள் 08.12.2013 BMICH இல் HNDE 10.01.2014 யாழ். பல்கலைக்கழகத்தில் PGDE பட்டங்களைப் பெற்றமையையிட்டு மகிழ்வடை வதுடன் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சிறப்புகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

யா/காரை ஊரி A.M.T.M
வித்தியாலயம், காரைநகர்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(42359)(10.14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கலாபூஷணம் அரச விருது விழா - 2013



Best Wishes

### இராமுப்பிள்ளை முருகுப்பிள்ளை

முதலாம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு.
கிராமியக்கலை.
01.04.1931.

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசத்தைச் சேர்ந்த இவர் ஓர் சிறந்த கிராமியக் கலைஞர் ஆவார். பாரம்பரிய கிராமியக் கலைக் குடும்பத்தில் பிறந்தமையால் சிறுவயது முதல் மிகுந்த கலை ஆர்வங்கொண்டிருந்தார். இவர் கிராமியக் கலைகளான கோலாட்டம், கும்மி, கரகம், மகிடி, கம்படி ஆகியவற்றில் சிறந்து விளங்கினார்.

**இலக்கியத்துறை, நாடகத்துறை பங்களிப்பு**

முல்லைத்தீவு ஆலயங்களின் விழாக்களிலும், கலை விழாக்களிலும் இவரது கலை அம்சங்கள் தவறாது இடம்பெற்று வருகின்றன. கிராமியக் கலைகளை தனது பிரதேச இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணாக்கருக்கு கற்றுக்கொடுத்து வருகின்றார். சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக இத்துறையில் பணியாற்றிவருகின்றார்.

**பெற்றுள்ள விருதுகள்**

இவரது கலைப்பணியைப் பாராட்டி வடமாகாண சபையின் 'ஆளுநர் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

15.12.2013 அன்று கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட
இவரை மேலும் சிறப்புறப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

282

Best Wishes

வாழ்த்துவோர்:
வன்னிவாழ் கலை ஆர்வலர்கள்.

(C/11007)(10.6.3)

## அகவை 102 இல் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




**வேலுப்பிள்ளை தம்பு (14.01.1912)**
**இடைக்குறிச்சி வரணி**

வளம் கொழிக்கும் வரணிப்பதி இடைக்குறிச்சிக் கிராமத்தில்
கிடைத்தற்கரிய பொக்கிஷமாய் தம்பு மகான் வாழ்கின்றார்
மாறாப்பலத்துடன் நூற்றிரண்டில் வாழும் செம்மல் நீங்கள்
வாழும் காலமெல்லாம் சமூகம் வாழ செய்ததொண்டு
கல்வியெனும் சாலையிலும் கடவுள் சந்நிதானத்திலும்
உம் பெயரை நிலைநிறுத்தி உலகமே வியந்து நிற்க
பிள்ளைகள், பேரர், பூட்டருடன் அகவை நூற்றிரண்டை
உவகையோடு கொண்டாட உலகமே போற்றட்டும்

அப்பாவே எங்கள் அன்பான மாமாவே ஆயிரம் கோடி வாழ்த்துக்கள்
பாட்டப்பா எங்கள் பூட்டப்பாவே பணிவோடு வாழ்த்துகின்றோம்
பதின்நான்காம் திகதி இன்று உங்கள் வாழ்வு
பத்தரைமாற்றுத் தங்கமையா
பங்கமில்லாத் தங்கமே இன்னும் பத்தாண்டு
காலம் வாழ வாழ்த்துகின்றோம்

வாழி நல்வளத்தோடு வாழி உடல் நலத்தோடு நீடூழி வாழி வாழி

இடைக்குறிச்சி,
வரணி.

(42350)(2.6)

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராக கடமையாற்றும் வே. கண்ணப்பமூர்த்தி அவர்களின் அன்பு மகன்

**உமாகாந்தன்**


அவர்கள் 12.01.2014 ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் அகால மரணம் அடைந்துள்ளார். அவருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, அவருடைய குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரி சங்கம்,
பச்சிலைப் பள்ளி. பளை.

(33078) (10.6)

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் செல்வரட்ணம்



உரும்பிராய் தெற்கைப்பிறப்பிடமாக வும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் செல்வரட்ணம் நேற்று (13.01.2014) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கண்மணியின் மருமகனும், குணமணியின் அன்புக் கணவரும், புஸ்பதாஸ், புஸ்பறஜனி, புஸ்பலதா, ஜோகராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கண்மணி, மலர்மணி, தவமணி, நடேசலிங்கம் மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், நிர்மலா, கஜேந்திரராஜா, ஜெயரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற பூபால சிங்கம், சங்கரலிங்கம் மற்றும் சிவசோதிநாதன் (லண்டன்), பரஞ் சோதி (நோர்வே), சோமநாதன் (லண்டன்), செல்வராணி (கனடா), மாணிக்கம் (சுவிஸ்) , பரமேஸ்வரன், ஜெயராணி, சறோஜா ஆகியோரின் மைத்துனரும், ஜதுனன், தர்சனன், அபிஷனா, வைஷ்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.01.2014) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுல் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 05.02.1952 — உதிர்வு 16.12.2013

அமரர்

**முருகேசு செல்லத்துரை**

(இளைப்பாறிய உத்தியோகத்தர்
இ.மி.ச. சாவகச்சேரி)

கடந்த 16.12.2013 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(14.01.2014) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை(15.01.2014) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டுத் துயரில் பங்கு கொண்டு ஆறுதல்கூறி உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துகொள்கின்றோம்.

குடமியன், வரணி. — குடும்பத்தினர். 021 3210458, 078 678 1747, 077 435 8586

## பொருத்தமான தமிழை பயன்படுத்தாவிட்டால் சட்ட நடவடிக்கை



கொழும்பு, ஜன.14

பெயர்ப் பலகைகள் தொடர் பாக பொருத்த மான தமிழ் வசனங்களைப் பயன்படுத்து மாறுஅரச கரும மொழிகள் ஆணைக் குழு அறிவுறுத்தி உள்ளது. அதனை நடைமுறைப் படுத்தா திருக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக் கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று அரச கரும மொழிகள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் ஆர்.ரணவக்க தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட அமைச் சுக்களின் செலவினத் தலைப் புக்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடும் விசேட நாடாளுமன்றச் செயற் குழுவில் வைத்தே மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ச-22)


## நாய்க்குட்டி விற்பனைக்கு

2 மாதங்கள் நிரம்பிய Grate dane
பெண் குட்டிகள் விற்பனைக்குண்டு

T.P 077 6053845

## முக்கிய அறிவித்தல்

மணிக்குரல் விளம்பர சேவை எமது விளம்பர சேவை யின் பெயரைக் கூறியார் விளம்பரம் கேட்டாலும் கொடுக்க வேண்டாம். குறிப்பாக எஸ்.விமலகாந்த் (தங்கவி) என்பவருடன் எவ்வித விளம்பரத் தொடர்பும் கொடுக்கல், வாங்கலும் வைத்துக் கொள்ள வேண்டாம் என அனைவரையும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

உரிமையாளர் : V.S. சந்துரன் T.P : 021 222 7535

(42244)(7.6.3)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980ஆம் ஆண்டு விசாக நட்சத்திரம் 12இல் செவ்வாய் (32) கிரக பாவமுடைய France PR உரித்துடைய மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு : 077 465 9570/077 900 4504

(சி/11006)(7.6.3)

## தவறிவிட்டது

க. கனகலிங்கம் (803124604v) என்பவருடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம், JOB I.C என்பன உரும்பிராய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடை யில் தவறிவிட்டன.

தொடர்பு:- 077 5167437

## கீரிமலை ஸ்ரீமகாமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான புனருத்தாரண சபையின் வருடாந்த பொதுக்கூட்டம்

1. இடம் : ஆலய முன்றில்
2. காலம் : இன்று (14.01.2014) மு.ப. 11 மணி

சகல உபயகாரர்களும் ஆலய புனருத்தாரண வேலைகளில் ஆர்வமுள்ளவர்கள், அடியார்கள், அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்.

(42352) (10.6)


## மரண அறிவித்தல்

### சிவப்பிரகாசம் சபாபதிப்பிள்ளை



நவாலியைப்பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் சபாபதிப்பிள்ளை நேற்று (13.01.2014) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம்- ஞானம் தம்பதியரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் (ஓய்வு நிலை ஆசிரியை, யா/ அருணோதயாக் கல்லூரி) அன் புக் கணவரும், சுரேஸ்(பிரான்ஸ்), றமேஸ் (T.O-திருகோணமலை),தினேஸ் (மகேஸ்வரி நிதியம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விசாலாட்சி (லண்டன்), காலஞ்சென்றவர் களான பர்வதம், மயில்வாகனம் மற்றும் சிவமணி (கனடா), புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் சகோதரரும், கௌசலா (ஆசி ரியர், கொழும்பு), கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலி-வடக்கு பிரதேச சபை மல்லாகம்) ஆகியோரின் மாமனும், ஆர்த்திகா, ஆருண்யா, தன்ய ஸ்ரீ ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.01.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4.00 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கேணிக்கரை, கட்டுறவாளர்வீதி, அளவெட்டி. குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06 - 04 - 1945
மறைவு 07 - 02 - 2012

அமரர் **நன்னியன் இரத்தினம்**

திதி: சதுர்தசி (14.01.2014)

ஆண்டி இரண்டு கழிந்தது அப்பா - இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியவில்லை
அருமையான உமது திருமுகத்தை மீண்டும்
அன்புடன் காண்பதற்கு தவிக்கின்றோம்.

சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி. (25522)(6.7.11) குடும்பத்தினர்.


## தைத்திருநாளில் வாடிக்கையாளர்களுக்கு இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

உங்கள் லீசிங் கனவு 2 மணி நேரத்தில்

- 2 மணி நேரத்தில் லீசிங் வசதி
- குறைந்த ஆவணங்கள்
- விசேட காப்புறுதி ஏற்பாடுகள்
- அதிகபட்ச செலுத்தும் காலம் 5 வருடங்கள்
- குறைந்த வட்டி வீதம்
- ஒரே முறையில் செலுத்தப்படும் கட்டுப்பணங்களுக்கு விசேட சலுகை



THE 2 HOUR DREAM
TFI LEASING

TRADE FINANCE & INVESTMENTS PLC
இல.74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2219997/8
தொலைநகல்: 021 222 1899
மின்னஞ்சல்: tradefij@sltnet.lk
இல.459, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 011 2688421, 0112 688422, 0112 698818
மின்னஞ்சல்: info@tfil.lk / இணையத்தளம்: www.tfil.lk




## அருள்மிகு ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த தைப்பொங்கற் பெருவிழா - 2014

நாககன்னியம்பாள் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான விஜய வருடம் மார்கழித்திங்கள் 23 ஆம் நாள் (07.01.2014) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்தோடு ஆரம்பமாகி தைத்திங்கள் முதல் நாள் (14.01.2014) மிருகசீரிட நட்சத்திரமும் சித்தமும் கூடிய காலை 8.00 மணியளவில் அபிஷேக அலங்காரத்தோடு சோடசதீப தூபங்களோடு நாககன்னியம்மன் நாகத்தில் திருவீதியுலா எழுந்தருளி தீமிதிப்பு வைபவம் நடைபெறும். அடியார்கள்அனைவரும் கலந்து எம் பெருமாட்டியைத் தரிசித்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கொடியேற்றம் : 07.01.2014 மார்கழி கடைசிச் செவ்வாய் உத்தரட்டாதி நட்சத்திர நாளில்**

**தைப்பொங்கல் : 14.01.2014 தை முதல் செவ்வாய்க்கிழமை பெரு விழாவும் 12.00 மணியளவில்**

### தீ மிதிப்பு வைபவம்

தீர்த்தம் கொடியிறக்கம் : 21.01.2014 செவ்வாய்க்கிழமை வைரவமடையும் நடைபெறும்

கிரியைகள் சிறப்புற நிகழ்த்துபவர்
ஆலய பிரதம சித்த ஞான குரு இந்திரன் ஐயா

உதவிக்குரு
செ. ஸ்ரீசுபாஸ்கர் (சுந்தர்)

தைப்பொங்கல் அன்று நடைபெறும் நிகழ்ச்சிகள்
பஜனைப்பாடல்கள் வழங்குபவர்கள் - ஆலய தொண்டர்கள் சைவச்சொற்பொழிவு

அருளாசியுரை
ஸ்ரீலஸ்ரீ. ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)

விடயம் : சக்தி சின்னமிலம்
நிகழ்த்துபவர் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர்
செ. கந்த சத்தியதாசன் M.A.J.P (வலிகாம ஆசிரிய ஆலோசகர்)

விடயம் : உள்ளம் பெருங்கோயில்
நிகழ்த்துபவர் : சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர்
க. நித்தியதசீதரன் (M.A)

விடயம் – ஆலயம் தொழுவது சாலவும் நன்று
நிகழ்த்துபவர் : இளஞ்சைவப்புலவர் கைலைநாதன் (ஆசிரியர்)

மங்கள வாத்தியம்

நாதஸ்வரச்சக்கவர்த்தி பாலமுருகன் குழுவினர் ஈழ நல்லூர்
தவில்வித்துவான் இராமநாதன் குழுவினர் (வட்டுக்கோட்டை)
கண்ணன் குழுவினர் (சித்தன்கேணி)

ஒலி அமைப்பு : ராஜன் சவுண்ஸ் சித்தன்கேணி

நன்றியுரை – க. இரட்ணேஸ்வரன் (ஓய்வு பெற்ற அதிபர்)

குறிப்பு : மெய்யடியார்கள் பண்பாட்டுக் கோலங்களுடன் வருகைதருவதுடன் அம்பாளின் விழாச்சிறப்புற தேங்காய் எண்ணெய் பூ பூமாலை விபூதி கற்பூரம் அர்ச்சனைப்பத்திரம் அனைத்தையும் கொடுத்து அம்பாளின் அனுக்கிரகங்களைப் பெற்றுய்யுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

சித்தன்கேணி 14.01.2014 — அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம் — அம்பாளின் தொண்டில் ஆலய சித்த ஞானகுரு இந்திரன் ஐயா ஆலயத்தொண்டர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமத்துவத்தை வளர்க்க திடசங்கற்பம் பூணுவோம்

## தைப்பொங்கல் வாழ்த்தில் ரணில்

கொழும்பு, ஜன.14
"உலகில் அமைதியையும், சமத்துவத்தையும், கருணையையும் மலரச் செய்ய இன்றைய தினம் திடசங்கற்பம் பூணுவோமாக" என எதிர்க் கட்சியினதும், ஐக்கிய தேசியக் கட்சியினதும் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தாம் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.
அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-
தைப்பொங்கல் கொண்டாட்டத்தின் அடிப்டையானது சுதந்திரம், சமத்துவம், இரக்கம், கருணை ஆகியவையாகும். அந்த அடிப்படையில் தமது மனக்கசப்புகளை விட்டுவிட்டு குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடி தங்களுக்கு மாத்திரமன்றி விலங்கினங்களுக்கும் இரக்கம், கருணை மற்றும் செஞ்சோற்றுக்கடன் செலுத்துவது இப்பண்டிகையின் விசேட அம்சமாகும்.
தமிழ் பஞ்சாங்கத்தின் பிரகாரம் தை மாத முதல் தினத்தில் இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. அரிசி, பால், சர்க்கரை கொண்டு பொங்கப்படும் பாற்சோறு பொங்கல் என அழைக்கப்படுகிறது. தை மாதத்தில் பொங்கல் பொங்கப்படும் தினம் தைப்பொங்கல் என்றழைக்கப்படும்.
தென்னிந்தியர்களின் பாரம்பரியத்தின் பிரகாரம் உருவாகி வரும் தைப்பொங்கல் வைபவம் உலகுவாழ் தமிழ் மக்களால் இன்று தங்களால் முடியுமானவரை கொண்டாடப்பட்டு வருகிறது.
தைப்பொங்கல் தினத்தைக் கொண்டாடும் தமிழ் மக்களுக்கு எங்களது வாழ்த்துகளைத் தெரிவிப்பதுடன், உலகில் அமைதியையும் சமத்துவத்தையும் கருணையையும் மலரச்செய்ய இன்றைய தினம் திடசங்கற்பம் பூணுவோமாக. (கு-சி)

# 16 முதல் தேர்தல் கண்காணிப்பு பணியை ஆரம்பிக்கின்றது கபே

கொழும்பு, ஜன.14
மார்ச் மாதம் நடைபெறவுள்ள மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல் கண்காணிப்பு பணிகளை கபே இயக்கம் ஜனவரி 16 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்போவதாக அதன் நிறை வேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.
கண்காணிப்புப் பணியை ஆரம்பிப்பதன் முதற்கட்டமாக கபே இயக்கத் தின் தேசிய தொடர்பாடல் மத்திய நிலையம் 2014 ஜனவரி 16 ஆம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
தேர்தல் கண்காணிப்புக் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"வேட்பு மனுத் தயாரிப்பு காலம், வேட்பு மனுத் தாக்கல் செய்யும் தினம் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கு 'கபே' இயக்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. தேர்தல் வன்முறை, தேர்தல் சட்ட மீறல், மக்களின் வாக்குரிமை பாதுகாப்பு, அநாவசிய பொதுச் சொத்துப் பாவனை, இலஞ்சம் மற்றும் தேர்தல் தவறுகள் தொடர்பிலும் இம்முறை கூடுதலாக அக்கறை செலுத்த 'கபே' இயக்கம் எதிர்பார்த்துள்ளது.
இல. 100/19 வெலிகடவத்த, ராஜ கிரிய எனும் இடத்தில் கபே இயக்கத்தின் மத்திய நிலையம் இயங்கும். 0114341514, 0114341524 என்ற தொலைபேசி மற்றும் 0112 866224 என்ற தொலைநகல், caffe2008 gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் கபே இயக்கத்திற்கு தகவல் வழங்க முடியும்" என்றார்.
கபே இயக்கத்தின் தேசிய அமைப் பாளராக அஹமட் மனாஸ், ஊடகப் பிரிவு பிரதானியாக அரவிந்த ரத் நாயக்க, விசாரணை பிரிவு பிரதானியாக ரத்திந்திர குருவிட்ட ஆகியோர் செயற்படுவர் என கபே இயக்கத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (கு-சி)

# ஹலாலுக்கு எதிராக மீண்டும் போராட்டம்

## பொது பல சேனா அறிவிப்பு

ஹலாலுக்கு எதிரான மாபெரும் போராட்டத்தை பெப்ரவரி மாத நடுப் பகுதிக்குள் கொழும் பில் ஆரம்பிக்கவுள் ளதாக பொது பல சேனா தெரிவித்துள் ளது.
ஹலால் ஒழிப்புப் போராட்டத்தை மஹியங்கனையிலிருந்து மீண்டும் ஆரம்பித்து விட்டதாகவும் அது தெரிவித்தது.
இப்போராட்டம் குறித்து அவ்வமைப்பின் நிறைவேற்று குழு உறுப்பினர் டிலாந்த வித்தானகே நேற்று தெரிவிக்கையில்,
"நாம் கடந்த வருடம் இந்த ஹலாலுக்கு எதிராக போராடி வெற்றி கண் டோம். அப்போது அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை ஹலாலை இலங்கையிலிருந்து முற்றாகத் தடை செய்வதாக உறுதியளித்தது. ஆனால், தற்போது மீண்டும் வேறொரு தனியார் நிறுவனத்திடம் இதை ஒப்படைத்து நாட்டில் பிரிவினைவாதத்தைத் தூண்டியுள்ளது.
ஹலாலை முஸ்லிம் மக்கள் பயன் படுத்துவதற்கு நாம் எதிர்ப்புத் தெரி விக்கவில்லை. அதை பிற சமூகங்கள் மீது திணிப்பதையே நாம் எதிர்க்கிறோம். அத்தோடு, இந்நாட்டின் சட்டத்திலும் ஹலாலுக்கு இடமில்லை. ஆகவே, இதை இந்நாட்டிலிருந்து முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் என்றுதான் நாம் போராடுகிறோம்.
நாம் ஏற்கனவே கூறியதைப் போன்று மீண்டும் ஹலால் ஒழிப்புப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். இதை தற்போதே மஹியங்கனையிலிருந்து ஆரம்பித்து விட்டோம். இதற்காக வீடு வீடாக, விகாரை விகாரையாக நாம் சென்று எமது பிரசாரங்களை முன்னெடுத்து வருகிறோம். அது மட்டு மல்லாது, அடுத்த மாத நடுப்பகுதிக்குள் கொழும்பில் மாபெரும் ஹலால் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளோம். தொடர்ந்தும் போராட்டங்களை நடத்தி ஹலாலை முற்றாக இல்லாதொழிப்போம்" என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ஏழு பேரின்

செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா கடிதம் மூலம் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.
தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள வலி.கிழக்குப் பிரதேச சபையின் வரவு செல வுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோல்வியடைந்தது. இதனால் சபைத் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார் பதவியிழந்துள்ளார்.
கடந்த 10 ஆம் திகதி இரண்டாவது தடவையாகவும் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது, ஆளுங்கட்சியான தமிழரசுக் கட்சியின் 7 உறுப்பினர்களும்,எதிர்க்கட்சியான ஈ.பி.டி.பியின் 5 பேரும் இணைந்து வாக்களித்து வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடித்திருந்தனர்.
கட்சியின் அறிவுறுத்தலையும் மீறி இவ்வாறு எதிர்த்து வாக்களித்து வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடித்திருந்தமையால் 7 உறுப்பினர்களும் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கப்படுவதாகக் கட்சியின் பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார்.
தம்பிராசா திருநாவுக்கரசு, இராமலிங்கம் கந்தசாமி, வைர முத்து சுப்பிரமணியம், தம்பிப்பிள்ளை நித்தியானந்தம், தம்பு ரவீந்திரன், கந்தையா தர்மலிங்கம், கந்தையாதுரைராசா ஆகியோரே கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது விசாரணைக் குழு அமைத்து நட வடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (த-5)

## ஒபாமாவுக்கு

நள்ளிரவு 12 மணியளவில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. 19ஆம் திகதி அனை வரும் வெளியில் கொண்டு வரப்பட்டனர். இதன்போது நான் அறிந்த சில விடயங்களைக் கூறவேண்டும். ஏனெனில் அந்தச் சந்தர்ப்பங்களில்இவற்றைக்கூறவில்லை. தற் போது அவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கூறவேண்டும். வரலாற்றில் இவை அறிக்கைப்படுத்தப்படவேண்டும்.
அப்போது இருந்த நிலைமை என்ன? அந்த இறுதி 5 தினங்களில் என்ன நடந்து என்று எனக்கு நன்றாகத் தெரியும்.
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, எமது ஜனாதிபதியுடன் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு போரை நிறுத்து மாறு அழுத்தம் கொடுத்தார். இல்லையேல் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி விடுதலைப் புலிகளைக் காப்பாற்றுவோம் எனக் குறிப்பிட்டார்.
ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் போரை நிறுத்து மாறு தொலைபேசி யூடாகத் தொடர்பு கொண்டு கூறினார். கனேடியப் பிரதமர், பிரிட்டன் பிரதமர் ஆகியோரும் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு போரை நிறுத்துமாறு கூறினர். எனக்கு ஞாபகம் இருக்கிறது. மே 13ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரை அமைச்சரவை கூடிப் பேச்சு நடத்தியது. அன்று காலை ஜனாதிபதி ஜோர்தான் நாட்டுக்குச் சென்றிருந்தார். நான் வரும்வரை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுடன் இதைத் தொடருங்கள். எவருக்கும் அடிபணிய இடமளிக்க வேண்டாம் என்று கூறினார்.
இதுதான் எமது நாட்டின் தீர்மானம் மிக்க தருணம். அந்தச் சமயத்தில் ஜனாதிபதி உறுதியாகத் தீர்மானம் எடுத்தார் என நான் நினைக்கிறேன். அன்று ஜனாதிபதி தமது உறுதியிலிருந்து தளர்ந்திருந்தால், அமெரிக்கர்கள் வந்து பிரபாகரனை மீட்டுக்கொண்டு சென்றிருப்பர். அவ்வாறான நிலை ஏற்பட இடமளிக்கப்படவில்லை. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
அன்று போரை முடிவுக்குக் கொண்டுவந்ததே இன்று சர்வதேச நாடுகள் எம்மை ஜெனீவாவுக்கு அழைத்துச் செல்வதற்குப் பிரதான கார ணமாக உள்ளது. அதைவிடுத்து, தமிழ் மக்கள் மீது உள்ள அக்கறையில் இல்லை" - எனத் தெரிவித்துள்ளார். (கு-சி)

## மினி

ளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.
யாழ்.மாவட்டத்தின் புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் உதய பெரேரா கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றிருந்தார். இதன் பின்னரே இந்த நடவடிக்கைகள் அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
அளவெட்டி, அம்பனை, விளான், இளவாலை, பண்டத்தரிப்பு, தொட்டிலடி, சண்டிலிப்பாய், அரியாலை, நாவற்குழி பாலத்தில் அமைந்துள்ள மினிமுகாம் என்பனவே கடந்த இரு தினங்களாக அகற்றப்பட்டு வருகின்றன. இந்த மினி முகாம்கள் மிக நீண்ட காலமாக அந்தப் பகுதிகளில் இயங்கிவந் தவையாகும்.
அந்த முகாம்களில் இருந்த தளபாடங்கள் மற்றும் ஏனைய பொருள்கள் இராணுவ வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன. எஞ்சிய முகாமை படையினர் நிர்மூலமாக்கி விட்டுச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இவ்வாறு மினிமுகாமை மூடும் படையினர், அந்தப் பகுதியிலுள்ள பெரிய முகாம்களுக்கு மாற்றப்படுகின்றனர்.
வடக்கில் படையினரின் பிரசன்னத்தைக் குறைக்க வேண் டும் என்று சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலையில், இராணுவம் முகாம்களை இடமாற்றும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.(த-5)

## ஐக்கியத்தின்

இன்று தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் இலங்கை வாழ் இந்துக்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரி விப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். தை மாதத்தின் முதல் நாளைக் குறித்து நிற்கும் இவ்விசேட பண்டிகையான தைப்பொங்கல் சிறந்த அறுவடையைத் தந்த சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் வகையில் இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு விசேட பண்டிகையா கும்.
இப்பண்டிகையின் விசேட அம்சமான பாலும் சோறும் பொங்கவைப்பதைக் குறித்து நிற்கும் பொங்கலானது சூரிய பகவானின் ஆசீர்வாதத்துடன் வாழ்க்கையில் புதிய சந்தர்ப்பங்களுக்கான ஆரம்பமாகக் கருதப்படுவதுடன், அறுவ டையின் முதற்பகுதி சூரிய பகவானுக்கு படையல் செய்யப்படும்போது இது 'சூரிய மாங்கல்ய மாகவும்' குறிப் பிடப் படுகிறது.
இப்பண்டிகை சிறந்த அறுவடைக்காக சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துவதிலும் எதிர் வரும் வருடத்தி லும் சிறந்த அறுவடையும் வெற்றிகளும் தொடர்ச்சியாகக் கிடைக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பிலும் மிகுந்த அன்பு மற்றும் புரிந்துணர்வுடன் குடும் பங்களையும் சமூகங்களையும் ஒன்றிணைக்கின்றது. இப்பண்டிகையின் இரண்டாவது நாள் நிலத்தை உழுதல், பயணம் செய்தல் மற்றும் பால், உரம் போன்றவற்றுக்காகப் பயன்படும் தமது கால் நடைகளுக்கு கௌரவம் அளிக்கும் ஒரு விசேட பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது.
தைப்பொங்கல் பண்டிகை மனிதர்களுக்கும்இயற்கைக்குமிடையேயான பலமான பிணைப்பை ஏற்படுத்துவதுடன் நாளாந்த வாழ்விலும் தெய்வ வழிபாட்டிலும் மக்களினதும் சமூகங்களினதும் ஐக்கியத்தை அடையாளப்படுத்தி நிற்கிறது. இது எமது நாட்டில் சமாதானத்திற் காகவும் மக்கள் மத்தியிலான நல்லிணக்கத்திற்காகவும் நன்றி செலுத்தும் சந்தர்ப்பமாகும்.
இலங்கை வாழ் இந்துக்களுக்கு எனது இனிய தைப் பொங்கல் வாழ்த்துக்கள். (கு-சி)

## இந்திய

பட்டுள்ளனர். இதேவேளை திருகோண மலையில் கைது செய்யப்பட்டிருந்த 143 மீனவர்களும் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.
நேற்று மட்டும் 163 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இந்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 20 பேரும் நேற்று விடுதலையாகினர்.
இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையில் சென்னையில் எதிர்வரும் 20 ஆம் திகதி பேச்சு இடம்பெறும் என்றும் அதற்கு முன்னதாக இரு தரப்பிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் விடுவிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
தமிழகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் 179 பேர் விரைவில் விடுவிக்கப்படுவர் என்று தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா கடந்த சில தினங் களுக்கு முன்னர் அறிவித்தி ருந்தார்.
தமிழகச் சிறைகளில் மாத்திரமல்ல இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முழு இலங்கை மீனவர்களும் விடு விக்கப்பட வேண்டும் என்றும், சென்னையில் 20 ஆம் திகதி பேச்சு சாத்தியமில்லை என்றும் கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில் மல்லாகம் மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்களின் உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 50 பேருக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் மல்லாகம் நீதிமன்றத்தால் 20 இந்திய மீனவர்கள் மட்டும் விடுவிக்கப்பட்டனர். எஞ்சியோர் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.
இதேவேளை யாழ்ப்பாணச் சிறைகளில் நூற்றுக்கு மேற்பட்ட இந்திய மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## ஐ.நா. மனித

மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடத் தப்படவுள்ளது.
இதற்கு மேலதிகமாக அமெரிக்காவினால் இலங்கை தொடர்பான பிரேரணை ஒன்றும் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.
மனித உரிமைகள் சபையின் 25 ஆவது அமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த அமர்வு மார்ச் 28 ஆம் திகதி வரை இடம்பெறும்.
இந்த அமர்வில் 23 ஆவது விடயமாக இலங்கை விவகாரம் உள்ளடக்கப்பட்டுள்ளது. AHRC 25/23 என்ற இலக்கத்தில் இலங்கைதொடர்பிலான அறிக்கை பின்வருமாறுகுறிப்பிடப்பட்டுள்ளது.
இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத் துக்காக ஐக்கிய நாடுகள் சபை யின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத் தினால் ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங் குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## பரீட்சை

ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரையிலும், சாதாரணதரப் பரீட்சை டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையிலும், ஐந்தாந்தர புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 17 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (த-5)

## காணி

கின்றது. போருக்குப் பின்னர் ஏற்பட்டிருந்த காணிகள் சொத்துக்களுக்கான கேள்வியில் ஏற்பட்ட திடீர் வீழ்ச்சியும் பொது மக்களின் பெரும் தொகையான காணிகளை அரசு பறித்துக் கொண்டமையுமே இந்த வீழ்ச் சிக்கான காரணம் என்று கூறப்படுகின்றது.
யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் காணி விற்பனையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான காரணம் என் றும் சமூக ஆர்வ லர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (உ-5)

## தமிழீழத்தை

உலகெங்கும் உள்ள தன்மானத் தமிழர்கள் இந்தப் பொங்கல் திருநாளில் சபதம் ஏற்போம்" என்று அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.
தமிழர்களின் தைத் திருநாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### தேசியத் திருவிழா

உலகத்தில் மனித குலத்தின் பசி போக்கிடும் உணவு, தானியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள், இயற்கையின் அருட்கொடையான நிலத்துக்கும் பயிர் செழிக்கப் பயன்படும் உழவு மாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கின்ற விழா தான் தைப் பொங்கல் திரு விழாவாகும். பண்டைக் காலம் முதல் தமிழர்கள் கொண்டாடும் தேசியத் திருவிழாவாகும்.

### ஈழப் படுகொலை

மனிதகுல வரலாற்றில் எந்த ஒரு தேசிய இனத்துக்கும் இழைக்கப்படாத கொடுமையும், படுகொலையும் இலங்கைத் தீவில் ஈழத்தமிழ் இனத்திற்குச் சிங்களப் பேரினவாத அரசால் இந்திய காங்கிரஸ் அரசின் துணையோடு நடத்தப்பட்டது.
துன்ப இருளில் இன்னமும் தவிக்கும் ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைக்க - விடியலின் வெளிச்சத்தை அவர்கள் காண - சுதந்திரத் தமிழ் ஈழம் ஒன்றே தீர்வா கும். அந்த இலக்கை அடை வதற்கு உலகெங்கும் உள்ள தன்மானத் தமிழர்கள் இந்தப் பொங்கல் திருநாளில் சபதம் ஏற்போம்.
வருங்காலம் தமிழர்களுக்கு ஒளிமயமான காலமாக அமையும் என்ற நிறைந்த நம்பிக்கையுடன் தாய்த் தமிழகத்திலும், தமிழ்ஈழத்திலும், தரணி எங்கும் வாழும் தமிழர்களுக்கு நேச உணர்வுடன் இனிய பொங்கல் வாழ்த்துகளை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன் - என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணச் சமரில் இன்று பாடும்மீன்- ஞானமுருகன் மோதல்

யாழ்ப்பாணம், ஜன.14
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட் டுக்கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மின்னொளியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் பணிப்பாளர் எஸ். கணேசநாதன், கௌரவ விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி மோகனதாஸ், யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி போதனாசிரியர் இளம்பிறையன், யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிதிக் சஞ்சீவ, ஊரெழு இராணுவப் பொறுப்பதிகாரி கப்டன் குமார, ஊரெழு கணேச வித்தியாலய அதிபர் கிரிதரன், யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் அன்ரனிப்பிள்ளை, பருத்தித்துறை லீக்கின் தலைவர் வேதாபரணம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் நவரட்ணராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.
(த-23)

## கிரிக்கெட் இறுதி ஆட்டம்



யாழ்ப்பாணம், ஜன.14
சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் பொங்கல் விழாவை முன்னிட்டு நடத்திய மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் உப தலைவரும் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான க.உஷாந்தன் தலைமையில் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஐயாத்துரை தவேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (த-23)

## இன்று நடைபெறும் தாச்சிப் போட்டி



யாழ்ப்பாணம், ஜன.14
தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வடமாகாண விளையாட்டுத் திணைக்களமும் யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கமும் இணைந்து தாவடி காளியம்பாள் மைதானத்தில் நடத்திய யாழ். மாவட்ட ரீதியிலான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று இறுதிச் சுற்றில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகமும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் ராஜரணசிங்கவும் கௌரவ விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.ஆனல்ட்டும் கலந்து கொள்வர். (ஒ-288)

## அராலி மாவத்தை வி.கவின் பொங்கல் விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன.14
அராலி மாவத்தை விளையாட்டுக்கழகத்தின் 125 ஆவது ஆண்டு உழவர் திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று நண்பகல் 12 மணிக்கு மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
முதல் நிகழ்வாக கைக்கொடி மாட்டுச் சவாரிப் போட்டி இடம்பெறும்.
தொடர்ந்து ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி, மகளிருக்கான சங்கீதக்கதிரைப் போட்டி, நட்பு ரீதியான உதைபந்தாட்ட போட்டி என்பன இடம்பெறும்.
சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ந்து வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இடம்பெறும்.
இதில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார். (த-23-86)

## கலைவாணி, பொற்பதி அணிகள் வெற்றி

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 'பி' பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்களில் நேற்று முன்தினம் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை கலைவாணி, கொக்குவில் பொற்பதி அணிகள் வெற்றி பெற்றுள்ளன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.முஸ்லிம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## தைப்பொங்கல் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.14
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் தைப்பொங்கல் விளையாட்டு நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன.
இதில் இளவாலை சித்திரமேளி வயல்வெளியில் பட்டம் ஏற்றும் போட்டி இடம்பெறும். அதனைத் தொடர்ந்து இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்க மைதானத்தில் பாரம்பரிய நிகழ்வுகள் இடம்பெறும்.
பிற்பகல் 3 மணிக்கு பெண்களுக்கான காட்சிக் கபடிப் போட்டி இடம்பெறும். இதில் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை இளைஞர் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## இறுதியாட்டம் இன்று



யாழ்ப்பாணம், ஜன.14
சாவகச்சேரி லிகோரியார் விளையாட்டுக்கழகம் புது வருடத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி லிகோரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாவகச்சேரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இதில் பிரதம விருந்தினராக லிகோரியார் ஆலய பங்குத்தந்தை ஜோசப் பிரான்சிஸ், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் சூ.அலெக்ஸாண்டர் ஆகியோர் கலந்துகொள்வர். (த-23)

## ஸ்ரீ அம்பாள் வி.கவை வீழ்த்தியது டயமன்ஸ்

யாழ்ப்பாணம், ஜன.14
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)


## கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது ஆவரங்கால் மத்தி





வலி.வடக்கு.ஜன.14
யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் முதல் தடவையாக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கடற்கரைக் கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.
காரைநகர் கசூரினா கடற்கரையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.
இரு அணிகளும் சமபலம் கொண்ட அணிகள் என்று கூறினாலும் கூட புதிய ஆடுகளமும் போதிய கடற்கரைப் பயிற்சி இன்மையும் ஆரம்பத்தில் தடுமாறச் செய்தாலும் அதனைச் சமாளித்து இரு அணிகளும் மோதிக் கொண்டன.
மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களையும் ஆவரங்கால் மத்தி விளையாட் டுக் கழகம் முறையே 21:19 , 21:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது.
இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வெ.ஆனைமுகன் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வெளியேறினார் வீனஸ்

ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் தோல்வியடைந்து வெளியேறினார்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடப்பு ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆஸ் திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் நேற்று ஆரம்பமான்து.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அமெரிக் காவின் வீனஸ் வில்லியம்ஸ், ரஷ்யாவின் மகரோவாவை எதிர்கொண்டார்.

இதன் முதல் செற்றை 62 என கைப்பற்றிய வீனஸ் வில்லி யம்ஸ், இரண்டாவது செற்றை 46 என கோட்டைவிட்டார். வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் சொதப்பலாக செயல்பட்ட வீனஸ் வில்லியம்ஸ் 46 என பறி கொடுத்தார்.

முடிவில், அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 62, 46, 46 என தோல்வியடைந்து வெளியேறினார். மற்றொரு முதல் சுற்று போட்டியில் சீனாவின் லீ நா, குரோசியாவின் ஆனா கான்ஜூவை 62, 60 என வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றார். மற்றொரு முதல் சுற்று போட்டியில் ஜெர்மனியின் கெர்பர், ஆஸ்திரேலியாவின் ஜார்மிலாவை 63, 06, 62 என வீழ்த்தினார். பிற போட்டிகளில் ஆஸ் திரேலியாவின் சமந்தா ஸ்டோச்சர், செர்பி யா வின் இவானோவிச் ஆகியோர் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர். (த)

# அரோன் பின்ச் அதிரடிச் சதம் ஆஸ்திரேலியா அபார வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி 5 போட் டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

மெல்போர்னில் நடந்த இப்போட்டியில், இங்கிலாந்து முதலில் களமிறங்கியது.

இங்கிலாந்துஅணிக்குஅணித் தலைவர் குக்(4) சொதப்பல் ஆரம்பம்அளித்தார். தொடர்ந்து வந்த ஜோ ரூட்(3) ஏமாற் றினார். பெல்(4) ஓரளவு கை கொடுக்க, மார்கன் (50) அரை சதம் கடந்து வெளியேறினார். கடைசி நேரத்தில் பட்லர், பிரஸ்னன் அதிரடியாக ஓட் டங்கள் சேர்க்க, இங்கி லாந்து அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்கு களுக்கு 269 ஓட்டங்கள் எடுத்தது.

கடின இலக்கைத் துரத்திய ஆஸ்திரேலிய அணிக்கு பின்ச், வோர்னர் ஜோடி அசத்தல் தொடக்கம் அளித்தது.

இங்கிலாந்து பந்துவீச்சை எளிதாக சமாளித்த பின்ச், ஒருநாள் அரங்கில் தனது 2ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார். மறுபுறம் வோர்னர் (65) அரைசதம் கடந்து ஆட்டமிழக்க, அடுத்து வந்த கிளார்க்கும் 44 ஓட்டங்களில் வெளியேறினார்.

முடிவில் ஆஸ்திரேலிய அணி 45.4 பந்துப்பரிமாற் றங்களில் 4 இலக்குக்கு 270 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. (த)




ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற் கொண்டு பாகிஸ்தானுக்கு எதி ரான டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றியுள்ள இலங்கை அணி, இத்தொடரில் சிறப்பான போராட்ட குணத்தை வெளிப்படுத்தியுள் ளதாக அவ்வணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

இந்தத் தொடரின் முதலாவது போட்டியின் முதல் இனிங்ஸில் இலங்கை அணி மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் அதன் பின்னர் சுதாக ரித்துக் கொண்டு சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்தி முதலாவது போட்டியை வெற்றி தோல்வி யின்றி முடித்திருந்தது.

இரண்டாவது போட்டி நேற்று முன் தினம் நிறை வடைந்த நிலையில், அப்போட்டியில் இலங்கை அணி 9 இலக்குகளால் இலகுவான வெற்றியைப் பெற்றருந்தது. இந்த நிலையில் கருத்துத் தெரி வித்த அஞ்சலோ மத்தியூஸ், 'தொடர்ந்தும் போராடிக் கொண் டிருக்க வேண்டும் எனவும் கிரிக்கெட் என்பது அதையே வேண்டி நிற்பதாகவும் தெரிவித் தார்.


முதலாவது போட்டியில் அவ்வா றான போராட் டத்தை வெளிப் படுத்தியதாலேயே போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித் துக் கொள்ள முடிந்ததாகக் அவர் குறிப்பிட்டார்.

இரண்டாவது போட்டியில் பெறப் பட்ட வெற்றி மிக அற்புதமான வெற்றி எனக் குறிப்பிட்ட அஞ் சலோ மத்தியூஸ், ஒட்டுமொத்த அணியும் இந்த வெற்றியில் பங்காற்றியிருந்ததாகக் குறிப் பிட்டார். துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டதாகக் குறிப்பிட்ட அஞ்சலோ மத்தியூஸ், தங்களது இலக்கு களை இலகுவாக இழக்க அவர்கள் விரும்பியிருக் கவில்லை எனவும் தொடர்ந் தும் போராடினார்கள் எனவும் குறிப்பிட்டார். (த)

# மீண்டும் வருவாரா வெற்றோரி?

இந்தியாவுக்கு எதிரான தொடரில் நியூசிலாந்தின் வெற்றோரி பங்கேற்பது கடினம் என தகவல்கள் தெரிவிக் கின்றன.

நியூசிலாந்து அணியின் சகலதுறை வீரர் டானியல் வெற்றோரி(வயது 34). இதுவரை 112 டெஸ்ட்(360 இலக்கு), 275 ஒருநாள்(284 இலக்கு), 33, 20/20 (37 இலக்கு) போட்டி யில் விளை யாடி உள் ளார்.



முதுகுப்பகுதியில் ஏற் பட்ட காயத்தால் அவ திப்பட்டு வரும் வெற் றோரி, இந்தி யாவுக்கு எதிராக எத்ர்வரும் 19 ஆம் திகதி சொந்த மண் ணில் தொடங்க வுள்ள ஒருநாள் தொடரில் பங் கேற்க மாட்டார் எனத் தெரிகிறது.

இந்த மாத இறுதியில் ஆஸ்திரேலி யாவிலிருந்து தாயகம் திரும்பும் இவர், அணி பயிற்சியாளர் மைக் ஹசன், அணித்தலைவர் பிரண்டன் மக்கலத் தைச் சந்திக்கவுள்ளார்.

இதன்பின்னரே எதிர்காலப் போட்டியில் இவரின் பங்களிப்புக் குறித்துத் தெரிய வரும். இதற்கிடையே எதிர்வரும் 27 ஆம் திகதியுடன் 35 வயதை எட்டவுள்ள அவர், விரைவில் ஓய்வு அறிவிப்பை வெளியிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய இளைஞர் அணி பலமாகவுள்ளது - டோனி

இந்தியாவின் இளைய அணி தற்போது பலமான நிலையான ஓர் அணியாக உள்ளதாக இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவித்துள்ளார். நியூசிலாந்துக்கான சுற்றுப் பயணத்துக்கு முன்னராகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இந்திய அணி நியூசிலாந்தில் வைத்து ஐந்து ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. இத்தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. இந்த தொடருக்கு முன்னதாக இந்திய அணி தென்னாபிரிக்காவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த நிலையில், அத்தொடரின் முதலாவது போட்டியில் வெற்றி தோல்வியற்ற முடிவைப் பெற்றிருந்தது. இளைய அணியான அவ்வணியின் இப்பெறுபேறு சிறப்பானதாகக் கருதப்பட்டது. அதனைச் சுட்டிக்காட்டிய மகேந்திரசிங் டோனி, இந்திய அணியில் அதிக மாற்றங்கள் காணப்பட்ட போதிலும் இளைய வீரர்கள் அனைவரும் இந்தியாவில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியிருந்ததன் காரணமாக அவர்களால் தென்னாபிரிக்காவில் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்த முடிந்ததாகக் குறிப்பிட்டார். தென்னாபிரிக்காவில் வைத்து இந்தியாவின் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயற்படமாட்டார்கள் என ஏராளமானோர் எதிர்பார்த்ததாகக் குறிப்பிட்ட மகேந்திரசிங் டோனி, பந்துவீச்சாளர்கள் மீதும் அவ்வாறான சந்தேகம் காணப்பட்டதாகக் குறிப்பிட்டார்.



தற்போது இந்தியாவின் ஒருநாள் சர்வதேசப் போட்டி, டெஸ்ட் அணிகள் நிலையான அணிகளாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்ட டோனி, இதுவொரு சிறப்பான நிலை எனக் குறிப்பிட்டார். (த-400)

# ஆஸியை பழிதீர்த்த இங்கிலாந்து மகளிர்

பெண்கள் ஆஷஸ் தொடரின் ஒற்றை டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து பெண்கள் அணி வெற்றி பெற்றுள்ளது. ஆஸ்திரேலியாவின் எலைஸ் பெரி சிறப்பாகப் போராடிய போதிலும் அவரது அணியால் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.
பேர்த் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்துப் பெண்கள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சார்பாக அர்றன் பிரின்டில் 68 ஓட்டங்களையும் நட்டாலி சிவர் 49 ஓட்டங்களையும் லிடியா கிறீன்வே 22 ஓட்டங்களையும் பெற அவ்வணி முதல் இன்னிங்ஸில் 201 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் ஆஸ்திரேலியப் பெண்கள் அணி சார்பாக றேனே புரெல் 4 இலக்குகளையும் எலைஸ் பெரி 3 இலக்குகளையும் சாரா கோய்ற் 2இலக்குகளையும் ஹோலி பேர்லிங் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
அடுத்து தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி சார்பாக எலைஸ் பெரி 71 ஓட்டங்களையும் ஜோடி பீட்ஸ் 43 ஓட்டங்களையும் எரின் ஓஸ்போர்ண் 40 ஓட் டங்களையும் பெற, அவ்வணி 207 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக அனியா ஷ்ரப்சோல் 4 இலக்குகளையும் கேற் குறொஸ் 3 இலக்குகளையும் கத்தரின் பிறன்ட், ஜெனி கண் மற்றும் நட்டாலி சிவர் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சார்பாக சார்லட் எட்வேர்ட்ஸ் 56 ஓட்டங்களையும் ஜெனி கண் 44 ஓட்டங்களையும் அனியா பிறின்டில் 35 ஓட்டங்களையும் நட்டாலி சிவர் 23 ஓட்டங்களையும் பெற, அவ்வணி 190 ஓட்டங்களைப் பெற்றனர்.
பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக எலைஸ் பெரி 5 இலக்குகளையும் றேனே புரெல் 3 இலக்குகளையும் சாரா கோய்ற் மற்றும் எரின் ஒஸ்போர்ண் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
185 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடியஆஸ்திரேலிய அணி சார்பாக எலைஸ் பெரி 31 ஓட்டங்களையும் சாரா எலியட் 29 ஓட்டங்களையும் எலைஸ் விலனி 21 ஓட்டங்களைப் பெற்ற போதிலும் அவ்வணி 123 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 61 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக அனியா ஷ்ரப்சோல், கேற் குறொஸ் இருவரும் தலா 3 இலக்குகளையும் கத்தரின் பிறன்ட், ஜெனி கண் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இப்போட்டியின் சிறந்த வீராங்கனையாக ஆஸ்திரேலியாவின் எலைஸ் பெரி தெரிவானார். (த-400)

# பிறீமியர் லீக் உதைபந்து முடிவுகள்

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளில் மன்செஸ்ரர் சிற்றி, லிவர்பூல் அணிகள் வெற்றிபெற்றன.
மன்செஸ்ரர் சிற்றி அணிக்கும், நியூகாசில் யுனைட்டட் அணிக்குமிடையிலான போட்டியில் மன்செஸ்ரர் சிற்றி அணி 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றுக் கொண்டது.
மன்செஸ்ரர் சிற்றி அணி சார்பாக டின் செக்கோ 8 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் பெற்று, அவ்வணிக்கு முன்னிலையை வழங்கியதோடு, 75ஆவது நிமிடத்தில் அல்வரோ நிக்றேடோ பெற்ற கோல் அவ்வணியின் வெற்றியை மேலும் உறுதி செய்தது. லிவர்பூல் அணிக்கும், ஸ்ரோக் சிட்டி அணிக்குமிடையிலான போட்டியில் லிவர்பூல் அணி 5 - 3 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.
இப்போட்டியில் 5ஆவது நிமிடத்தில் ஸ்ரோக் சிற்றி அணியின் றயன் ஷாவ்குறொஸ் ஒவ்ண் கோல் ஒன்றை அடித்து லிவர்பூல் அணிக்கு முன்னிலையை வழங்கியதோடு, 32ஆவது நிமிடத்தில் லிவர்பூலின் லூயிஸ் சுவரேஸ் கோலொன்றைப் பெற்று 2 - 0 என்ற முன்னிலை வழங்கினார். ஆனால் ஸ்ரோக் சிற்றி பதிலடி வழங்கி 39ஆவது நிமிடத்தில் பீற்றர் குரோச், 45ஆவது நிமிடத்தில் சார்லி அடம் ஆகியோரின் கோல்களின் உதவியுடன் 2 - 2 என்ற கோல் சமநிலையைப் பெற்றது. இரண்டாவது பாதியில் 51ஆவது நிமிடத்தில் லிவர்பூலின் ஸ்டீவன் கெரார்ட் பெனால்ட்டி உதையொன்றைக் கோலாக்கியதுடன், 71ஆவது நிமிடத்தில் லூயிஸ் சுவரேஸ் கோலொன்றைப் பெற்றுக் கொடுத்தார். 85ஆவது நிமிடத்தில் ஸ்ரோக் சிற்றியின் ஜொனதன் வோல்ட்டர் கோலொன்றைப் பெற்ற போதிலும், 87ஆவது நிமிடத்தில் டானியல் ஸ்டரிட்ஜ் கோலொன்றைப் பெற்று, லிவர்பூல் அணி 5 - 3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெறுவதை உறுதி செய்தார்.

(400)

**தமிழர் திருநாளில் இனிய சலுகைகள்**
**இன்று 20 வீத கட்டணக்கழிவு** (நிபந்தனைகளுடன்)

ஆஸி குடும்ப விசாவில் இணைந்தால்

சிங்கப்பூர் படிக்க & 80,000/= வரை உழைக்க

சைப்பிரசில் படிக்க ஒரு இலட்சம் வரை உழைக்க IELTS தேவையில்லை

நியூசிலாந்தில் படிக்க உழைக்க IELTS தேவையில்லை

கனடாவில் படிக்க உழைக்க

7 நாள்களும் (இன்றும்)
காலை 8 முதல் மாலை 6 மணிவரை திறந்திருக்கும்

**திசைகாட்டி (பிறை)லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
www.thisalvisa.com
(42250)(10.6)

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில் புரிவோர் இணைய முடியும்.

"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் இப்பயிற்சியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 18.01.2014 சனிக்கிழமை
1. காலை 8.00 - 10.00
2. காலை 10.00 - 12.00
3. காலை 11.30 - 01.00
4. மாலை இடமில்லை

வார நாள் பிரிவுகள் ஆரம்பம் 20.01.2014 (திங்கள்,புதன்)
1. காலை 9.00 - 11.00
2. காலை 11.00 - 01.00

குறிப்பு - 3 மாதங்களில் ஆங்கிலம் சரளமாக பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் மீள வழங்குவதற்கான உத்தரவாதம்.

**SAAMSON** LANGUAGE SCHOOL 173, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

**WANTED RECEPTIONST**

ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்த பெண் வரவேற்பு உபசரிப்பாளர் (Receptionst) யாழ் நகரில் உள்ள தொடர் மாடி மனைத் தொகுதி "துளசி மஹால்" (Thulasi Mahal) இக்குத் தேவை.

விவரங்களுக்கு:
திருமதி டெனிஸ் : 071 273 6867
PENINSULAR PROPERTY DEVELOPERS (PVT) LTD
10, Albert Crescent,
Colombo-07.

குறிப்பு : சிங்களம் பேசத் தெரிந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.
(சி/10784) (7.6.3)

**German Institute**
இன் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன்
Germany யிலிருந்து வந்த ஆசிரியரால் நடைபெறுகிறது.
அடுத்த பிரிவு - 17.01.2014 வெள்ளிக்கிழமை அன்று ஆரம்பம்
இது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட
யாழ் நகரில் ஒரே ஒரு நிறுவனம்
10, Palaly Road, Jaffna. ஆரியகுளத்தடி
Mrs. Kajenthini. 077 160 4823

**DIPLOMA IN ENGLISH**
Grammar + Spoken 3Months முழுமையான பயிற்சிநெறி
2013 O/L மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகள்
20.01.2014 திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

**DIPLOMA IN MOBILE REPAIRING**
புதிய பிரிவு 18.01.2014 சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் மூலம் முழுவதுமான செயல்முறை ரீதியாக பயில்விக்கப்படும்.
For More Details:
SofTTech Computer Education
306, Kandy Road, Pungankulam Junction
Ariyalai.Jaffna
T.P: 021-221-1220, 077 9122997

**உதவியாளர் தேவை**
சிங்களம் சரளமாக உரையாடக்கூடியவரும் கணினி கையாளத்தெரிந்தவரும் 25 வயதிற்கு உட்பட்ட ஆண் ஒருவர் பிரபல தனியார் கைத்தொலைபேசி நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளைக்கு வேண்டப்படுகிறார்
தொடர்புகளுக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும்
காலம் : 16.01.2014
நேரம் : மு.ப. 10.00 மணி - 12.00 மணி
ராம் சுப்பர்சிற்றி
306 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
Aat (Srilanka)
Foundation, Intermediate, Final
Qualification : G C E O/L 6 PASSES
Or GCE A/L 2 PASSES
MEDIUM - TAMIL & ENGLISH

Certificate Course in English
Week end classes

Spoken Sinhala
Week end classes

Further Details: JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
021 222 3382

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஆடுகளம் தயார்

உதயன்
வாசகர்களுக்கு
எமது உளம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்



## பொங்கல் சிறப்பிதழ்

14.01.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளடியன் கோதாவுக்கு ஆடுகளம் தயார்

தர்சன்



கழுத்து மயிர்கள் சிலிர்த்துக் கிளம்பி நிற்க, ஒன்றையொன்று முறைத்துப் பார்த்தபடி நிலைத்து நிற்கும் அந்த இரு சேவல்களும் திடீரென பறந்து பறந்து ஒன்றையொன்று தாக்கத் தொடங்குகின்றன. சுற்றிவர நிற்கும் மக்கள் கூட்டம் ஆரவாரித்து ஆர்ப்பரிக்கிறது. தோற்றவர்கள் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு செல்ல, வென்ற சேவல்களின் உரிமையாளர்களின் திணாவெட்டுப் பேச்சுக்களால் அந்தப் பகுதி நிறைகிறது.

இது ஒன்றும் 'ஆடுகளம்' தமிழ் சினிமாவில் வரும் காட்சிகள் அல்ல. பொங்கல் கழிந்த மறுநாளான நாளை யாழ். குடாநாட்டில் நடக்கப்போகும் உண்மையான ஆட்டம். ஆடுகளம் தயாராகிவிட்டது. சேவல்களும் தயாராகிவிட்டன. நடுவர்கள் களம் புக ஆவலோடு காத்திருக்கிறார்கள். சண்டைக்குத் தயாராக வன்னியில் இருந்தெல்லாம் சேவல்கள் வருகின்றன. 'வெள்ளடியன் கோதா'. இதுதான் இங்கு சேவல் சண்டைக்குப் பெயர். ஆடுகளம் தனுஷ் மாதிரியே வெள்ளடியன் சேவல்களைப் பாசமாக வளர்த்து மார்போடு அணைத்துத் திரியும் பெரிசுகளும் சிறுசுகளும் சண்டையைப் பற்றிப் பேசினாலே புழகாங்கிதம் அடைகிறார்கள்.

இது மனிதர்களுக்கு இடையிலான சண்டை அல்ல; வெள்ளயடின் கோழிகளின் வீர விளையாட்டு என்கிறார்கள் பெருமிதத்துடன்.

தமிழர்களின் வீர விளையாட்டில் ஒருபகுதியாக இதுவும் ஒரு காலத்தில் புகழ்பெற்று இருந்தது. அப்போது பகிரங்கமாக நடந்தது. ஆனால் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் குதிரைப் பந்தயம் போன்றன தடைசெய்யப்பட்டமை போன்றே, இத்தகைய விளையாட்டுக்களும் தடை செய்யப்பட்டன. மிருக வதைத் தடைச் சட்டத்தின் கீழ் இவ்வாறான விளையாட்டுக்களை நடத்துபவர்கள் கைது செய்யப்படும் அபாயம் இருப்பதால் அவற்றை இப்போது இரகசியமாகவே நடத்துகிறார்கள்.

இருந்தாலும் வெள்ளடியன் சேவல்களை வளர்த்துச் சண்டைக்குவிடுவது இன்றும் ஆங்காங்கே தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. சுதுமலை, கல்லகட்டுவான், தாவடி, நவாலி, புதுக்குடியிருப்பு, விசுவமடு, வட்டக்கச்சி, அக்கராயன், வன்னேரிக்குளம் போன்ற பகுதிகளில் சேவல் சண்டைகள் அவ்வப்போது நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஏனைய விளையாட்டுக்களைப் போலவே சேவல் சண்டைகளுக்கும் தனியான விதிமுறைகள், நடுவர்கள் எல்லாமும் உண்டு.

**களம்**

கோயில்களின் முன்னால் அல்லது ஊரின் பிரதானமான ஓர் இடத்தில் தான் சண்டைகள் நடக்கின்றன. குறிப்பிட்ட ஒரு சதுரம் அல்லது வட்டத்துக்குள் சேவல்கள் சண்டை போட வேண்டும். ஒரு நேரத்தில் இரண்டு கோழிகள்தான் சண்டையிட முடியும். சண்டையிடும் நேரம் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல. அது சேவல்களின் வீரியத்தில் தங்கியுள்ளது. நல்ல ஆரோக்கியமாகத் திடமாக வளர்த்த சேவல்கள் சுமார் இரண்டு அல்லது இரண்டரை மணி நேரம் கூடச் சண்டை போடுமாம்.

**கோழி வளர்ப்பு**

சண்டைக்கென வளர்க்கப்படும் தனி இனம் வெள்ளடியன். நீண்ட கால்களுடன் கனத்த உடலமைப்பைக் கொண்டதாக நீளமான கழுத்துடன் கம்பீர நடை பயிலும் அழகுக் கோழி அது.

வெள்ளடியன் பேட்டுக் கோழிகள் மிகவும் சாதூரியமானவை. அவையும் பலம் கொண்டவை. அடை படுப்பதற்கு முன்பாக அவை ஏழு அல்லது எட்டு முட்டைகள் மாத்திரமே இடும். ஒவ்வொரு முட்டையும் நூறு ரூபாவில் இருந்து 200 ரூபா வரை விற்கப்படும். பொரித்த குஞ்சுகளில் எது அதிக உற்சாகமாகவும் கோபாவேசமாகவும் இருக்கிறதோ அதுதான் சண்டைக்குத் தயார்ப்படுத்தப்படுகிறது.

நல்ல தீனி போட்டு தனியான கூடுகளில் மற்றைய கோழிகளுடன் சேராமல் இவை வளர்க்கப்படுகின்றன. நான்கைந்து சேவல்களை வளர்ப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேலே செலவழித்து கூடுகள் தயாரிக்கிறார்கள். ஒரு கூடு நான்கு அல்லது ஐந்து தட்டுக்களுடன் தனித்தனியானவையாகப் பிரிக்கப்படுகின்றது. ஒவ்வொன்றுக்குள்ளும் ஒவ்வொரு சேவல் விடப்படுகின்றன. அவை தமக்கிடையில் மோதிக்கொள்ளாமல் இருப்பதற்காக இந்த ஏற்பாடு.

ஒரு வெள்ளடியன் சேவல் குஞ்சு பொரித்து அது சண்டைக்குத் தயாராக சுமார் இரண்டு வருடங்கள் பிடிக்கும்.

**உணவு**

சண்டைக்கென்றே வளர்க்கப்படும் வெள்ளடியன் சேவல்களுக்குத் உணவு விடயத்தில் தனியான கவனிப்பு உண்டு. சாதாரணமாகக் கோழிகளுக்கு வழங்கப்படும் உணவுகளை இவற்றுக்குக் கிட்டவும் கொண்டு செல்வதில்லை. குரக்கன், சாமை, எள்ளு, வரகு போன்ற தானியங்களும் அவித்த மீன்கள், முட்டைப் பொரியல் எனவும் இவற்றுக்கான கவனிப்பே தனியானதுதான்.

ஒரு சேவலுக்கு ஒரு நாளைக்குக் குறைந்தது 100 ரூபா செலவு செய்ய வேண்டியிருக்கும் என்கிறார்கள் வளர்ப்பவர்கள். சரியான உணவு பயிற்சி எல்லாம் ஒழுங்காக இருந்தால் மட்டுமே சாவல்கள் கோதா சண்டைக்குக் களமிறக்கப்படுகின்றன.

**பயிற்சி**

ஒரு குஞ்சு பொரித்து ஆறு அல்லது ஏழு மாதங்களில் அதற்குப் பயிற்சி ஆரம்பிக்கப்படுகிறது. கடல், குளம், கிணறு போன்வற்றுக்கு அதை எடுத்துச் சென்று நீச்சல் பயிற்றுவிக்கப்படுகிறது. வாலில் பிடித்தபடி தண்ணீரில் சேவலை விட்டால் அது கால்களை உதைத்து நீந்தும். கால்கள் வலுவடைவதற்காகவும் சண்டையின் போது நடுக்கம், தொய்வு ஏற்படாமல் இருப்பதற்காகவும் இந்தப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

உயரத்திலிருந்து நிலத்தில் தூக்கிப் போடுதல், தூக்கி எறிந்து பறக்கச் செய்தல் போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. பயிற்சிகள் யாவும் சண்டைக்கு தாயாராகும் வரை தொடரும். பெரும் சண்டைக்குச் செல்வதற்கு முன்னதாக பொத்தான் விளையாட்டும் பழக்கப்படும். இது குஞ்சுகளுக்கான சண்டைப் பயிற்சி. சேவலின் உரிமையாளர் தன்னிடம் உள்ள ஏனைய சேவல்களுடன் இளம் சேவலை மோத விட்டுப் பயிற்சி கொடுப்பார்.

**சண்டை நாள்**

கனத்த நாள் என்று கூறப்படும் அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களில் கோழிகளுக்கு வீரமும், ஆக்ரோசமும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை உள்ளதால், அன்றைய தினங்களில்தான் சேவல்கள் சண்டைக்கு விடப்படுகின்றன. பௌர்ணமி நாளில்தான் அதிகமான சண்டைகள் நடத்தப்படுகின்றன.



**வெற்றி விதிகள்**

சண்டையின்போது எந்தக் கோழி யாவது களத்தை விட்டு வெளியேறினால் களத்தில் நிற்கும் கோழி வென்றதாக அறிவிக்கப்படும். இரண்டு சேவல்களும் கடுமையாகச் சண்டையிட்டு ஒன்று களைப்பால் படுக்க மற்றக் கோழி அந்த களத்தில் குறிப்பிட்ட நேரம் வரை நின்றால் அதுவே வென்றதாகும். ஆக்ரோசமாகச் சண்டைபோட்டு ஒரு சேவல் களைத்துப் படுக்கும்போது மற்றையது களத்தைவிட்டு வெளியேறிவிட்டால் கூட களைத்துப்படுத்த சேவல்தான் வெற்றிபெற்றதாகும்.

இப்படி வெற்றிக்கான விதிகள் தெளிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. சண்டையில் தோற்றுப் போன கோழி பிறகு எந்தக் காலத்திலும் மறுபடியும் சண்டையிட இயலாது என்பது போட்டி விதி மற்றும் இவை. அவை பின்பு அழகுக்காகவும் இனப் பெருக்கத்துக்காகவும் மட்டுமே வளர்க்கப்படுகிறன.

பல காலமாக வெள்ளடியன் கோழி வளர்பில் அனுபவமுள்ளவர்களாகவும் பல சண்டைக் கோழிகளை வளர்த்து வெற்றி கண்டவர்களாகவும் இருக்கக்கூடிய வயது முதிர்ந்தவர்களே போட்டி நடுவர்களாகக் கடமையாற்றுவர். ஒரு சண்டையில் குறைந்தது மூன்று நடுவர்களாவது இருப்பர். இவர்கள் கோழிகளைப் பற்றி அறிந்தவர்கள் ஆகையால் கோழியின் நிறை மற்றும் அதனுடைய தகுதியைப் பார்த்தே சண்டைக்கு அனுமதி வழங்குவர்.

**40,000 விலை**

சண்டையில் ஒரு சேவல் வெற்றி வாகை சூடினால் அதற்கு மவுசு ஏறும். 40,000 ரூபா வரையில் கூட விலைபோகும். அத்தோடு சேவல் வளர்ப்பவருக்கும் மவுசு ஏறும். அவர் வளர்க்கும் சேவல்களின் விலை எகிறும். இந்த விளையாட்டின் மூலம் கிடைக்கும் புகழும் வருமானமும் இதுதான். சண்டையை வைத்து சூதாட்டம் ஏதும் நடத்தப்படுவதில்லை என்கிறார்கள் சேவல் வளர்ப்பவர்கள்.

"அந்தக் காலத்தில இதெல்லாம் பகிரங்கமா நடந்த சண்டை. ஆட்டுக்கடாச் சண்டைகூட நடந்தது. இப்ப ஒண்டும் இல்லாமப் போச்சு. எங்களுக்கெண்டு தனித்துவமா இருக்கிற எல்லாத்தையும் நிப்பாட்டுறதுதான் உவங்களின்ர பிளான்" என்று குமுறுகிறார் வெள்ளடியன் சேவல் வளர்ப்பில் ஆர்வமுடன் ஈடுபடும் ஒருவர்.

"இந்தக் கோழியள வளர்க்கிறது சாதாரண விசயமில்ல. அதுகளுக்கு வருத்தம் வந்து செத்தா அதவிடக் கவலை வேறயில்லை. இதுக்காக இதுகளுக்கு குளுக்கோஸ், பீக்கோ, பூச்சிக்குளிசை எல்லாம் வாங்கி வைக்கிறம். எங்கட இந்த வீர விளையாட்டுக்குத் தடை வரக்கூடாது தம்பி. அடிச்சுச் சொல்லுறன் இது சூது இல்லை." கண்கள் சிவக்கப் பேசுகிறார் அந்த மனிதர்.

இம்முறை பொங்கலுக்கு அடுத்தநாள் முழுமதி தினம் என்பதால் பட்டிப் பொங்கலன்றே சண்டைக்கு நாள் குறிக்கப்பட்டுவிட்டது. இம்முறை வன்னியில் இருந்தும்கூட சேவல்கள் யாழ்ப்பாணம் வருகின்றனவாம் சண்டைக்கு. சேவல் பிரியர்கள் ஆர்வமுடன் காத்திருக்கிறார்கள். ஆடுகளம் தயாராகிவிட்டது சூடு பறக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி சொல்லும் திருநாள்....

கி.வே.கிருஷ்ணானந்தன்

சூரியன் எமது கண்கண்ட தெய்வமாகும். மழை தந்து. வெயில் தந்து பயிர் வளர்வதும் நாங்கள் வாழ்வதும் அந்த சூரியபகவானது மாபெரும் கருணையினாலன்றோ? உலகையே இயக்கும் அந்தக் கதிரவனது அருளாட்சியில் அதிக விளைச்சலைப் பெற்றவர்களான உழவர்களின் மகிழ்ச்சியின் வெளிப்பாடே, நன்றி செலுத்தும் கடப்பாடே தைப்பொங்கல் பண்டிகையாகும். உழவருக்கு உறு துணையாக பல்வேறு வகையிலும் பயன்பட்ட எருது, நிறையுணவாம் பாலும் பிறவும் தந்த பசு ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கும் மறுநாள் பண்டிகையான பட்டிப் பொங்கலும் தமி ழரின் நன்றியுணர்வை உலகுக்கு முன்னிலைப்படுத்துவதாக உள்ளது.

பாடுபட்டு உழைப்பவர்களுக்கே இப்பாரிடம் சொந்தமையா
காடு திருத்தி நாடு காண்பவர் அவரல் லவோ- என்ற கவிமணியின் பாடல் வரிகள் உழவர் பெருமைக்குச் சான் றாகின்றன.

தேவர்களது பகல் காலம் உத்தராயணம். அது தை முதல் ஆனி வரையான ஆறு மாத காலமாகும். சுபகாரியங்களுக்கான மிகச் சிறப்பான காலமும் அதுவே எனப்படுகிறது. மற்றைய ஆறு மாதங்கள் தட்சணா யணம். இது தேவர்களுக்கு இராக் காலம். தட்சணாயனத்தின் கடைசி மாதம் மார்கழி என்பதால் இதுவே தேவர்களுக்கு உதய (உஷத்) காலம். தேவர்களும் பிதிர்களும் சந்தோசமாக நடமாடும், அவர்களுக்கான அதிகாலைப் பொழுது எனப்படுகிறது. கீதை நாயகன் கூட மாதங்களில் நான் மார்கழி என்கிறான். இந்த மார்கழி மாதத்தின் இறுதி நாளன்று அதாவது தைப் பொங்கலுக்கு முதல் நாள் எமது வீடு மற்றும் வளவுச் சுற்றாடலில் காணப்படும் பாவனைக் குதவாதவற்றைக் களைந்து, வதிவிடத்தையும் சூழலையும் தூய்மையாக்கி சுகாதாரம் பேணினார்கள் நம்முன்னோர்கள். இதனையே போகிப் பண்டிகை என்பர்.

நாம் தமிழ்-சிங்கள புதுவருடம் எனக்கூறுவது ஆரியவருடப்பிறப்பையேயாகும். உண்மையில் தமிழர்களது புதுவருடப் பிறப்பென்பது உழவர் திருநாளாம் தைப்பொங்கல் அன்றுதான். தமிழர்களின் புதுவருடப் பிறப்பன்று தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவது புது வருடப் பிறப்பை பொங்கலிட்டு வரவேற்குமொரு மங் கலமான செயற்பாடா கவும் உள்ளது. தமிழ் வருடம் என்பது திருவள்ளுவர் ஆண்டையே குறிப்பிடுவதாகும். இந்த ஆண்டின் முதல் வரும் மாதம் சுறவம் எனப்படுகிறது. சுறவம் மாதத்தின் முத லாவது நாளிலேயே தைப்பொங்கலை நாம் கொண்டாடுகின்றோம்.

திருவள்ளுவர் ஆண்டில் சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை எனப் பன்னிரு மாதங்கள் உள்ளன. தமிழ் நாள்களாக ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகியனவே உள்ளன. திருவள்ளுவர் ஆண்டு எனப்படுவது ஆங்கில வருடத்தை விடவும் 31 ஆண்டுகள் முன் னதாக அமைகின்றது. சூரியனது சுழற் சியை இரண்டாகப் பிரித்து அதனடிப்படையில் மாதங்களை வகுத்தனர். ஆரம்பகால மனிதர், இயற்கையை வழிபட்ட காலத்திலேயே தமிழர்கள் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பவற்றைப் பஞ்சபூதங்கள் எனக் கொண்டு வழி பட்டனர். சூரியனை முதன்மைப்படுத்தி வழிபாடுகள் மேற்கொண்டதற்கு சான்றாக சூரியனார் கோயில்கள் பல இந்தியாவிலுள்ளதுடன், பஞ்சபூதங்களையும் மூலவராகக் கொண்ட பிரசித்தி பெற்ற கோயில்க ளும் உள்ளன.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது எமக்குப் பழக்கப்பட்டுப் போன பழமொழியாகும். இந்தப் பழமொழியில் அளவு கடந்த நம்பிக்கை கொண்டவர்களாக அன்றைய தமிழர்களில் இருந்து இன்றைய எம்ம வரை ஒவ்வோர் ஆண்டு பிறக் கும் போது நல்வாழ்வும் கூட வந்துவிடும் என்னும் எதிர்பார்ப்புக்களை வளர்த்துக் கொண்டு வாழ்ந்தோம்-வாழ்கின்றோம். அந்த எதிர்பார்ப்புக்கள் இலவுகாத்த கிளியின் கதையாகிவிடுமோ அல்லது அதற்கும் மேலே போய் குளம் வற்றும் எனக் காத்திருந்து குடல்வற்றிச் செத்த கொக்கின் கதையாகி விடுமோ என்றதொரு ஐயுறவை ஏற்படுத்துவனவாகவே தென்பட்டதுடன் கடந்த காலங்களில் மன நிறைவைத் தருவதாக அவை அமைந்துவிடவில்லை.

தமது களனியில் விளைந்த நெல்லும் கரும்பும் பாலும் பழங்களும் படைத்து பொங்கலோ பொங்கல் எனப் பொங்க லிட்டு மகிழ்ந்து வாழ்ந்தவர்கள் மீண் டும் தமது சொந்த நிலத்தில் பொங்கலோ பொங்கல் எனப் பொங்கி மகிழ வேண்டும். உறவுகளைத் தொலைத் தும், அங்கங்களை இழந்தும் மரக் கலம் உடைந்து போக நடுக்கடலில் தத்தளிக்கும் மீகாமன் களாகத் தடுமா றித்தவிக்கும் எம்மவர் கள் அனைவரும் தமது இன்னல்கள் நீங்கி பொங்கலோ பொங்கல் எனப் பொங்கி மகிழ வேண்டும். தமிழ் மக் களுக்கு இந்தத் தையாவது நல்ல தொரு வழியைக் காட்ட வேண்டும் என்பதுடன் அன்பு, பண்பு, அகிம்சை, விட்டுக்கொடுப்பு, புரிந்து ணர்வு ஆகி யன அனைவரது உள்ளங் களிலும் பொங்கியெழுந்து எமக்கான உரிமைகள் அனைத்தையும் பெற்று நாம் நிரந்தர சமாதான சமூகத்தில் வாழ வேண்டி அமைய பரம்பொரு ளின் பாதங்களைப் பணிவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் நினைவுகளில்...

அருவி






அம்மா என்ர சட்டை வடிவா இருக்கா......" ஆசைமகள் நிலா புத்தாடையைப் போட்டுக் கொண்டு வந்து அழகு காட்டினாள். சும்மாவே அவள் அழகு. கூடவே சுட்டித்தனமும் சீரிய அறிவும் அவளிடம் நிரம்பிக் காணப்படுவதால் நிரம்பிய ஆளுமை அழகும் அவளிடத்தில் இருந்தது. அவளிடம் காணப்பட்ட எல்லாத் திறனும் செயல்பாடும் 'அவளை'ப் போலவே இருந்தது.

"என்னம்மா நான் நிலா...... என்ன அப்படிப் பாக்கிறீங்க......."

அவள் செல்லமாய்ச் சிணுங்கினாள்.

என்ர நிலாக்குட்டிக்கு எது போட்டாலும் அழகாத்தான் இருக்கும். ஆசையாய் உச்சி மோர்ந்தாள் .

"என்னம்மா உங்களுக்கு நிலா அன்ரான்ர ஞாபகம் வந்திட்டா .....கவலைப்படாதையுங்கோ .....அதுக்குத்தானே நான் நிலாக்குட்டி இருக்கிறன் ......." தாயின் முகத்தைத் தடவினாள் நிலா.

நிலாவின் மகிழ்வைக் குழப்பக் கூடாது.......எண்ணியவளாய் 'என்ர செல்லம் இருக்கேக்க வேற யார அம்மா நினைக்கப் போறா..... ம்......இப்ப சட்டைய மாத்தீட்டு வாங்க பிள்ள நாளைக்குப் பொங்கலுக்குப் புதுச்சட்டை போட வேணும் என்ன....'அவளை அனுப்பி வைத்தாள்.

ஆனாலும் அந்த நினைவுத் தடங்களில் இருந்து அவளால் ஒருபோதும் விடுபடவே முடியாது. அவள் உயிர் உள்ளவரை தினமும் நெஞ்சை அரிக்கும் குற்ற உணர்வில் அவள் குறுகிப் போவாள். இன்று அவள் ஒரு குடும்பப் பெண். கூடவே ஒருபிள்ளைக்குத் தாய். கணவன், உறவுகள் சுற்றம் என மகிழ்வான வாழ்க்கை அவளுக்கு கிடைத்திருக்கிறது. ஆனால் ஒரு பெரும் இலட்சியத்துக்காகப் போராடித் தோற்றுப்போன வலியும் வேதனையும் அவளுக்குள் நீறுபூத்த நெருப்பாய் கனன்று கொண்டிருப்பதை யாரோடு இவள் பகிர்ந்து கொள்வாள். 'எல்லாத்தையும் மறக்க முயற்சி செய்' எனச் சொல்லும் கணவன். 'எதைப்பற்றியும் பேசாதே' என எச்சரிக்கை தரும் சொந்தங்கள். இந்த நிலையில் அவள் யாரிடம் எதைப் பற்றிப் பகிர்ந்து கொள்வாள். ஆனால், அவளது உணர்வுகள் எண்ணங்கள் எல்லாவற்றுக்கும் வடிகாலாய் அவளது ஆசை மகள் நிலா.

தரம் 2 இல் கல்வி கற்றாலும் எல்லாவற்றையும் துருவித் துருவிக் கேட்பாள். "தலைவர் மாமா வைப் பற்றிச் சொல்லுங் கம்மா..... சண்டைக்கதை சொல்லுங் கம்மா" அன்ராக்களப் பற்றிச் சொல்லுங்கோ" வாய் ஓயாமல் அவள் கேட்டுக் கொண்டே இருப் பாள். அந்த மட்டில் அவளுக்கு ஆறுதல்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை தைப்பொங்கல், நத்தார் பண்டிகை இரண்டையும் விசேடமாகக் கொண்டாடுவார்கள். பொங்கலுக்கு முன்னதாகவே வழங்கல் பகுதியில் இருந்து பொங்கலுக்குத் தேவையான பானையில் இருந்து பட்டாசுவரை வந்துவிடும் . அப்படித் தான் அந்தப் பொங்கலும் வந்தது.

2001 ஆம் ஆண்டு ஓயாத அலைகள்-3 களமுனை வடமராட்சி கிழக்கை நோக்கி நகரத் தொடங்கியிருந்தது. வடமராட்சி கிழக் கைச் சொந்த இடமாகக் கொண்ட அந்த ஊர்களைப்பற்றி தெளிவாகத் தெரிந்த போராளிகள் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் எடுக்கப்பட்டு எந்த நேரத்திலும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். அந்த அணியில்தான் நிலாவும் இருந்தாள். இண்டைக்கு நாளைக்கு என்று நாள்கள் நகர்ந்தனவே தவிர அழைப்பு வரவேயில்லை. எங்களது முகாமில் இருந்து நிலா மட்டும் தான் தெரிவாகியிருந்தாள் .நிலாவுக்குத் தலைகால் தெரியாத மகிழ்ச்சி. செத்தாலும் சொந்த மண்ணில சாகக் கொடுத்து வைத்திருக்க வேணும். பிறந்து வளர்ந்த ஊரில் கால்பதிக்கும் அவளது கனவு ஒரு புறம் இருந்தாலும், அவள் சண்டைக்குப் போகப்போகிறாள் என்ற கவலையில் விதம் விதமாய் சமைத்துப் போட்டு அவளைக் கொண்டு ஒரு வேலையும் செய்விக்காமல் அந்த முகாமின் செல்லப்பிள்ளையாய் அவள் இருந்தாள். ஆனால், இந்த முறை

www.pabcbank.com
(011) 4 667 222



சம்மான

ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கான கடன் வசதி

- ரூ. 500,000 வரை கடன் வசதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்
- 5 வருட மீள் செலுத்தும் காலம்
- 70 வயது வரை கடனை மீளச் செலுத்தக் கூடிய வசதி

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
(011) 4 667 222

நிபந்தனைகளுக்கு உட்பட்டது
பான் ஏஷியா வங்கி ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும் - Fitch Rating 'BBB(lka)'

பான் ஏஷியா வங்கி
உங்கள் சேவைக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்த நாள் நினைவுகளில்...




நான் தான் பொங்கிறது" அவள் தனக்குத் தெரிந்த பலகாரம் செய்வதில் மும்முரமாக இருந்தாள்.

பொதுவாகவே போராளிகளிடத்தில் ஓர் எண்ணம் இருந்தது. மாவீரர் நாள் என்றாலும் சரி பொங்கலோ, நத்தாரோ, விசேட பண்டிகையாயினும் சரி தங்களது பாசறை சிறப் பான தாக இருக்க வேண்டும் என் பதே அவர்களது விருப்பமாக இருந்தது.

துப்புரவு, அழகுபடுத்தல் எல்லாவற்றிலும் எங்கட என்கின்ற ஒரு தனித்துவம் தெரிய வேணும். நிலாவிடத்தில் அந்த எண்ணம் அதிகமாகவே இருந்தது .

நத்தார் பண்டிகைக்கு 'பப்பா' கொண்டு போக வேணும் எண்டால் முதல் ஆளா வெளிக்கிடுவாள். அதிலும் அண்ணாக்களின், முகாமுக்கு பப்பா கொண்டு போறதெண்டா அவளுக்குச் சரியான விருப்பம். தன்னோட அடிக்கடி சண்டை பிடிக்கிற, போகக் கூடாது என்று தடை விதித்திருக்கிற முகாம்களுக்கு நத்தார் பாப்பாவை கொண்டு போய் அவர் களை ஆடவைத்து வாங்கு வாங் கெண்டு வாங்கிற்றுத்தான் வருவாள்.

பொதுவாக நிதிப் பிரிவுக்காரர் எண்டா கொஞ்சம் அவளுக்கு எட்டத்தான்..... எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லுறதால அவளுக்குப் பிடிக்காது. ஒரு முறை மாவீரர் நாளுக்கு மஞ்சள் சிவப்பு கொடி கேட்க போனவருசம் தந்ததைப் பாவிக்கச் சொல்லிப் போட் டினம்.அதுஅவளுக்குச்சரியான கோபம். அவையின், முகாமில புதுசா நிறைய கொடி கட்டி இருந்தது.

அண்டைக்கு இரவே அந்தப் புதுக்கொடிய கழட்ட வேணும். நிலா போட்ட திட்டத்துக்கு துணையாய் இரு தோழிகளையும் தயார்ப் படுத்தி இருந்தாள். பொறுப்பா ளருக்குத் தெரியாமல் போக வேணும். சாமம் 12.30 காவல் கடமையை முடித்துக் கொண்டு நடையில் புறப்பட்டுப் போய் நிதிப் பிரிவு முகாமில கட்டியிருந்த முழு சிவப்பு மஞ்சள் கொடியையும் கழற்றிக் கொண்டு வந்து விட்டாள்.

மறுநாள் காலையில் அவளது முகாம் எழுச்சியாகத்தான் இருந்தது. ஆனால் விடயம் பொறுப்பாளருக்குத் தெரிந்த போது. தண்டனை வேறு. ஆனால் சில விடயத்தில் தண்டனையைப் பற்றி அவள் கணக்கெடுப்பதில்லை.

எல்லாவற்றிலும் அவள் வித்தி யாசமானவள். ஒருமுறை 'கிபிர்' அடித்துக் கொண்டு இருந்தது. நிறையச் சனம் செத்திட்டுதாம். தகவல் அவளுக்குக் கிடைத்தது. எப்படியாவது அந்த இடத்துக்கு அவள் படப்பிடிப்புக்குப் போக வேணும். மோட்டார் சைக்கிளோ, சைக்கிளோ எதுவும் இல்லை.

கமராவோடு வீதிக்கு வந்தவள் யார் எவர் என்றில்லை. போன மோட் டார் சைக்கிளை மறித்து ஏறி விட்டாள். குறித்த இடத்துக்குப் போய் படப்பிடிப்பு செய்து முகாமுக் குத் திரும்பும் வரை யாரோட மோட்டார் சைக்கிளில போனது என்று அவளுக்குத் தெரியாது. வீதியால் பார்த்துக் கொண்டு போனவர்கள் வந்து முகாமில் சொன்ன போதுதான் அவளுக்கே தெரியும் தான் ஓர் அண்ணை யோட ஏறிப் போனதெண்டு. கடமையெண்டு வந்தால் ஒரு போதும் அவள் பின்னிற்க மாட்டாள். இப்படி அவளப்பற்றி சொல்லுறதெண்டா நிறையச் சொல்லிக் கொண்டே போக லாம்.... விடிஞ்சால் பொங்கல்.... முகாமின் முற்றத்தில் மண் ஒதுக்கி சாணி கொண்டு மெழுகி பெரிய கோலம் போட்டு பொங்கலுக்கு அவள் தயாராகி விட்டாள்.

மாலை 6 மணி இருக்கும். தொலைத் தொடர்பு சாதனத்தில் பொறுப்பாளருக்கு தகவல் வந்தது. நிலாவக் கூட்டீண்டு வரட்டாம் என்று நிலாவுக்கு தலைகால் தெரியாத மகிழ்ச்சி. துள்ளிக் குதித்துக் கொண்டு தயாராகி விட்டாள். நிலாவைப் பிரிய ஒரு வருக்குமே மன மில்லை. எல்லோரும் கண் கலங்கினர். நிலா சிரித்தாள்.

"இப்ப என்ன... .நான் கரும்புலி யாவா போறன். சண்டைக்குத்தானே போறன். அதுவும் என்ர ஊருக்குப் போறன். நான் சந்தோஷமா இருக்கிறன்...நான் இல்லை எண்டு ஒருத்தரும் விடிய பொங்காம இருக்கக் கூடாது. அடுப்பில பானை வைக்கிற முதல் வெடி எங்கடையாத்தான் இருக்க வேணும்....எல்லாருக்கும் முதல் பொங்கியிட வேணும் சரியா......" அவள் விடைபெற்றுக் கொண்டாள்.

"அக்காச்சி எங்க..."

அவள் உள்ளே ஓடி வந்தாள்.

'எடி அக்காச்சி அழுறியா.. நீ அழாம சந்தோஷமா இருக்க வேணும்... உன் கலியாண வீட்டுக்கு நான் இல் லாட் டியும் உனக்குப் பொம்பிளைப்பிள்ள பிறந்தா என்ர பெயர் வைச்சிடு என்னக்காச்சி.." அவள் போய் விட்டாள்.

அன்றைய பொழுது எல்லோருக்குமே சிவராத்திரியானது. வடமராட்சிக் கிழக்கில் சண்டை தொடங்கிற்று.. தொலைத் தொடர்பு சாதனத்தை ஒட்டுக் கேட்டதில் அணிகள் கிழக்கு நோக்கி உள் நகர்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

வெற்றிலைக்கேணி, உடுத்துறை, தாளையடி, என போராளிகளது நகர்வுகள் சென்று கொண்டிருந்தன. பெரும் சமர் ஒன்று அரங்கேறிக் கொண்டு இருந்தது.....

அந்த வெற்றியோடே அடுத்த நாள் பொழுது புலரத் தொடங்கியது. போராளிகள் தலைக்கு முழுகி பொங்குவதற்கு தயாராகினார்கள். அயலில் வெடியோசை கேட்க முதல் முதல் வெடி சட சுடத்தது. பொங்கல் பானை அடுப்பேறியது.

தொலைத் தொடர்பு சாதனம் கதறியது. நேரம் 'அதிகாலை 5.12 இடியாய் இறங்கியது செய்தி.

'நிலா.....வீரச்சாவு...... அவளது உடுத்துறை மண்ணை மீட்டெடுத்த சண்டையில......' பொறுப்பாளர் தகவல் சொன்ன போது ஓவென்று கதறியழ வேண்டும் போல் இருந்தது. வெளி யில் பொங்கலில் தோழி கள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டி ருந்தனர். அவர்களுக்குத் தகவல் தெரிந்தால் பொங்கல் அரைகுறையாகவே நின்றுவிடும்..... நிலா ஆசையாசையாய் செய்து வைத்த பொங்கலுக்கான முன் ஆயத் தங்கள் எல்லாம் வீணாகி விடும்.

பெரும் துயரச் சுமையை மனதுக்குள் அடக்கிக் கொண்டாள். பொங்கல் முடியும் வரை வெளியே தலைகாட்டவில்லை. 5.50 சூரியன் கிழக்கு வானில் உதயமாக பொங்கல் படைத் தாயிற்று. பின்புதான் செய்தி தோழிகளைச் சென்றடைந்தது.

அந்த முகாமே சோகத்தில் மூழ்கி யது......

காலங்கள் வேகமாய் உருண் டோடின.....

இப்போ அவளது கடைசி ஆசையை நிறைவேற்றி விட்ட திருப்தி மட்டும் மனதுக்குள்.....

'அம்மா....நாங்க பலகாரம் சுட வேணுமல்லோ....?

நிலா வந்து நின்றாள்.

'அதுக்குத்தானே அம்மா எல்லாம் தயார்ப் படுத்திறன்..... பிள்ளையும் அம்மாவும் பலகாரம் செய்வம் என்ன......' மகளைச் செல்லமாகத் தடவிக் கொடுத்தாள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கிடும் வெடி ஓசை

பூமுகன்






*தைத்திருநாள்*
*இல்லமெல்லாம்*
*தளிர்த்திடும் தைப்பொங்கல்*
*இத்தனை நாள் காத்திருந்தோம்*
*இனிய தமிழ்ப்பொங்கல்*
*கூவி அழைத்திடும் சேவல்*
*குதித்தெழுவோம் குளிப்போம்*
*பூவெடுப்போம் புதிதணிவோம்*
*பொங்கலன்று நாங்கள்*
*கோலமிட்டு விளக்கேற்றிக்*
*கும்பிடுவாள் அம்மா*
*பாலெடுத்துப் பொங்கலுக்குப்*
*பானை வைப்பார் அப்பா*
*விரும்பிய மா. வாழை. பலா*
*விதவிதமாய்க் கனிகள்*
*கரும்பிளநீர் படைத்து மனம்*
*களித்திடுவோம் நாங்கள்*
*வெண்ணிறப்பால் பொங்கி வர*
*வெடி சுடுவோம் நாங்கள்*
*இன்னமுதப் பொங்கலுண்ண*
*இணைந்து நிற்போம் நாங்கள்*

அழகான இந்த பாடல்வரிகள் தை திருநாளின் மகிமைகளை எடுத்தி யம்புகின்றன. தமிழர் திருநாளான இந்தப் புனிதநாளில் தமிழர் பண்பாடு, வீரம், கொடை, நட்புணர்வுகள் தளைத்தோங்குவதுடன் கடந்து போன துன்பங்களை மறந்து புதிய ஆரம்பங்கள் இந்த நாளில்தான் மலர்கிறது.

கடந்துபோன காலங்கள் தமிழர் வாழ்வில் வலிசுமந்தவையாகவே இருந்தன.அதாவது மூன்று தலைமுறை வாழ்காலத்தில் அதிகார வெறியின் அடக்குமுறையை சமாளித்தபடியே தமிழ் மக்கள் தமது எல்லா பண்டிகைகளையும் கொண்டாடினர். இந்த நிலை இன்றும் தொடர்கிறது.

விடுதலைப்புலிகளின் எழுச்சிக்குப் பின்னரான காலகட்டத்தில் சிங் களதேசத்தில் நெருக்கடிகளும் கெடுபிடிகளும் உச்சத்தை எட்டின. தமிழ் மக்களின் வாழ்விடமான வடக்கு கிழக்கு பகுதியில் விளை யும் உற்பத்திகளைத் தவிர வேறெந்த மூலங்களும் வடக்கு கிழக்குக்கு அனுமதிக்கப்படவில்லை.

மின்சார வசதி குறைவு, எரிபொருளுக்கு தட்டுப்பாடு,போக்குவரத்து வசதியில்லை என்று அந்த துயரங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

**மகிழ்தலின் தருணங்கள்**

என்னதான் நெருக்கடி இருந்தாலும் தமிழன் தனக்கான பாரம்பரியங்களை விட்டுக்கொடுத்ததில்லை. எதற்கும் சளைத்தவர்கள் நாங்கள் இல்லை என்பதை ஊர்தட்டிப்பறைசாற்றிக்கொண்டே இருந்தான். வயல் பூத்து நெல்மணிகள் திரளும் காலம் தை திங்கள்.அந்த வயல் அழகை அன்றாடம் பார்த்து மகிழ்வான் விவசாயி. வீட்டு பட்டிக்குள் அடைக்கப்பட்டிருக்கும் சிவலையும் செங்காரியும் மழையில் நனைந்து தங்கள் சொந்த நிறத்துடன் அன்று போட்ட சாணத்தை பூசியபடி தலை அசைக்கின்றன. அதை பார்த்து பண்ணைக்காரன் பெருமிதம் அடைகிறான். தோட்டத்தில் கத்தரி பூத்து கரு நீல மேகத்தை காண்பதற்காய் சிரித்தபடி இருக்கும்.மிளகாய்க் கன்றுகள் வரிசையாய் நின்று வானத்து நட்சத்திரங்களை மேகக்கடவுள் தங்களிடம் பரிசளித்து விட்டதாய் பூத்துக் குலுங்கும். இவை எல்லாவற்றையும் தனது காவல் கொட்டிலில் இருந்துபார்த்து ரசிப்பான் தோட்டக்காரன். முதல் நாள் மண்ணோடு விளையாடிய மண்வெட்டியும் கலப்பையும் பளபளத்துக் கொண்டிருக்கும் மறுநாள் காலை வேலைக்காக. விவசாயி அவற்றுடன் பேசிக்கொண்டிருப்பான் அன்பாக. இப்படி புதுவருடத்தின் ஆரம்பத்தின் பொன்னாளும் தமிழர்களுக்குப் புனிதமாய்.துன்பதுயரங்களை மறக்க வைக்கும் தருணமாய் மாறும்.



**வெடி ஓசை**

பொங்கல் பானை அடுப்பேறும் போது எல்லையில் ஏவப்பட்ட குண்டு வீழ்ந்து வெடித்து நிலத்தை அதிரவைக்கும் .பானை பொங்கி வழியும்போதும் வெடியோசை முழங்கும். இது தமிழ் இனத்தை உலைஏற்றும் வெடி ஓசைகள் பொருளாதார தடை,பாதைத் தடை காரணமாக அத்தியாவசியப் பொருள்கள் முதல் ஆடம்பரப்பொருள் எவையும் தமிழர் பகுதிகளுக்கு வருவதில்லை. அதனால் கொண்டாட்டங்களில் கொளுத்தி மகிழ்வதற்கு பட்டாசு வெடிகள் எவற்றையும் காணக்கிடைக்காது.

ஆனாலும் பொங்கல் பானையில் பால் பொங்கும் போது வெடி ஓசை கேட்கும். நம்மூர் பையன்களின் தயாரிப்பு அது. அதுதான் சைக்கிள் கம்பி வெடி. 'உ' வடிவில் சைக்கிள் கம்பியை வளைத்து அதன் அடிப் பாகத்தில் கைபிடி வைத்து விடு வார்கள்.கம்பியின் முற்பகுதியில் நிப்பிள் பொருத்தப்பட்டு அதற்குள் தீக்குச்சி மருந்து நிரப்பப்படும். அதற்கு அளவான ஒரு ஆணி பொருத்தப்பட்டு இப்போது வெடி தயார். கைப்பிடியில் பிடித்து ஒரு மரத்துடன் பலமாக அடித்தால் வெடி ஓசை பிறக்கும். இன்னும் இடத்துக்கு இடம் வெடி தயாரிப்பு முறைகள் வேறுபடும். வால்க்கட்டை வெடி, நட்டு வெடி என்று சிறுவர்கள் கைவண்ணத்தில் வெடிப்புக்கள் நிகழும்.



(19 ஆம் பக்கம் பார்க்க)

இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
அன்றும், இன்றும் என்றும் நல்லெண்ணெய்
உற்பத்தியிலும் தரத்திலும் முதல்தர நிறுவனம்
100% இயற்கையானது
V.S.S
சாப்பாட்டு நல்லெண்ணெய்
SPECIAL LUNCH GINGELLY OIL
இல்லத்தரசிகளின் நன்மதிப்பினையும்
நம்பிக்கையினையும் பெற்ற சாப்பாட்டு
நல்லெண்ணெய்
உரிமையாளர்:
வ.ச. சுந்தரலிங்கம்,
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.
T.P: 021 2255675
021 3001285
(C213070) (10.0.5)
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கும் நல்லன பொலிய பொங்கி வா...

கந்த.தியாகராசா

பண்டிகைகள், விரதங்கள் சமயத்தினோடும் சமூகத்தினோடும் இணைந்து வருவதாயினும் இரண்டுக்கும் வித்தியாசங்கள் உள்ளன. விரதம் இறை வழிபாட்டுக்கு உகந்தது. அதனால் உணவை ஒறுத்தேனும் சுருக்கியேனும் சில சமயங்களில் உறக்கத்தை தவிர்த்து குறித்ததொரு தினத்தில் அனுஷ்டிக்கப்படுவது. ஆனால் பண்டிகை ஓரினத்தின் பெருவிழாவாக அமைகின்றது. இனம் சார்ந்து சமயத் தை மையப்படுத்தி ஆண்டுக்கு ஒரு முறை அதற்குரிய தினத்தில் கொண்டாடப்படுவன. நன்னாள், பொன்னாள்,திருநாள், பெருநாள் என்றெல்லாம் சொல்லப்படுகின்ற பண்டிகைத் தினத்தன்று தயார் செய்யப்பட்ட நல்ல நல்ல பட்சணங்களை குடும்பத்தாருடன், அயலாருடன், உறவினர்கள், நண்பர்களுடன் சேர்ந்து பகிர்ந்துண்டு குதூகலமாகக் கொண்டாடும் மக்கள், புத்தாடை புனைதலும் தெய்வம் தொழுதலும், பெரியார்களிடம் ஆசி பெறுவதனையும் பெரும் பேறாகக் கைக்கொள்ளத் தவறமாட்டார்கள்.

செல் விருந்துண்டு வரு விருந்து எதிர்பார்த்து விருந்தோம்பி நற்பண்பினை வளர்த்தனர், வாழ்ந்தும் காட்டினர் நம் முன்னோர்கள். அவர்கள் என்றும் போற்றத்தக்கவர்களே.

தமிழர் வாழ்வியலோடு ஒன்றிப்போன பண்டிகைகளில் தைப்பொங்கல் பண்டிகை முன்னிலை பெறுகின்றது. இந்த நாள் ஓராண்டின் ஆரம்பமாக சமய, சமூக பண்புகளுக்கு ஏற்றதாகக் கொண்டாடப்படும் பொன்னாள். சூரியன் வட திசையை நோக்கி செல்லும் காலத்தின் ஆரம்ப நாளான தை மாத முதல் நாளை எம் முன்னோர் பொங்கல் நாளாக வகுத்து கொண்டாடினர். தமிழர் பாரம்பரியமும் கலாசாரமும் சேர்ந்து மிளிரும் இப் பொங்கல் நாளை உழவர் திருநாள் என்பர், அறுவடைப் பெருநாளென்றும் சூரியப் பொங்கலென்றும் சொல்லப்படினும் தமிழ்க் குடிமகன் சூரியனுக்கு விளை நிலத்துக்கும் ஏர் இழுத்த எருதுகளும் குடம் நிறைக்கும் பசுவுக்கும் தன் நன்றிப் பெருக்கை வெளிப்படுத்தி பொங்கல் பெருநாளை கொண்டாடுவதுதான் நன்றி காட்டும் நன்னாள் என்றும் போற்றுவர்.

வீடும் வளவும் புனிதம் பெற்றிருக்கும், ஆலயங்களும் அழகு படுத்தப்பட்டிருக்கும். எங்கும் தூய்மை, எங்கும் குதூகலம். வைகறைத் துயிலெழுந்து நீராடி தூய ஆடை புனைந்து சிவசின்னங்கள் தரித்து குல தெய்வங்களைக் கும்பிட்டு முற்றத்தில் கோலமிட்டு, மாவிலை தோரணம் கட்டி பூரண



கும்பம் பொலிய வைத்து தீபதூபம் காட்டி புதுப்பானையில் பச்சையரிசியைப் பொங்கலிட்டு, பழங்கள், பலகாரங்கள், கரும்பு என்பனவும் சேர்த்து விடிகாலைப் பொழுதில் படைத்து பொங்கல் தினத்தை பெருவிழாவாகக் கொண்டாடுவர். இன்று நேற்றல்ல, பல நூற்றாண்டுகளாகத் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் தமிழரின் புதுவருடத் தினமாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த தினத்தில் வீரசாகச விளையாட்டுக்களும், பாரம்பரிய தமிழர் விளையாட்டுக்களும் கேளிக்கைகள் என்பனவும் இடம் பெற்றன. தமிழனும் பெருமையோடு பேரோடு புகழோடு வாழ்ந்தான். வளமும் பெருக்கினான்.

இடையில் ஏற்பட்ட தமிழன் வீழ்ச்சியும் ஆரியனின் எழுச்சியும் புதுவருடமெனக் காலம் காலமாய் கொண்டாடப் பட்டதை முதல் நாள் அற்றுப் போனது பின்னர் வட புலத்து மன்னனால் வலிந்து திணிக்கப்பட்ட சித்திரை மாத முதல் நாள் புது வருடப் பிறப்பாக மாறி தமிழர் தம் வாழ்வியலோடு ஒன்றிப் போய் விட்டது. தமிழர் பாரம்பரியமான கலாசார விழுமியங்களை காட்டி நிற்கும் தைத்திங்கள் முதன் நாளை பொங்கல் நாளாகவும் போற்றுதலால் சமய உணர்வும் மனவெழுச்சியும் என்றும்

> தமிழர் வாழ்வியலோடு ஒன்றிப்போன பண்டிகைகளில் தைப்பொங்கல் பண்டிகை முன்னிலை பெறுகின்றது. இந்த நாள் ஓராண்டின் ஆரம்பமாக சமய சமூக பண்புகளுக்கு ஏற்றதாகக் கொண்டாடப்படும் பொன்னாள்.

நிலைத்திருக்கும்.

ஆதி மனிதர்கள் இயற்கைக்குப் பணிந்தார்கள். இயற்கை அன்னையும் அவர்களை வள மோடு வாழ வைத்தது. வானம் பொய்யாதொழுகிற்று. வளமும் பெருகிற்று. எறிக்கும் சூரியனை கண்கண்ட தெய்வமெனப் போற்றினர்.

இயற்கையின் அசைவுகளுக்கும் கால மாற்றங் களுக்கும் கதிரவனே காரணம் என்றும் உலகின் உயிரி னங்கள் வாழ்வதற்கு இன்றியமையாத சக்தியாக அமை வதும் ஐம்பூதங்களில் ஏற்படும் மாற்றங்கள் இடர்கள் எல்லாவற்றுக்கும் சூரியனே காரணம் எனவும் நம்பினர். ஐம் பூதங்களும் சூரிய சந்திரனும் ஆன்மாவுமே ஆதி சிவனாரின் அட்ட மூர்த்தங்களாகக் கொள்ளப்படுவதனால் " ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என சூரிய மூர்த்தியை பணிந்தேத்தினர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# எங்கும் நல்லன பொலிய பொங்கி வா...

" யார் நம் அறிவைத் தூண்டுகின்றார்களோ அந்தச் சுடர் கடவுளின் போற்றுதற்குரிய ஒளியைத் தியானிப்போமாக என்றேதும் காயத்திரி மந்திரமும் சூரிய வழிபாட்டின் பெருமையைப் பேசி நிற்கின்றது. எழுகதிர் வீசி புவியில் எழுந்தருளும் சூரியப் பெருமானைப் போற்றி வளமான வாழ்வுக்கும் நோய், பிணியின்றி வாழவும் வேண்டி நின்றனர். அதனால் பயிர் விளையவும் விளைந்த பயிரை அறுவடை செய்யவும் உகந்த காலமாற்றத்தை ஏற்படுத்திய சூரிய பகவானுக்கு தை மாதம் முதல் நாளில் பொங்கலிட்டு படைத்து வழிபட்டு தமது மேலான நன்றியைத் தெரிவித்து மகிழ்ந்தனர். அதனால் சூரிய பொங்கலென்றும் சொல்வது வழக்க மாயிற்று.

சூரியனின் செல்திசை ஏற்படுத்தும் கால மாற்றங்களுக்கு ஏற்ப கார் பார்த்து ஏர் பூட்டி, எருதோட்டி, நெல்விதைத்து களையெடுத்து நெடு வயல் விளையக்கண்டு பூரிப்படைபவன் உழவன். உலகுக்கே உணவூட்டி உயிர்காக்கும் உழவன் முத்து முத்தாகச் சிந்திய வியர்வைக்கு வெகுமதியாக பூமித்தாய் கொத்துக் கொத்தாக நெல் மணிகளைப் பொலிய வைத்து உழவனை, அவன் உழைப்பை உயர்த்தி பெருங்கைங்கரியம் செய்து விடுகிறாள். அதனால் உழவன் உயர்கிறான். உலகமும் பிழைக்கின்றது. கமம் செய்யும் விவசாயி நெல்லோடு நின்றுவிடாது உப உணவு வகைகளையும் பயிரிட்டு தன் வளத்தைப் பெருக்குவதோடு மக்கள் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றான். மேழி பிடிக்கு கையை வேல் வேந்தனு நோக்குதலால் உழவுத் தொழிலுக்கு ஈடான தொழில் ஏதுமில்லை. நெல் மணியை விதைக்கவும் அறுவடை செய்யவும் பிற பயிர்களை பயிரிட்டு நல்ல பலன் பெறவும் உதவிய கதிரவனுக்கும் களமேட்டின் நெல் பொலிய காரணமாயிருந்து பேருதவி செய்த நில மடந்தைக்கும் நன்றியறித லைத் தெரிவித்து வணங்க விவசாயி மறக்கவில்லை. அதனால் விளைந்த செந்நெல்லரிசியில் நிறையவே பாலும் விட்டு சர்க்கரையும் சேர்த்து புதுப்பானையில் பொங்கலிட்டு படைத்து வந்தித்து தானும் பிறரும் உண்டு மகிழ்வெய்துகிறான். நன்றிப் பெருக்கோடு ஆற்றும் பணியில் பெருமிதம் கொள்வதனால் இந்த இனிய நன்னாளை உழவர் திருநாள் எனக் கொள்வது சாலப் பொருத்தமே.

பொறையில் நிறை குடமாய் அகழ்வாரையும் தாங்கி இகழ்வாரையும் பொறுத்து அளவிட முடியாத நிலக்கீழ் திரவியங்களையும் தன்னகத்தே கொண்டு பெரும் பாரத்தையும் தாங்கும் கருணையுள்ள பூமாதாவுக்கு உலகெங்கனும் உள்ளார் நன்றிக் கடன் பட்டவர்களே. அந்த பெருங் கடனை தமிழ்க்குடிமகன் அதுவும் இந்துப் பெருமக்கள் பல்வழியிலும் நன்றி செலுத்தி வாழ்த்தி வணங்குவது பெருமைக்குரியது. போற்றுதற்கும் உரியது.

பொங்கல் திருநாளன்று இந்துக் கோயில்களில் மூலமூர்த்திக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகம் இடம்பெற்று சிறப்பான முறையில் பூசைகளும் இடம்பெறும். மேளதாளங்களோடு சுவாமி வீதி உலா வருதலும் சில ஆலயங்களில் இடம்பெறுவதுண்டு. மக்கள் பெருமளவில் ஆலயங்களுக்கு சென்று பூசைகளைக் கண்டு சுவாமி தரிசனம் பெற்று அர்ச்சனையும் செய்து நிறை மனதோடு இல்லம் ஏகும் பண்பு எவ்விடத்தும் உண்டு.

**பட்டிப் பொங்கல்**

பொங்கல் தினத்துக்கு மறுநாள் பட்டிப் பொங்கல் அல்லது மாட்டுப் பொங்கல் கால்நடைவளர்ப்போரின் இல்லங்களில் இடம்பெறும். அன்றைய தினம் தொழுவங்களைக் கழுவி சுத்தம் செய்து புனிதம் பேணி மாடுகளை நீராட்டி நீறிட்டு பொட்டுமிட்டு மாலையும் சூட்டி தொழுவத்தில் தோரணம் கட்டி கரும்பும் நாட்டி கும்பமும் வைத்து நல்ல எண்ணத்தோடு மனமகிழ்வோடு பொங்கலிட்டு பழ வர்க்கங்களும் சேர்த்து படைத்து தூப தீபம் காட்டி நறும் புகையேற்றி பணிந்து காளைமாட்டுக் கும், ஆவினங் களுக்கும் ஊட்டி தாமும் சுற்றமும் சூழ உண்டு மகிழ்ந்து பெரு நன்றியைத் தெரிவிக்கும் பாரம்பரியத்தில் இத் தினத்தில் நடக்கிறது. உலகுக்கு ஒளிகொடுத்து உலகை வாழவைக்கும் சூரிய தேவனுக்கும் உழவுக்கும் விளைவுக்கும் காரணமாகி கருணையால் எவையும் நல்கும் பூதேவிக்கும் ஏர் உழுதும், பாரம் இழுத்தும் உற்ற தோழனாய் என்றும் உழவனுக்கு உதவும் காளை மாடுகளுக்கும் பால சுரந்தீயும் ஈகைக்குணம் கொண்ட பசுக்களுக்கு நன்றி செலுத்தும் இப் பெருநாளில் எங்கும் இன்பம் பொங்க வேண்டிக் கொள்வோம். சோகங்களையும் ஆறா வடுக்களையும் சுமந்து வந்த தமிழினம் சந்தோசம் கண்டு பேரோடும் பெருமையோடும் வாழ இன்றைய பொங்கல் நன்னாளில் இறைவனை வேண்டுதல் செய்வோம்.

பொங்கு தமிழ் பொங்கி போற்றுமினம் வாழ இப் பொன்னாளில் இறையருள் கிடைக்கும் காரியம் கைகூடும் என நம்புவோம்.

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
After O/L What Next?

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது.
தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற் கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Young Learners for English (YLE) (வயதெல்லை : 7 – 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.

Diploma In English (2Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது.
இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.
தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

A1 Exam-Sponsor Visa/ Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை.
- U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
- எமது கல்லூரியிலேயே மாதிரிப் பரீட்சைகள் நடைபெறும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

IELTS
Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system
We gurantee minimum 6.0 band and above
Duration 2 1/2 Months

B1 Exam-Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

| Batch - 01 | Batch - 02 | Batch - 03 | Batch - 04 |
|---|---|---|---|
| 18.01.2014 | 20.01.2014 | 25.01.2014 | 27.01.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch :
NO. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna.
Tel : 021 222 4550

Hotlines :
0777585913
0777222422
0714299935
0777730074

Vavuniya Branch :
NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel : 024 324 5287

பிறக்கும் தைத்திருநாள் புதுப்பொலிவுடன் மிளிர வாழ்த்துகின்றோம்
கஜசங்கவி சென்ரர் & பிறிண்டேர்ஸ்
எம்மிடம் சகலவிதமான திருமண அழைப்பிதழ்கள்,
பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், கேக் பெட்டிகள்,
அன்பளிப்புப் பொருள்கள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
(சி/10407)
இல. 237, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 222 7885, 077 603 1071 No.237, K.K.S. Road, Jaffna.

R.V.G
ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6806

அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள்
அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஆர்.வி.ஜி மருந்தகம்
சகலவிதமான நோயாளர்களையும் வைத்திய நிபுணர்களின் ஆலோசனை பெறுவதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும். பதிவுகளுக்கு முந்துங்கள்
504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பே. 0212222129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்

LNR CONSTRUCTIONS (PVT) LTD.

யாழ்.மண்ணில் மக்களின் மகிழ்ச்சிகரமான வாழ்வியலைக் கட்டியெழுப்பும் ஒரேநோக்கோடு தரமான பொறியியலாளராலும் கட்டட வடிவமைப்பாளர்களாலும் தரமாக நடத்தப்படும் ஒரே ஸ்தாபனம்

இல.37, விக்னேஸ்வராக் கல்லூரி வீதி,
நெல்லியடி.
e-mail :- lnrconsnelliadi@gmail.com

Contact no : Office : 021 226 1000
Mobile : 0777286008, 0774320946
Website :- lnrconstructions.com

# "வருக வருக தைமகளே வருகவே"

வருக வருக தைமகளே வருகவே - எமக்குத்
தருக தருக நல்லவாழ்வு தருகவே!
விரைக விரைக தைமகளே விரைகவே - இன்றே
களைக களைக துன்ப வாழ்வு களைகவே!!
வளர்க வளர்க தைமகளே வளர்கவே - என்றும்
உயர்க உயர்க உழவுத் தொழில் உயர்கவே!
மலர்க மலர்க தைமகளே மலர்கவே- நிதமும்
வளர்க வளர்க கைத்தொழில்கள் வளர்கவே!!
சிறக்க சிறக்க தைமகளே சிறக்கவே - நின்று
நிலைக்க நிலைக்க தமிழருரிமை நிலைக்கவே!
செழிக்க செழிக்க தைமகளே செழிக்கவே - எங்கும்
ஜொலிக்க ஜொலிக்க
தமிழர்கலைகள் ஜொலிக்கவே!!
தருக தருக தைமகளே தருகவே! எமக்குத்
தருக தருக வேண்டும் வரம் தருகவே!
பெறுக பெறுக தைமகளே பெறுகவே -என்றும்
பெறுக பெறுக எமது அன்பைப் பெறுகவே!!

"வயலூர் முருகன்"

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
Learn French The French Way
af பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள் ;
அன்பான மாணவச் செல்வங்களுக்கும் ஏனையோருக்கும்
பொங்கல் வாழ்த்துக்கள்

யார் AF இல் FRENCH படிக்க முடியும்?
திருமணம் மூலம் France, Canada... செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய / கல்விகற்க செல்வோர், மாணவர்கள் மேலும் French கற்கவிரும்புவோர் படிக்கலாம். இங்கு வடமராட்சி, வன்னி, வவுனியா, மற்றும் மன்னாரைச் சேர்ந்த பலரும் படிக்கிறார்கள்.
- Speaking, writing, listening & reading திறமைகளில் நன்கு தேர்ச்சிபெற்றிட...
- *Videos* for listening & speaking practice : "*Bienvenue en France*" Episode N°. 1,2,3,4...
- வகுப்பறையில் வழங்கப்படும் பாடப் பிரதிகள; (Photocopies) முற்றிலும் இலவசம்;
- **Exams, Certificates and Diplomas**
  1. Elementary level - 1 (6 Months, 100 Hours, CERTIFICATE Course)
  2. Elementary level - 2 (4 Months, 60 Hours, CERTIFICATE Course)
  3. International Diplomas : DELF A1, A2

எங்கு French படித்தாலும் இப்பரீட்சைகளை ஏதாவதொரு AF இல் மட்டுமே எழுத முடியும். மேலும் யாழில் AF இல் கற்பவர்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் அனுமதி.
- Letter in French : 6 மாதத்தினை நிறைவுசெய்யாதோருக்கு / Embassy க்கு (இலவசம்)
- Translations in French: பிறப்பு, இறப்பு & திருமண சான்றிதழ்கள்.மேலும் நூலக வசதி...

கவனிக்கவும் : சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியான CERTIFICATES ஐ உலகில; AF மட்டுமே வழங்கி வருகிறது. யாழில; AF 1976 இல் இருந்து இயங்கிவருகிறது.

**Yes, I can ... speak French**

புதிய வகுப்புகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுசெய்யுங்கள்

*AF is the only International Organization for French in Northern Province*


61, Kachcheri-Nallur Road, Jaffna 021 222 8093
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
சகல அளவுகளிலும் கொங்கிறீட் கற்கள், வேலித் தூண்கள், வீட்டுத் தூண்கள், பல வடிவங்களில் நிலப் பதிப்பு கற்கள், பூச்சாடிகள், வீட்டு அலங்காரப் பொருள்கள் அனைத்திற்கும்
**Mr. Concrete**
ISO 9001 - 2008
Kodikamam Road, Puloly.
Tel : 021 722 2333
021 226 2777
Hotline : 077 612 6089
www.mrconcrete.lk
mrconcretelk@gmail.com

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்
**கவிராஜ் லேணர்ஸ்**
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
பதிவு இல.-DS-770
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- அனுபவம் வாய்ந்த சாரதிப் பயிற்றுனர்களால் சாரதிப் பயிற்சி வழங்கப்படும்.
- தாங்கள் விரும்பிய நேரங்களில் சாரதிப் பயிற்சி வழங்கப்படும்
- எழுத்துப் பரீட்சைக்குரிய விசேட வகுப்புக்களுடன் மாதிரி வினாத்தாள்களும் செய்து காண்பிக்கப்படும்.
- தவணை முறைக் கட்டணங்களில் பணத்தைச் செலுத்திக் கொள்ளலாம்.

தலைமைக் காரியாலயம்: A9- கண்டிவீதி, கொடிகாமம்.
021 568 1110 077 632 0196
கிளை: யாழ் வீதி, நாவலர் மடம், நெல்லியடி.
021 568 5486
071 199 6045

BCAS Campus இன்
இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்...
O/L , A/L இன் பின்னர்...
யாழ் நகரில்



Edexcel HNDs in...
- Quantity Surveying
- Civil Engineering
- Biomedical Science
- Law
- Business Management
- Computing

Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) / LLB (Hons) from more than 105 Universities in UK , USA, Australia & Canada etc.......

- உயர் கல்வித் துறையில் 15 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கையின் முதற் தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ் வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற்கான வாய்ப்பு
- மேலுள்ள துறைகளில் HND ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 க்கு மேற்பட்ட பிரித்தானிய அமெரிக்க, அவுஸ்ரேலிய மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப்படிப்பின் இறுதியாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு
- கடந்த 15 வருடங்களில் HND உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உயர் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
15 YEARS
CERTIFIED
Colombo | Dehiwela | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

Multilac
Colourbank
KANDHAVELAN TRADERS
தைத்திருநாள் மலர்வுடன் புதுயுகம் படைப்போம்



வர்ண உலகின் புரட்சி
Multilac Paints
கந்தவேலன் ரேடர்ஸ்
இல. 110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2822
WE COLOUR THE WORLD

தைத்திருநாளில் மக்கள் சுபீட்சமாக வாழ அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்



டோனிகா
நகைத் தொழிலகம்
நகை வியாபாரிகள்
நம்பிக்கை, நாணயம், நயமான சேவை
82, எச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 888 6191

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
வாடிக்கையாளர்களுக்கு சிறந்த விலைக் கழிவுடனும், விசேட சலுகைகளுடனும் ஹொண்டா உற்பத்திகளை வழங்குகின்றோம்.
**Honda World**
HONDA
Point Pedro Road, Nelliady.
T.P: 021 226 4416 Fax: 077 038 7444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுஜீவா வைத்தியசாலை

## (சுஜீவா தாய்மைப் பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)

கலட்டியம்மன் வீதி (தட்டாதெருச் சந்திக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில்) கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P: 077 559 4147

**சேவை நேரம்: காலை 7.00 மதியம் 11.00 மாலை 3.00 - 5.00 வெள்ளிக்கிழமை விடுமுறை**




**பொறுப்பு வைத்தியர்**
Dr.ஜெ.ஜெயலன்
(D.A.M, RIMP) J.P
குடும்பத்திட்டவியலாளர், பயிலுனர், சட்டபீடம் இலங்கை திறந்த பல்கலைக் கழகம், கௌரவ செயலாளர், வட இலங்கை சுதேச வைத்தியசபை.



Dr.க.ஒ.இராஜரத்னம்
(RIMP)
24ஆவது அனுராதபுர மகா களத்தாவ (நாகர் இராஜ) பரம்பரை, குடும்பத் திட்டவியலாளர். சிங்கள மொழியில் ஆயுள்வேத சர்வாங்க பரீட்சையிலும் விஷகடி விசேட பரீட்சையிலும் சித்தியடைந்தவர்.



Dr.ச.ஜெயலன்
(D.A.M, RIMP), J.P
25ஆவது அனுராதபுர களத்தாவ (நாகர் இராஜ) பரம்பரை முன்னாள் விரிவுரையாளர் லங்காசித்த ஆயுள் வேத மருத்துவக்கல்லூரி.





சுஜீவா வைத்தியசாலைக்கான அடிக்கல்லை சுதேச வைத்திய அமைச்சர், பிரதி அமைச்சர், பேராசிரியர் நடேசராஜன் ஆகியோர் நாட்டியபோது

பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எமது 23 தலைமுறைகளுக் குரிய ஓலைச்சுவடிகளிலுள்ள வைத்திய நுணுக்கங்கள் எமக்குக் கிடைத்த பல வைத்திய மேதைகள் (நல்லூர் அரசர்கள் செகராஜ சேகரன் பரராச சேகரன் உட்பட) கையாண்ட வைத்திய முறைகள். யாழ்ப்பாணம் லங்காசித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி ஆசான்கள் கற்பித்தவை. அதிசிறந்த ஆயுள்வேத நூல்களில் உள்ளவை. நவீன முறைகள் மூலமாகவும் எம்மால் தயாரிக்கப்பட்ட இயற்கை மருந்து கள் மூலமாகவும் மாற்ற முடியாதெனக்கருதிக் கைவிடப்பட்ட வியாதி களை (வாதம், முட்டு, மாறாச்சளி, வயிற்றுப்புண், மூலம், பாரிச வாதம், சிறுநீர்ப்பை கற்கள், சருமநோய் (சோரியாசிஸ்), உடல் பரு மன், தலைமுடி உதிர்தல், நரம்பு வியாதிகள் உட்பட) நீக்குவதில் பெயர் பெற்றதுடன் விசேடமாகக் குழந்தை இன்மைக்கான சிகிச்சை யில் நூற்றுக்கணக்கான குழந்தைகளை உருவாக்கி பிரபலமடைந் துள்ளது.

### இந்தியா மற்றும் இலங்கையில் அதிநவீன சிகிச்சைகளால் குணப்படுத்த முடியாது கைவிடப்பட்டு குழந்தைகளுக்கு ஏங்கும் தம்பதிகளுக்காக இங்கு நீக்கப்படும் ஆண், பெண் இருபாலாருக்குமான குறைகள்.


பரம்பரை/பிறவிக்குறைபாடுகள்/வயது வந்தும் பருவமடையாமை/மாதவிடாய் குறித்த காலத்தில் வராமை /அதிக மற்றும் குறைந்த குருதிப்போக்கு/ வயிற்றுவலி / இயல்புக்கு மாறான கருப்பை/சூலக கருப்பைக் கட்டிகள்/முட்டை ப்லோப்பியன் குழாய், கருப்பைக் கழுத்துக் குறைபாடுகள் / கொழுப்பு / நோய்த்தொற்று / கருச்சிதைவு / கருக்கலைப்பு மற்றும் அறுவை சிகிச்சை என்பவற்றால் உண்டான அழற்சிகள் / வெள்ளைபடல் / உளவியற் காரணங்கள் ஓமோன் சமச்சீரின்மை / பெண்ணில் ஆண் இயல்பு (முக உரோமம்) / உடலுறவில் நாட்டமின்மை, உடல் சூடு / உடலுறவில் வலி, நோய், எரிவு/மார்பக வளர்ச்சி குறைபாடு.

விந்து இல்லாமை, எண்ணிக்கை குறைவு, உருவ அமைப்பு பிழைகள், ஓடும் திறன் குறைவு/ நோய்த் தொற்று/விதையில் தடித்த நாளங்கள் (Varicousvein) சுருங்கிய குழாய்கள்/ நோயெதிர்ப்பு பொருள்/ ஆண் குறி சிறுத்தல்/ விறைப்புத் தன்மை குறைவு/ விரைவான விந்து வெளியேற்றம் / சிறுநீருடன் அல்லது தன் பாட்டில் விந்து வெளியேறல்.


## நினைவுகளை மீட்டல்



வைத்தியர்களின் திருமணத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள் வந்து ஆசீர்வதித்தபோது



50 வருடங்களின்பின் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சுதேச வைத்திய மாநாட்டுக்கு வைத்தியர் ஜெ.ஜெயலன் தலைமைதாங்கி உரையாற்றியபோது (2009)



மிக நீண்ட காலத்துக்குப் பின் அமைச்சர்களை ஆயுள்வேத கல்லூரிக்கு அபிவிருத்திக்காக அழைத்துவந்தபோது (ஸ்ரான்லிவீதி)



எமது வைத்தியசாலையின் இலவச சுதேச வைத்திய முகாம் காரைநகரில் (2003). எமது வைத்தியருடன் Dr. பிலிப்



லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரி பவள விழாவின்போது ஏடுகள் கண்காட்சியில் (2002)



மாண்புமிகு ஜனாதிபதியின் செயலாளர் வைத்தியரின் வீட்டில் (2010)



10000 மரம் நாட்டல் திட்டம்



50 வருடத்தின் பின் அரச அங்கீகாரமுடைய DAM பட்டம் ஆயுள்வேத கல்லூரி சார்பாக உத்தியோகபூர்வமாக வழங்கியபோது



வைத்தியரின் வீட்டில் நா.உ. M.K. சிவாஜிலிங்கம் அவர்கள் (2003)



முன்னாள் ஆயுள்வேத அமைச்சர் பியசேன கமகே அவர்களுடன்



பல்வேறு நிகழ்வுகளின்போது



பல நிகழ்வுகளின் போது



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேயர் ஆகியோருடன்



பல நிகழ்வுகளின் போது



வைத்தியரை கௌரவித்த போது



நாடாளுமன்ற உறுப்பினர் சில்வஸ்ரி அலன்ரின் வைத்தியரை கௌரவித்த போது



கோப்பாய் RDS ஊடாக 'சமூகதிலகம்' எனும் கௌரவத்தை Dr. ஜயவர்த்தா (MBBS) வழங்கியபோது



பல நிகழ்வுகளின் போது



சுஜீவா வைத்தியசாலை (சுஜீவா சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை) நினைவுக்கல்லை சுதேச வைத்திய அமைச்சர் திறந்து வைத்த போது



எமது வைத்தியசாலையின் சிகிச்சையால் பிறந்த குழந்தைக்கு வைத்தியசாலை பிள் வைத்து சுதேச வைத்திய அமைச்சர் பரிசு வழங்கிய போது

(C/10443)(10.6.3)

**"எமது சுதேச மருத்துவம் சிவபெருமானால் உருவாக்கப்பட்டது. இதற்கு சாதி மத இன கட்சி பேதம் கிடையாது. எமது வைத்தியம் எல்லோருக்கும் பொதுவானது. எமது வைத்தியத்திற்கு முற்காலத்தில் அரசர்கள் ஆதரவு தந்தார்கள். அதேபோல் இக்காலத்திலும் சகல மதத்தவர்களும், மக்களும், அரசியலாளர்களும் ஆதரவு தரவேண்டும்" இந்த வழியில் இன்றைய தைப்பொங்கல் நன்னாளில் சுதேச மருத்துவம் வளர பாடுபடுவோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்தம் நெற் & மொபைல் பிளாசா

கணினி பழுதுபார்த்தல், கணினி உதிரிப்பாகங்கள், கையடக்கத் தொலைபேசி பழுது பார்த்தல் ஆகியன சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

வசந்தம் நெற் அன் மொபைல் பிளாசா
உடுப்பிட்டிச் சந்தி, உடுப்பிட்டி.
T.P: 021 226 3508

---

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

## துஷானி கிளாஸ் ஹவுஸ்

சகல விதமான அலுமினிய பேனிச்சர்ஸ், பிற்றிங் வேலைகள், கிளாஸ் வகைகள், மெத்தை வகைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.

இல. 114, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே. 021 226 3076

---

அனைவருக்கும் உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

## சந்நிதியான் திருமண சேவை

இப்பொழுது யாழில், இந்து/RC சகல ஜாதிகளிலும் Specially குருகுலம் (உள்நாடு, வெளிநாடு) 12 வருடங்கள் அனுபவமிக்க Best & Fast சேவைக்கு சந்நிதியான் திருமண சேவை. Photo, பூரண விவரங்களுடன் அணுகவும். சந்நிதியான் திருமண சேவை, வேம்படி, வல்வெட்டித்துறை. Email: sannithiyanms@gmail.com
077 357 3055

---

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

## தமிழ்ப்பூங்கா பதிப்பகம்

சகலவிதமான அச்சு வேலைகளும் அழைப்பிதழ்களும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்

**Tamil Poonga**
OFFSET PRINTERS Main Street, Nelliyady.
பிரதான வீதி, நெல்லியடி. Tel: 021 226 4014

---

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்

## DORJA NAGAI PPOONKA
## டுர்ஜா நகைப்பூங்கா

தரமான 22 கரட் தங்கநகைகளைப் பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்

(ஓடர் நகைகளைக் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளலாம்)

கொடிகாமம் வீதி, நெல்லியடி. தொ.பே: 077 952 6392

---

தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

## சுஜி களஞ்சியம்

சகலவிதமான கோழித் தீவனங்கள் மற்றும் கோழிக்குஞ்சுகள் அதற்குரிய மருந்து வகைகள் அனைத்தும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தெணியம்பை சந்தி. V.V.T.
T.P: 077 977 9786

---

## BOMBAY SWEETS & CREAM HOUSE

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது பொங்கல் நல் வாழ்த்துக்கள்

பொம்பே கிறீம் கவுஸ்

NO.605A, K.K.S ROAD, JAFFNA. T.P:0212223525

இங்கு சுவிற் வகைகள், வடை, றோல், கேக் வகைகள் ஓடர்களுக்கு செய்துகொடுக்கப்படும். அத்துடன் உரிய இடத்துக்கு கொண்டு வந்து தரப்படும்

No: 605-A, K.K.S. Road, Jaffna.

---

## MAHY Beauty Parlour

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

இந்தியாவில் சிறப்புப் பயிற்சி பெற்ற அழகுக்கலை நிபுணர் மதி ஆசிரியரால் அழகுக்கலை வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். நவீன கருவிகள் மூலம் பேசியல் சிகிச்சை மற்றும் சிகிச்சையும் செய்யப்படும்.

MAHY Beauty Parlour
1st Mile Post, Point-Pedro
T.P: 077 624 4880

---

அன்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனித்திடும் பொங்கல் வாழ்த்துக்கள்

## Sellamuthus Textiles

Main Street, Nelliady, Karavetty.
Tel: 021 226 3238

---

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

## ஸ்ரீ சுசீலா ஆபரண மாளிகை

(916 KDM) தங்க நகைகள் மொத்தமாகக் கிடைக்கும்.
239, பிரதான வீதி, பருத்தித்துறை.
T.P:- 021 3207437, 077 721 0206
021 226 1003

---

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

ANNA's TEA
FINEST QUALITY

## அண்ணா தொழிலகம்

ANNA SPICED COFFEE

Anna Jeevakaram

ஜீவாகாரம் அண்ணா

Manufactured By Anna Industry Inuvil, Jaffna Tel: 021 22 23 565

ANNA COFFEE

ANNA Spiced Coffee
மல்லிக் கோப்பி
SRI LANKA'S BEST QUALITY COFFEE POWDER

**அண்ணா மல்லிக் கோப்பி,**
உலகத் தரம் வாய்ந்த பொதிகளில் உங்கள் வசதிக் கேற்ப எமது விற்பனை முகவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ANNA INTERNATIONAL (PVT) LTD.214/5, Messenger Street, Colombo - 12.
Tel:- 021 7200800, +94112436063. துரை வீதி, இணுவில்.

---

## தாஸ் அலுமினியம் பிற்றிங்


இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்

அலுமினியம் கதவுகள், யன்னல்கள், கிச்சின் அலுமாரிகள், பெட்றூம் அலுமாரிகள், ஹோல் சோக்கேஸ், ஜிப்சம் லெவல் சீற் வேலைகள், பாட்டிசன் வேலைகள் அனைத்தும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

THASH ALUMINIYA FITTING & FRAMING
PPD ROAD, NELLIYADY. T.P: 077 292 4741

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியும், மனிதநேயமும் வளர பிரார்த்திப்போம்



தமிழர் திருநாளாகிய தைப்பொங்கல் தினத்தில் விருத்தோம்பி, ஏற்றத்தாழ்வுகளை களைந்து மனிதநேயமுள்ளவர்களாக நாம் வாழவேண்டும். இயற்கைத் தெய்வமாகிய சூரிய பகவானை நினைத்து நன்றியோடு பொங்கிப்படைத்து வணங்கும் திருநாளே தைத் திருநாள். இந்தத் திருநாளில் வையகத்தை வாழ வைக்கும் உழவர் பெருமக்களை நாம் அனைவரும் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம்.

" பாடுபட்டு உழைப்பவர்க்கே
இப் பாரிடம் சொந்தமையா
காடு திருத்தி நாடு காண்பவர் அவரல்லவோ" என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாவரிகளுக்கு அமைய பாடுபட்டு உழைக்கும் மக்கள் பாராட்டுக்குரியவர்கள் பொங்கல் நன்னாள் இயற்கைக் கடவுளுக்கும், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி கூறி வாழ்த்தும் திருநாள். இந்து சமயத்தவர்களின் இப் பாரம்பரிய பண்டிகையை ஏனைய மதத்தவர்களும் இன்று இணைந்து கொண்டாடுகின்றனர். தமிழர் பண்பாட்டும் பாரம்பரிய விழாக்கள் பல தைப்பொங்கல் திருநாளை அடிப்படையாகக் கொண்டு எழுச்சி பெற்றன.

ஆடவர்கள் தங்கள் உடல் ஆளுமையை வெளிப்படுத்துவதற்கு இந்த நாளில் பல விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவர். பெண்கள் தோழிகளோடு ஆடிப்பாடி அக மகிழ்ந்து தமக்குரிய விளையாட்டுக்கள் ஊடாக மகிழ்வைப் பகிரும் நாளாக இந் நாள் விளங்கியதை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற உணர்வு அன்றும் இன்றும் மக்களிடம் இயல்பாகவே காணப்படுகிறது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரது அன்பை, விருந்தோம்பல் சிறப்பை வளர்ப்பதற்கு இந்த திருநாள் முன்னுதாரணமாகவுள்ளது. தைத்திருநாள் அன்று அனைவரும் தங்கள் சோம்பலைத் தவிர்த்து அதிகாலையில் எழுந்து இறைவழிபாடு செய்தல் வேண்டும். தாங்கள் வாழும் இல்லங்களிலும், வாழ வைக்கும் தொழில் நிலையங்களிலும் பொங்கிப்படைத்து அனைவரும் பகிர்ந்துண்ண வேண்டும்.

இந்த நாளில் ஏழைகள், நோயாளர்கள் பல்வேறு இழப்புக்களால் மனம் தளர்வுற்றிருப்பவர்கள், மூத்தோர் போன்றோரை நாடி, ஆறுதலையும் அன்பையும் வழங்க வேண்டியது மனிதநேயமுள்ளவர்களின் பெருங்கடனாகும்.

உங்கள் பிள்ளைகளை பண்புள்ளவர்களாக வாழ வைப்பதற்கு இத்தகைய நாள்களில் நீங்கள் வழிகாட்டுங்கள். இதன் மூலம் உங்கள் நடைமுறைகளை உங்கள் பிள்ளைகள் ஓரளவேனும் பின்பற்றுவார்கள். நீங்கள் முன் மாதிரியாக நடந்து கொள்ளுங்கள். இனிய குழந்தைகளே ஆடிப்பாடி மகிழுங்கள். தீய சிந்தனை உடையவர்களுடன் கூட்டுச் சேராதீர்கள். வாழ வேண்டிய வயதில் நன்றாய் வாழ்வதற்கு நல்லதைச் செய்யுங்கள். எவ்வளவோ உறவுகளை, உடைமைகளை இழந்தவர்கள் நாங்கள்.

கையில் புகைப்படங்களும் கொண்டு என் பிள்ளையை, என் கணவனை, என் சகோதரனை, என் சகோதரியைக் காணவில்லை என்று அலைந்து அழும் மக்கள் வாழும் மண்ணில் ஆடம்பரம், அட்டூழியம் கொலை, கொள்ளை என்ற வார்த்தைகள் அருவருப்பைத் தருகின்றன. ஆதரவற்ற சிறுவர் இல்லங்களில் பெற்றோரைப் பிரிந்து பல்லாயிரம் சிறுவர்கள் தாய் மடியின்றி உறங்குகிறார்கள். தானாகவே எழுந்து பிஞ்சு வயதிலேயே தன் ஆடையைத் தோய்த்து தன் கடனைத் தானே செய்யும் தளிர்களின் நிலையை அறியுங்கள். வீதிகளில் வீண்சண்டை செய்யாதீர். வெடி கொழுத்தி வேடிக்கை செய்யாதீர். வீணாகப் பணத்தைச் செலவு செய்யாதீர். காத்திரமான காரியங்களால் பிறர் கண்ணீரைத் துடைப்பதற்கு உங்கள் கரங்களை நீட்டுங்கள். தைத் திங்கள் முதல் இத் தரணியில் நீதி பிறக்கட்டும். நியாயம் வெல்லட்டும். உலகம் அமைதியால், மனித நேயத்தால் மாண்புற அனைவரும் ஒன்றுபட்டுப் பிரார்த்தியுங்கள். தைத் திருநாளை தர்ம வழி நின்று வரவேற்போம்.

கலாநிதி ஆறு.திருமுருகன்
*தலைவர்,*
*துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை*
*தலைவர், சிவபூமி*
*அறக்கட்டளை*

# ஆனந்தம் பொங்கட்டும்



உலகில் எப்போதும் மகிழ்ச்சியாக வாழ்பவர்கள் ஞானிகள். அத்தகைய மகிழ்ச்சியுடன் மனிதனும் வாழ முடியும். ஆனால் அவ்வாறு வாழ்வதில்லையே ஏன்? மனிதனின் மனமே அவனது வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது. உள்ளம் தூய்மையாக இருந்தால் அங்கே இறைவன் குடிபுகுந்து விடுகிறான். அதனால் இன்பம் மேலோங்கும்.

மனதில் தீய எண்ணங்கள் என்னும் மாசுகள் நிறைந்திருந்தால் மனிதனால் எந்நாளும் துன்பத்தை தவிர இன்பத்தை அனுபவிக்க முடியாது. கோபம், பொறாமை, பேராசை, வஞ்சகம், பொய், பிறர்பொருளை அபகரிக்கும் எண்ணம், பிறரை ஏமாற்றுதல், பிறரைத் துன்புறுத்துதல் ஆகிய தீய எண்ணங்கள் உள்ளத்தில் குப்பையாக மண்டிக்கிடக்கிறது. அதனால் தான் மனிதன் துன்பத்தில் உழன்று வருந்தி அதிலிருந்து மீள வழியின்றித் தவிக்கிறான். இந்தக் குப்பைகளை எல்லாம் அகற்றி விட்டால் உள்ளமானது இறைவன் வாழும் ஆலயமாக மாறி விடுகிறது. அங்கு ஆனந்தம் நிலையாக தங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மனதைத் தூய்மைப் படுத்துங்கள். இறைவனைக் குடியேற்றுங்கள். என்றும் ஆனந்தம் பொங்க வாழுங்கள். இந்தப் பொங்கல் திருநாள் இன்பங்கள் பொங்கும் திருநாளாக அமைய வாழ்த்தி என்றென்றும் ஆனந்தத்துடன் நீங்காத செல்வம் நிறைந்து வாழவேண்டும் என்று எம்பெருமாட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பிகையின் திருவடிகளைச் சிந்தித்துக் கொள்கிறேன்.

சிவஸ்ரீ சோமஸ்கந்த
தண்டபாணிகதேசிகர் J.P
இந்து மத குரு பீடாதிபதி
அகில உலக சைவக் குருமார்
சம்மேளனம் பிரதம குரு வல்வை
ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம்,
வல்வெட்டித்துறை.

# பொங்கும் திருநாள்!

திசையெங்கும் கதிர் பரப்பி
கதிரவன் எழுந்திட.....,
கண் விழித்து மண்ணெங்கும்
பேரன்பை அள்ளிக் கொண்டு
கோலங்களால் நிறைத்து
மகிழ்வுற்று வரவழைத்திடுவாள்
தமிழ்த் தாயவள் தன் மடிமீது....!
உறவுகள் கூடி
உலகறியப் பேசும்!
மகிழ்ந்து உள்ளம்
குதூகலத்தில்-அத்தனையும்
மனமெங்கும் பொங்க
விழிநீர் பெருக்கெடுத்தோடும்....!
நெற் கதிர்களெல்லாம்
பூசித்திடும்-இப்
புனித நன் நாளில்
அக் கதிர்கள் ஆங்காங்கே
பல விதை நிலங்களுக்காய்
ஏங்கித் தவிக்கிறது....!
பொன் நாளாம்-அந் நாள்
எம்மின விடியலின் திருநாள்
காத்திருக்கிறோம்-நம்
காலத்தின் கனிவான நாளிதுவன்று!

என்.பிறேமசீலன்,
கோண்டாவில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக



மகரஜோதி தரிசனம், மகரசங்கிரகாந்தியுடன் ஆரம்பமாவது உத்தராயண புண்ணிய காலமாகிய தைப் பொங்கல் தினமாகும். உழவர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாளில் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நிகழ்வாக பொங் கல் பொங்கி வழிபாடுகள் செய்து வருவது தமிழ் மக்களின் வழமையாகும். இப் பொங் கல் திருநாளுடன் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து சுதந்திரமான சௌபாக்கி யங்களுடன் கூடி வாழ இறைவனை பிரார்த் தனை செய்வோமாக.

"லோகா சமஸ்தா சுகினோபவந்து"
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்,
பிரதமகுரு, வைத்தீஸ்வர சுவாமி
தேவஸ்தானம், வல்வெட்டித்துறை.

## நல் வாழ்வு பெருகிடட்டும்



அகிலமெங்கும் பரந்து வாழுகின்ற பொங்கு தமிழ் மக்களால் இனிமையுடன் கொண்டாடப்படுவது தைப் பொங்கல் திருநாள். வயலில் அறுவடை செய்த நெல்லை உழவன் குத்தி அரிசி மணிகளாக்கி புதுப்பானையில் பால், பருப்பு, சர்க்கரை, தேன், நீர் வார்த்து அடுப்பிலிட்டுக் பால் பொங்கிவர அதில் புத்தரிசியை இட்டுப் பொங்கி அந்தப் பொங்கலைச் சூரிய பகவானுக்குப் படைத்து நிவேதனம் செய்து உறவினருடனும் சுற்றத்தாருடனும் குடும்பமாக உணவுண்டு மகிழ்வுடன் கொண்டாடும் திருநாளே தைப்பொங்கலாகும்.

இந்து மக்களின் கண்கண்ட தெய்வமாகிய சூரிய பகவான், மகர ராசிக்கு வருகின்ற தினம் தைப்பொங் கலாகும். மிக பெருமை தரும் புனிதம் வாய்ந்த இன்றைய நன்னாளில் சாந்தி, சமாதானம், சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வு பெருகி நிலைத்திட எல்லாம் வல்ல ஸ்ரீவல்லிபுர மாயவனின் பேரருள் வேண்டிப் பிரார்த்தித்து அனைத்துலகம் வாழும் மக்கள் அனைவருக்கும் மாயவனின் நல்லாசிகளையும் எமது நல் வாழ்த்துக்களையும் கூறிக் கொள்கிறோம்.

பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு
பிரதம குரு, ஸ்ரீ வல்லிவுர ஆழ்வார் சுவாமி கோயில்

## தமிழர்களுக்கு நல்வழி பிறக்கட்டும்

சைவத் தமிழர் தம் பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் தைப்பொங்கல் திருநாளில் அதிகாரமும் அந்தஸ்தும் கிடைத்திட வேண்டும்.

தமிழர் திருநாளாம் தைத் திருநாளில் எமது இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம். சமய அனுஷ்டானங்களையும் தமிழர் பண்பாட்டு மரபுகளையும் இணைக்கும் திருநாள் தைப்பொங்கல். மத வேறுபாடுகள் இன்றி அனைத்து தமிழர்களாலும் ஒன்றுகூடி மகிழ்வுடன் கொண்டாடப்படும் உழவர் திருநாள் தைப்பொங்கல். சூரியனுக்கும், வாழ்வுக்கும் உதவும் எருது, பசு முதலியனவற்றுக்கு நன்றி பாராட்டும் விழாவாகும். தமிழர்கள் இதனை ஒரு கலாசார விழாவாக, ஒரு தேசிய விழாவாக உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களால் சைவசமய அனுஷ்டானங்கள் வலுக்கின்றது. சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அதற்கமைவாக அறநெறி தளைத்தோங்க பொங்கட்டும். விடிவேற்பட வழி பிறக்கட்டும். நிரந்தரத் தீர்வுகள் எம்மை நாடி வந்திட வழி பிறக்கட்டும். அதிகாரமும் அந்தஸ்தும் கிடைத்திட வேண்டும். எல்லா வகையிலும் எம் மக்களுக்கும் வழி பிறக்க வேண்டும் என இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள்
தலைவர் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்



## தமிழர் நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்குமான குறியீடு தைப்பொங்கல்

தை மாதம் முதல் திகதியை மகர சங்கராந்தி என்பர். உத்தராயணம் ஆரம்பிக்கும் நாளும் அதுவே. தென் திசையிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் திரும்புவதை உத்தராயணம் குறிக்கும். தை முதல் ஆனி ஈறாகவுள்ள ஆறு மாதங்களைக் கொண்ட உத்தராயணம் புண்ணிய காலம் என்றும் சுபகருமங்கள் மங்கள காரியங்கள் நிகழுகின்ற காலம் என்றும் கொள்ளப்படுகிறது. உழைப்பின் உயர்வை உழவர்களின் மேன்மையை மதிக்கும் விழாவாகவும் தைப் பொங்கல் விழா பண்டு தொட்டு வழங்கி வருகின்றது. மனித உழைப்பாளிகளுடன் விலங்கு உழைப்பாளிகளையும் நினைத்து நேசித்து நன்றி செலுத்தும் பெரு நாளாகவும் தைப்பொங்கல் பண்டிகை விளங்குகின்றது.

பூமியிலே மழை அத்தியாவசியமாகத் தேவை. நீரின்றி இந்த உலகம் இயங்காது. மழையைத் தருபவன் சூரியன். வெப்பமும் ஒளியும் உயிர்ப்புச் சூரியனாலேயே அனைத்து ஜீவராசிகளுக்கும் வழங்கப்படுகிறது. இன்னார் இனியார், உயர்வு தாழ்வு என்னும் பேதங்களின்றி ஒரே விதமாக எல்லோருக்கும் அவற்றை வழங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தை முதல் நாளில் பொங்கி விழா எடுத்து வருகின்றோம். இத்தகு வழிபாடு தமிழ் மக்களின் நயத்தக்க நாகரிகத்தையும் உயர் பண்பாட்டையும் காட்டு கின்றது. பொங்கல் திருநாளுடன் தமிழ் மக்கள் வாழ்வில் துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெருக எல்லாம் வல்ல இறைபாதம் பணிவோம்.

மதுரகவி காரை.எம்.பி அருளானந்தன்.

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
அருள்நாயகி
சைவ உணவகம்
தரமானதும் சுவையானதுமான
உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்.
பிரதான வீதி, நெல்லியடி.

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
உலக நாயகி
திருமண சேவை
வீட்டில் இருந்தவாறே எமது துரித சேவையைப்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
உலக நாயகி திருமணசேவை
வாடிக்கையாளர் சேவை நிலையம்
T.P: 077 774 7864
துரித சேவை: 077 757 4437
தரகர்கள் தொடர்புகொள்ளலாம்
(C10438)(10.6.3)

அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துகின்றோம்
அபிராமி சூ சென்ரர்
ABIRAMI SHOE CENTRE
155, 156 Model Market. Power House Road, Jaffna.
021 222 3525

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
* WESTERN UNION பணப்பரிமாற்றம்
* ரைப்பிங்
* போட்டோ கொப்பி
* இணைய சேவை
அனைத்துக்கும் நாடவேண்டிய இடம்
Abi Netcafe
No:143, Main Street, Nelliady.
T.P: 021 226 2841, Fax: 021 226 2842
Email: abinetcafe2011@yahoo.com

யாழ் மாணவர்களுக்காக முதன்முறையாக LMCயின் நாம்...
Skill Development Courses மிகக்குறைந்த கட்டணத்தில்...
London Metropolitan College | Tel: 021 222 7230 | 021 753 8395
#197, Arasady Road, Jaffna. info@lmcjaffna.edu.lk | www.lmcjaffna.edu.lk

| Course | Duration | 1st Installment | 2nd Installment | 3rd Installment |
|---|---|---|---|---|
| Diploma in English, Diploma in Computer Studies, Diploma in Web Design | 4 Months | Rs. 3500 | Rs. 3500 | Rs. 3000 |
| Diploma in English, Diploma in Graphic Design, Diploma in Web Design | 4 Months | Rs. 4500 | Rs. 4000 | Rs. 4000 |
| Cert. in Spoken English, Diploma in Computer Studies, Diploma in Web Design | 4 Months | Rs. 3500 | Rs. 3500 | Rs. 3000 |
| IELTS (General or Academic), Diploma in Computer Studies, Diploma in Web Design | 4 Months | Rs. 5500 | Rs. 6000 | Rs. 6000 |
| City & Guilds A1 or B1, Diploma in Graphic Design, Diploma in Web Design | 4 Months | Rs. 5500 | Rs. 5500 | Rs. 5500 |
| IELTS (General or Academic), Diploma in Computer Studies, Diploma in Hardware | 4 Months | Rs. 5500 | Rs. 6000 | Rs. 6000 |

(C/10418)

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
கண் வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யும் கண்ணாடிகளை சரிவர பெற்றுக் கொள்ளவும், நவீன ரக Frame களையும், தரமான Lense களையும் பெற்றுக் கொள்ளவும் நாடவேண்டிய ஸ்தாபனம்.
ERIC GANESH OPTICAL
எரிக்கணேஷ்
பல், மூக்குக் கண்ணாடியகம்
அன்றும், இன்றும், என்றும் கண்ணாடிகளுக்கு பெயர் பெற்ற ஒரே இடம்
கே.கே.எஸ், வீதி, சுன்னாகம்.
இல. 91, ...
546,556, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 2486

தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
New Nelson Learners நியூ நெல்சன் லேணர்ஸ்
89, Kandy Road, Chundukuli, Jaffna.
T.P: 021 222 4527, 077 358 1916, 077 790 6064 Fax: 021 222 9109
நவீன வாகனங்களில் வாகன பயிற்சிகள்
021 492 3115 | 021 492 3114 | 021 222 4527 | 077 715 0097 | 077 557 3711
077 111 3382 | 077 761 1686 | 077 358 1916 | 021 492 3732 | 021 492 3733
(C/10429)(10.6.3)

தைத்திருநாளில் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்ஸ்
(இராஜபுரம்)
இல.105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6953


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடியலுக்கான புதிய பாதைக்கு தைப்பொங்கல் வழிவகுக்கட்டும்

இப்பிரபஞ்சத்தின் அனைத்து உயிர்களுக்குமே சக்தி வழங்கும் சூரிய பகவானுக்கு உழவுத் தொழிலின் மேன்மை வேண்டி எம்மவர்கள் படையலிடும் இந்த நன்நாள் வாழும் காலம் முழுவதுக்கும் தேசத்தின் பசி போக்கி முழு மக்களும் நிறைவுடன் வாழ இத்திருநாள் வழிகாட்ட வேண்டும்.

போர் ஓய்ந்துவிட்ட இந்த அமைதிச் சூழலில் நிம்மதியான வாழ்வுக்கான அனைத்து வழிகளும் திறக்கப்பட்டிருக்கும் நிலையில் நம்மவரின் வாழ்வுக்கு அடிநாதமாக இருக்கும் இந்த வேளாண் தொழில் சிறந்து எம்மவரின் வாழ்வும் சிறக்க நம்மாலான அனைத்து முயற்சிக்கும் இத்தினத்தில் நாம் உறுதி பூணுவோம்.

இத்தொழிலையே தனது வாழ்வின் ஆதாரமாக கொண்டு காலம் முழுவதும் மண்ணுடன் தனது வாழ்வை பொருத்திக் கொண்டுள்ள உழவர்களின் வாழ்வு செழிக்க ஆண்டு தோறும் மும்மாரி பொழிய வேண்டும்.



அதன்வழி அனைத்து மக்களதும் வளம் மிகுந்த வாழ்வை உத்தரவாதம் செய்யும் வகையில் அவசியமான திட்டங் களை இனங்கண்டு அவற்றுக்கு நாம் முறையான செயல் வடிவம் கொடுக்க வேண்டும்.

இனிவருங்காலங்களிலும் இத்தொழிலை நம்பிவாழும் மக்களின் எதிர்காலம் சிறக்க தேவையான திட்டங்களை முன்னெடுக்க இத் தைப்பொங்கல் திருநாளில் நாம் அனைவரும் உறுதி பூணுவோம் .

*ஈபிடிபியின் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன்.*

# நல்வழி பிறக்கட்டும்



தை பிறந்தால் வழி பிறக்கும் என்னும் கூற்றுக்கிணங்க தமிழர் ஆண்டின் தொடக்கம் எனப்படும் தை மாதம் முதல் நாளிலே தமிழர்களினதும், உழவர்களினதும் திருநாளாம் தைப் பொங்கல் தினமாம் இன்று நமது இலங்கைத் திருநாட்டிலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் அனைவரதும் இல்லங்களில் பொங்கல் பொங்க உள்ளங்களில் இன்பம் பொங்க வாழ்த்துகின்றேன்.....

அன்றியும், சொந்த ஊரிலே, சொந்த மண்ணிலே, சொந்த வீட்டின் முற்றத்திலே பொங்கலோ பொங்கல் எனப் பொங்கி மகிழ்ந்திட ஏக்கமுடன் ஏங்கி நிற்கும் அனைத்து நெஞ்சங்களுக்கும் இன்பமும், நிம்மதியும், சாந்தியும், சமாதானமும், அன்பும், அறமும் பொங்கி வழிந்திட, தேடுதல்கள் யாவும் கிடைத்திட, தேவைகள் யாவும் நிறைந்திட எமது மண்ணிலே வாழையடி வாழையாக தொடர்ந்திடும் எம் தமிழர் தம் வரலாற்றின் வளங்களும், கலாசாரம் மற்றும் பண்பாடு கல்வியின் வளர்ச்சியும், உழவுத் தொழிலின் மேன்மைச் சிறப்பும் மீண்டும் பொங்கி வழிந்தோட ஒளியும் சுபீட்சமும் மலர்ந்திட எனது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன் -

*வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன்.*















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Blue Ocean
LEADING THE WAY TO THE FUTURE

# இலங்கையின் எதிர்காலத்தை சிருஷ்டிக்கும் பணியில் Blue Ocean குழுமம்

இன்று பல்வேறு துறைகளில் பலம் வாய்ந்ததொரு வர்த்தகக் கட்டமைப்பாகத் திகழும் Blue Ocean குழுமத்தின் அபார வளர்ச்சிக்கு அக்குழுமம் கடந்த காலங்களில் மேற்கொண்ட ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் அர்ப்பணிப்புமிக்க வாடிக்கையாளர் சேவையுமே பிரதான காரணங்களாகும். "நேசத்துடன், வளர்ச்சியையும், இலாபத்தையும் ஈட்டுதல்" என்ற வர்த்தகக் கோட்பாட்டைத் தனது தார்மீகக் கொள்கையாகக் கொண்டிருக்கும் Blue Ocean குழுமம் தனது வெற்றிப் பயணத்தின் ஒவ்வொரு அடியையும் சிரத்தையுடனும் பொறுப்புணர்வுடனும் எடுத்து வைத்துள்ளது. பல்துறைகளைக் கொண்ட வர்த்தக சாம்ராஜ்யமாகத் திகழும் Blue Ocean குழுமம் தனது சீரிய நெறிமுறைகளாலும், ஆக்கபூர்வமான வர்த்தக நடவடிக்கைகளாலும் இலங்கையில் மட்டுமன்றி ஆசிய பசுபிக் பிராந்தியத்திலும் தனது காலடிகளை வெற்றிகரமாகப் பதித்திருக்கிறது.

Blue Ocean இன் இந்த நிறுவனத்தின் அபார வளர்ச்சிக்கும் அசைக்க முடியாத ஸ்திரத்தன்மைக்கும் பிரதான காரணம் அக்குழுமம் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான சகல சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் நேர்த்தியாகவும் நிறைவாகவும் வழங்குவதேயாகும். ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பிரத்தியேகக் கவனிப்பைக் காட்டுவதன் மூலம் Blue Ocean உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாடிக்கையாளர் மத்தியில் தனியிடம் பிடித்துள்ளது. "உங்கள் செல்வத்தைப் பாதுகாப்பதற்கான புத்திசாதுரியமான முதலீடு" என்ற தனக்கே உரித்தான வர்த்தகக் கோட்பாட்டின் மூலம் Blue Ocean ஆண்டாண்டு காலமாக வாடிக்கையாளர் மத்தியில் ஆணித்தரமான நன்மதிப்பை நிலைநாட்டியுள்ளதுடன் அவர்களது முதலீடுகளுக்கு மிகச் சிறந்த பலாபலன்களையும் பெற்றுத்தருகின்றது.

இந்தியா, சிங்கப்பூர், பாகிஸ்தான் ஆகிய ஆசிய நாடுகளில் காணி வர்த்தகத்தில் (ரியல் எஸ்டேட்) ஏற்பட்ட தொய்வு காரணமாக பெரிய பின்னடைவுகள் ஏற்பட்டு முதலீடுகளுக்கான வருமானம் ஸ்தம்பிதம் அடைந்து அந்தந்த நாடுகள் வட்டி விகிதங்களை அதிகரித்த சந்தர்ப்பத்திலும் கூட Blue Ocean சற்றும் தளராமல் தனது வெற்றிகரமான பயணத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளது.

ஒன்றுக்கு மேற்பட்ட வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களும், கணிசமான அளவு செல்வத்தைக் கொண்டவர்களும் மட்டுமே இன்று ரியல் எஸ்டேட் வர்த்தகத்தில் ஈடுபட முடியும். இந்த வருடத்திலும் அடுத்த வருடத்திலும் ரியல் எஸ்டேட் வர்த்தகத்தில் எதிர்பார்க்கப்படும் தொய்வுநிலை காரணமாகப் பலர் அந்த வர்த்தகத்தில் முதலீடு செய்யத் தயக்கம் காட்டுகிறார்கள். எனவே, ஆசியா, ஐரோப்பா மற்றும் மேற்குலக நாடுகளில் உள்ள முதலீட்டாளர்களில் பெரும்பாலானோர் ரியல் எஸ்டேட் வர்த்தகத்தில் தங்கள் முதலீடுகளுக்கு மேலும் சாதகமான பலாபலன்களுடன் சலுகைகள் பெற்றுத்தரக்கூடிய வெளிநாட்டு முதலீடுகளில் அக்கறைகாட்டி வருகிறார்கள்.

அவ்வாறான முதலீட்டாளர்களுக்கு தென்னாசியப் பிராந்தியத்தில் துரிதமாக அபிவிருத்தி அடைந்துவரும் இலங்கை மிகச்சிறந்ததொரு முதலீட்டு வலயமாகத் திகழ்கிறது. உண்மையில் இன்று சீனாவுக்கு அடுத்தபடியாக ஆசியாவில் துரித பொருளாதார அபிவிருத்தியைக் காட்டும் நாடாக இலங்கையே விளங்குகின்றது.

2012ஆம் ஆண்டு இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி விகிதம் 8% மாக இருந்துள்ளதுடன் அது மென்மேலும் துரிதகதியில் வளர்ச்சியடைந்து செல்கிறது. 2016ஆம் ஆண்டில் இலங்கையில் தனிநபர் முதலீட்டு வருமானம் (Per Capita Income- PCI) 4ஆயிரம் அமெரிக்க டொலர்களை எட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளும் முதலீட்டாளர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமான வரிச் சலுகைகள் கிடைக்கின்றன. இவற்றுள் அரச உத்தரவாதங்கள், வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டில் 100 % வரி விலக்கு, வரி விடுமுறைகள், சலுகைகளுடனான வரி விகிதங்கள், தீர்வை விலக்குகள் என்பவற்றுடன் முதலீடுகளுக்கான 100% இலாபம் இலங்கையில் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் சிறப்பம்சங்களாகும்.

2007இற்கும் 2011இற்கும் இடைப்பட்ட நான்கு ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் விற்கப்பட்ட 1,100 தொடர்மாடிக் கட்டடங்களில் 70 சதவிகிதமானவை முதலீட்டுத் தேவைகளுக்காகவே வாங்கப்பட்டுள்ளன. இலங்கையில் மத்தியதர மற்றும் சொகுசு இல்லங்களைக் கொள்வனவு செய்யும் வெளிநாட்டவரின் தொகை அதிகரித்துள்ளது. சுமார் பத்து இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் இத்தகைய இல்லங்களின் உரிமையாளர்களாக உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

நவம்பர் 2013 இல் இலங்கை பொதுநலவாயநாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டை (CHOGM) இங்கு நடத்தியது. உலகெங்குமுள்ள பொதுநலவாய நாடுகளில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வாழ்கிறார்கள். இந்த மாநாடு ஆசியாவிலேயே முதன்முறையாக இலங்கையில் நடத்தப்பட்டுள்ளது. இந்த மாநாட்டின் மூலம் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் ஏராளமான முதலீட்டு வாய்ப்புகள் உருவாகும் என்பதில் ஆசியாவில் மட்டுமன்றி உலகெங்கும் உள்ள முதலீட்டாளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

பொதுநலவாய மாநாட்டுக்கு முன்பதாகவே இலங்கையில் ரியல் எஸ்டேட் வர்த்தகம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. கொழும்பிலும் அதன் அயல் பிரதேசங்களிலும் காணி, சொத்து விலைகள் உச்சக் கட்டத்துக்கு அதிகரித்துவிட்டன. மாநாட்டின் மூலம் உலகளாவிய ரீதியில் ஏராளமான முதலீட்டாளர்கள் கவரப்பட்டுள்ளார்கள். இலங்கையில் ஆதனங்களின் பெறுமதி எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என்பதற்குச் சான்றாக Blue Ocean குழுமத்தின் புள்ளி விபரங்களைக் காட்ட முடியும். மூன்று வருடங்களான குறுகிய காலப்பகுதியில் மவுண்ட் லெவினியா, கல்லூரி ஒழுங்கையிலுள்ள (கொலேஜ் எவினியூ) குடியிருப்புத்திட்டங்கள் 14 சதவீதத்துக்கும் மேலாகவும் மவுண்ட் லெவினியா சமுத்ரா மாவத்தையிலுள்ள அடுக்கு மாடிக்குடியிருப்புகள் 12சதவிகிதத்துக்கும் மேலான பெறுமான ஏற்றத்தையும் பெற்றுள்ளமை இதற்கு ஒரு உதாரணமாகும். அவ்வாறே இக்குழுமத்தின் மவுண்ட் லெவினியா டெம்பப்ளர்ஸ் வீதி குடியிருப்புகள் 10சதவிகிதத்தாலும் சிறிபாலவீதிக் குடியிருப்புகள்



**S.Thumilan**
**Group Chairman**
ACA, ACCA, ACMA (UK), CGMA, CPA (AUS), MCSI (UK), FMAAT (SL), ACS

13சதவிகிதத்தாலும், கொழும்பு-04 இல் ரிட்ரிட் வீதியிலுள்ள குடியிருப்புகள்" பெறுமான ஏற்றம் பெற்றுள்ளன.

இந்தக்குடியிருப்புகளின் உரிமையாளர்கள் அனைவரும் உள்நாட்டு வெளிநாட்டுப் பிரஜைகள். அவர்கள் தங்களது முதலீடுகளுக்கு ஒருசிலவருடங்களில் பெறுமான ஏற்றத்தை எதிர்பார்ப்பவர்கள். உறுதியும் தமுரம் கொண்ட தனிவீடுகள், மாடிக்குடியிருப்புகள், குறைந்த விலை இல்லங்கள் ஆகியவற்றை வாடிக்கையாளர் தாக்குப்பிடிக்கக்கூடிய விலையில் தருவதில் Blue Ocean நிறுவனம் விசேடத்துவம் பெற்றுள்ளது. இதற்குக் காரணம் ஏனைய கட்டட நிர்மாண நிறுவனங்களைப்போல தமது தேவைகளுக்கு மூன்றாம் தரப்பினரின் அறிவுரைகளோ, ஆலோசனைகளோ, மூலப்பொருள்களோ Blue Ocean னுக்கு தேவைப்படுவதில்லை. ஏனெனில் தேவையான எல்லா மூலப்பொருள்களும், கட்டட நிர்மாணம் பற்றி சிறந்த அறிவும் பரந்த அனுபவமும் Blue Ocean னிடம் அபரிமிதமாக உள்ளது.

கட்டட நிர்மாணத் துறையில் அசைக்க முடியாத ஜாம்பவானாகத் திகழும் Blue Ocean அதே துறையில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பிரசித்தி பெற்றுள்ள மற்றொரு கட்டட நிர்மாணத்துறை ஜாம்பவானான Link Engineering (Pvt) Ltd நிறுவனத்தை அண்மையில் தனது குழுமத்துக்குள் உள்வாங்கிக் கொண்டதன் மூலம் தனது ஸ்திரத்தன்மையை மேலும் உறுதியாக்கிக் கொண்டுள்ளது. Link Engineering கட்டட நிர்மாணத்துறையில் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. உதாரணமாக கந்தலம ஹோட்டல், ரொட்டுண்டடவர், சாவகச்சேரியின் புதிய நீதிமன்றத் தொகுதி, சீத்தாவக்கையில் "மஞ்சி" பிஸ்கட் தொழிற்சாலை, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடம், நாவல திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

Blue Ocean ரெஸிடென்ஸி நிறுவனமும் Link Engineering நிறுவனமும் கட்டட நிர்மாணத்துறையில் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் தமக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று ஏனைய கட்டட நிர்மாண நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக விளங்குகின்றன.

வாடிக்கையாளர்களுடனும், பொதுமக்களுடனும் இந்த நிறுவனங்கள் கொண்டுள்ள அந்நியோன்ய உறவும் அவர்கள் மீது காட்டும் பிரத்தியேக அக்கறையும், கவனிப்பும் இந்த இரு நிறுவனங்களும் புகழின் உச்சியில் இருப்பதற்கான காரணங்களாகும். இந்த இரு நிறுவனங்களும் கட்டட நிர்மாணத்துறையில் சிறந்த புலமையையும் பரந்த அனுபவத்தையும் கொண்ட கட்டடக் கலைஞர்கள், வடிவமைப்பாளர்கள், நிறைவேற்று அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட குழுவை தமது சேவையில் ஈடுபடுத்தியுள்ளன. அத்துடன் இலங்கையிலுள்ள ஏனைய கட்டட நிர்மாண நிறுவனங்களிடம் இல்லாத நவீன இயந்திரங்களும், உபகரணங்களும் இந்த நிறுவனங்களிடம் இருப்பது ஒரு மேலதிக வரப்பிரசாதமாகும்.

கட்டட நிர்மாணத்துறையில் பரந்த அனுபவத்தையும் அறிவையும் பெற்றுள்ளதால் இந்த நிறுவனங்களின் சேவையை நாடி வருபவர்கள் ஏமாந்து போவது கிடையாது. இதுவரை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அவர்கள் மேற்கொண்ட கட்டட நிர்மாணங்கள் அவர்களின் திறமைக்கும் அனுபவத்துக்கும் சான்றாக விளங்குகின்றன.

பொதுநலவாய மாநாட்டுக்கு முன்பதாகவே இலங்கையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித்திட்டங்களில் பெரிய உந்துதல் ஏற்பட்டிருக்கிறது. முதலீட்டாளர்களுடனான சந்திப்புகள் தொடர்பாடல்கள் ஆகியவை சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டதால் மாநாட்டுக்கு முன்பதாகவே முதலீட்டாளர்கள் தயாராகிவிட்டார்கள். மாநாட்டைத் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மூலம் இலங்கை முன்னெப்போதும் கண்டிராத அளவுக்கு வீடுகள், மாடிக் குடியிருப்புகள், வர்த்தகக் கட்டடங்கள் ஆகியவற்றின் மதிப்பும் பெறுமானம் உயர்வடைவதும் நிச்சயம்.

"அபிவிருத்தி உள்ளிட்ட சமத்துவ வளர்ச்சி" என்பதே பொதுநலவாய மாநாட்டின் கருப்பொருள் ஆகும். இதற்கமைய அடுத்த தசாப்தத்துக்குள் இலங்கை ஆசியப் பிராந்தியத்தின் உச்சபட்ச அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒன்றாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. முதலீட்டாளர்கள் இலங்கையில் தங்களது ஆதனங்களுக்கான முதலீடுகளைச் செய்து கொள்வதற்கு இதுவே அற்புத தருணம். தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, கல்வி, சுகாதாரநலன், நிர்மாணம் ஆகிய பல்வேறு துறைகளில் அவர்களது முதலீடுகளைச் செய்துகொள்வதற்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் உள்ளன.

Blue Ocean குழுமத்தின் தலைவர் எஸ்.துமிலன் தனது [illegible] மூலமும் இக்குழுமத்தைப் பல்வேறு துறைகளில் பிரகாசிக்க வைத்துள்ளார். அத்துறைகளில் கல்வி, பொறியியலும் நிர்மாணமும், ரியல் எஸ்டேட், கூட்டுறவு ஆலோசனை, பொது வர்த்தகம், மின்னியல் மற்றும் பொறியியல் ஆலோசனை ஆகியவை உள்ளடங்குகின்றன.

"நாங்கள் பெரிதும் மதிக்கப்பட்டதும், கொள்கை ரீதியில் உறுதியானதாகவும், சமூகப் பொறுப்பு கொண்ட நிறுவனமாக எம்மை நிலைநிறுத்திக் கொண்டமையே Blue Ocean நிறுவனத்தின் பல்வேறு துறைகளின் அபார வளர்ச்சிக்கு அச்சாணியாக இருந்தது, என்கிறார் துமிலன்.

அபிவிருத்தியின் உருவாக்கம், புதிய சிந்தனைகளின் பிரயோகம், ஆகியவற்றின் மூலம் சிருஷ்டிக்கப்பட்டதும், போட்டியிட முடியாததுமான சூழ்நிலையில் இலாபமீட்டுவதே எமது வர்த்தகக் கோட்பாடாகும். இந்த கோட்பாட்டின் அடிப்படையில் ஆசிய பசுபிக், ஐரோப்பிய, மத்திய கிழக்கு மற்றும் கிழக்காசியப் பிராந்தியங்களின் பிரதான சந்தைகளில் Blue Ocean தனது காலடிகளை வெற்றிகரமாகப் பதித்துள்ளது. கட்டட நிர்மாணம், அபிவிருத்தி மற்றும் பொறியியல் துறைகளில் நிபுணத்துவம் கொண்டதும் இலங்கை முதலீட்டுச் சபையின் பூரண அங்கீகாரத்தைப் பெற்றதுமான Blue Ocean Residencies எனும் பிரதான வர்த்தக இலச்சினையின் கீழ் இக்குழுமம் பல்வேறு துறைகளில் வெற்றிகரமாகப் பிரகாசித்து வருகின்றது. Blue Ocean Residencies கட்டட நிர்மாணம், கட்டட மாதிரி வரைபாக்கம், காணிச் சீரமைப்பு, வசதிகள் முகாமைத்துவம் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட கட்டட நிர்மாணத்தின் பல்வேறு பரிணாமங்களில் பெற்றுள்ள விசேட நிபுணத்துவத்துடன் செயலாற்றுகின்றது. தனிப்பட்ட வீடுகள் உட்பட எல்லாவிதமான கட்டடங்களின் நிர்மாணத்துக்கும் தேவையான சகல ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் Blue Ocean வழங்குகிறது. குழுமத்தின் தலைவரான எஸ். துமிலன் (ACA, ACCA, ACMA, CPA, (AUS), FMAAT (SL) ACA) கணக்கியல், முகாமைத்துவம், கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்த புலமையையும் நிபுணத்துவத்தையும் கொண்டவர்.

சாதாரண பிரஜையின் கற்பனைக்கும் அப்பாற்பட்ட அதிக விலை கொண்ட சொகுசு இல்லங்களுக்குப் பதிலாக குறைந்த விலையில் அதே சொகுசு வசதிகளை Blue Ocean செய்து கொடுக்கிறது. கட்டடத்துறையில் பரந்த அனுபவம் கொண்ட பட்டயக் கலைஞர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உள்ளக வடிவமைப்பாளர்கள் மற்றும் இத்துறையில் சிறந்து விளங்கும் ஏனைய வல்லுநர்கள் போன்றோரைக் கொண்ட குழு வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கிடத் தயாராக இருக்கிறது.

அதிநவீன சொகுசு சாதனங்களை உள்ளடக்கிய விஸ்தாரமான படுக்கையறைகள், களியாட்டங்களுக்கான சிறப்பு வசதிகள் ஆகியவை ஆனந்தமான வாழ்க்கைக்கு உத்தரவாதமளிக்கின்றன. Blue Ocean சகல கட்டட நிர்மாணங்களும் கல்கிஸ்ஸையின் இதயப் பகுதியில் கல்லூரி ஒழுங்கை (கொலேஜ் எவனியூ), டெம்ப்ளர்ஸ் வீதி மற்றும் சமுத்ரா வீதி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதால் குடியிருப்பு இல்லங்களாகவும் வியாபார ஸ்தாபனங்களாகவும் அவற்றைப் பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கின்றது. அடுத்த வருடம் பூர்த்தியாகவுள்ள இந்தக் கட்டடங்களில் பல இல்லங்கள் ஏற்கனவே உள்நாட்டு, வெளிநாட்டு, வாடிக்கையாளர்களுக்கு உரித்தாகியுள்ளன.

"இலங்கையில் ஆதனங்களின் பெறுமதி துரிதகதியில் அதிகரித்து வருகின்றது. இந்த அபார வளர்ச்சிக்கு அரசாங்கம் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களே காரணம். அரசாங்கத்தின் இந்தக் கொள்கையால் பொருளாதார ஸ்திரத் தன்மை அபிவிருத்தியடைவதுடன் ஆதனங்களின் பெறுமதியும் வேகமாக அதிகரித்து வருகின்றது. வெளிநாட்டு மாணவர்கள், தொழில்சார் குத்தகையாளர்கள், பலம் வாய்ந்த வியாபார ஜாம்பவான்கள் உட்பட ஏராளமான வெளிநாட்டுப் பிரஜைகள் இங்கு நீண்டகாலம் தங்குவதனால் ஆதனங்களின் பெறுமதி அதிகரிப்பதுடன் உள்நாட்டவர்கள் பெறும் வாடகை மற்றும் குத்தகை வருமானங்கள் அதிகரித்துள்ளன.

Blue Ocean குழுமத்தின் முகாமைத்துவக் குழுவில் உள்ளவர்கள், அவர்கள் சார்ந்துள்ள துறைகளில் சிறந்த அனுபவம் நிபுணத்துவம் பெற்றவர்கள் "பொறுப்பேற்ற பணியை நேர்த்தியாகவும், பொறுப்புடனும், தரமாகவும் ஒப்புக்கொண்ட கால எல்லைக்குள் முடிப்பதில் எமது குழு எப்போதும் தவறுவதில்லை. தனது பொறுப்பான செயற்பாட்டின் மூலம் Blue Ocean Residencies உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் மக்கள் மத்தியில் நம்பிக்கையை நிலைநாட்டியுள்ளது. தனது கட்டட நிர்மாணப் பணியில் பாரம்பரிய முறைகளை மட்டுமன்றி வாடிக்கையாளர்களின் ஆதனப் பெறுமதியை சமகாலத்துக்கு ஏற்றவாறு நவீன பாணியிலும் கையாள்கிறது.

கடந்த சில மாதங்களில் நிறுவனத்தின் சொத்துகள் தனியார் மற்றும் பொதுத் திட்டங்கள் மூலம் இரண்டு மில்லியன் ரூபாவுக்கும் மேலான நிலையை எட்டியுள்ளன. அரச, தனியார் திட்டங்கள் இரண்டையும் உள்ளடக்கிச் செல்வதால் நிறுவனத்தின் நிதிப் புழக்கம் இலாபம் தொய்வடையாமல் திருப்திகரமாக உள்ளன.

Link Engineering நிறுவனத்தின் பலம் வாய்ந்த கிளை நிறுவனமான Contessa உயர்தரம் கொண்ட பெண்ட்ரி அலுமாரிகள், படுக்கையறைத் தளபாடங்கள், காட்சி அலுமாரிகள், கதவுகள், யன்னல்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் 25 வருடகால அனுபவத்தைக் கொண்டுள்ளது. அத்துடன் உள்ளக வடிவமைப்பு, அலுமினிய வேலைகள், மீள் திருத்துகை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் கொண்டுள்ளது.

எங்களது வாடிக்கையாளர் அடித்தளம் நாள்தோறும் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் விஸ்தரித்துச் செல்கின்றது, எமது நிறுவனம் உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் மிகவும் மதிக்கப்படும், யதார்த்தபூர்வமான, உறுதிமிக்க, சமூக ரீதியில் பொறுப்புணர்வுமிக்க ஒன்றாகத் திகழ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இந்த நிலைப்பாடு மேலும் தொடரும் என்பதும் எங்களது வாடிக்கையாளர்களும் பங்காளிகளும் தொடர்ந்தும் எமக்கு ஆதரவளிப்பார்கள் என நம்புகிறோம்.

**Website: www.link.lk / www.blueocean.lk**
**Hotline: 0777 546 546**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்

**சஜீஸ் கொமினிக்கேஷன் அன்**
**வெளிநாட்டு பார்சல் சேவை**




அனைத்து நாடுகளுக்குமான துரிதகதி பார்சல் சேவை

இல. 22, பெருந்து நிலையம், வவுனியா.
T.P: 024 2222166
024 2222804
E-mail: ssa@gmail.com
(43585)(10.6.3)

## ஒற்றுமையும் ஐக்கியமும் மலரட்டும்

இன்றைய தினத்தில் தைப்பொங்கலைக் கொண்டாடும் அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும் எனது தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். தமிழர்களின் வாழ்வியலோடு ஒன்றித்துவிட்ட தைப்பொங்கல் திருநாள் பல்வேறு நம்பிக்கைகளை சுமந்து நிற்கின்றது.

எமது மக்கள் சமூக, பொருளாதார அரசியல் ரீதியாக பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில்; அத்தகைய சவால்களை வெற்றிகொண்டு சுபீட்சமான வாழ்வை நோக்கிப் அடியெடுத்து வைக்கின்ற ஒரு சிறப்பான நாளாக இத்திருநாள் எல்லோருக்கும் அமையவேண்டும். கஷ்டங்கள், துன்பங்கள், நோய்கள், வறுமை போன்ற உலகாயுத நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ள ஒவ்வொரு மனிதனும், குடும்பமும், சமூகமும் அத்தகைய நெருக்கடிகளில் இருந்து வெளிவந்து சிறப்பான வாழ்வை அடைந்துகொள்ள நாம் இத்திருநாளில் உறுதிகொள்ளவேண்டும். ஒற்றுமையும், ஐக்கியமும் எமது மக்களின் பலமாக இருக்கின்றன. மத ரீதியான வேறுபாடுகள், சமூக ரீதியான வேறுபாடுகள், இனரீதியான வேறுபாடுகளுக்கும் அப்பால் சென்று மனிதம் என்ற ஒற்றைப்புள்ளியில் நாம் ஐக்கியப்படவேண்டும். இத்திருநாள் எம் எல்லோருக்கும் சிறப்பான நன்மைகளைப் பெற்றுத்தரும் நாளாக அமைய அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*அ. அஸ்மின்*
*வடக்கு மாகாணசபை உறுப்பினர்.*

**EASY SOLUTIONS**
**தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்**

கணினி விற்பனை, திருத்தம்
லப்டொப் விற்பனை, திருத்தம்
இணைய தள வழவமைப்பு
இணைய விளம்பரம்
டொமைன், சேவர் இடவசதி
மென்பொருள் வழவமைப்பு
நெற்வேர்க்கிங்
அன்ரிவைரஸ் தீர்வுகள்

HAPPY PONGAL



MMV Road, Nelliady
TP : 021 226 1120 , 0774386599

அனைவருக்கும் இனிய தைபொங்கல் நல் வாழ்த்துக்கள்

# டொச் மொழியை சிறந்த முறையில் கற்பிக்கும் German Language Academy

**வட மாகாணத்தில் யாழ் மண்ணிலும் பல வருடங்களாக வேரூன்றி நிற்கின்றது German Language Academy**







இந்த நிறுவனத்தில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்து ஜேர்மன், சுவிஸ், ஒஸ்றியா போன்ற நாடுகளுக்கு சென்றுள்ளார்கள்.

இந்த நிறுவனத்தில் ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தப்படும் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படுகின்றது.

German Language Academy வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் இலகுவான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

**இல. 23, பலாலி வீதியில் Mr. S.Koneswaran அவர்களால் German Language Academy யில் German மொழி மட்டுமே கற்பிக்கப்படுகின்றது.**



**ஜேர்மன், டொச் மொழிகள் புதிய பிரிவுகள் தற்போது சாவகச்சேரியில் (17.01.2014) ஆரம்பமாகவுள்ளது**

- எமது நிறுவனத்தின் ஊடாக பல நூறு மாணவர்கள் சித்தி அடைந்ததை இங்கு இணைக்கப்பட்ட புகைப் படங்களினூடாக உறுதிப்படுத்துகின்றோம்.
- இவர்கள் எமது நிறுவனத்தில் ஜேர்மன் தூதரகம் நடத்தும் A1 பரீட்சையிலே ஒரே தடவையிலேயே சித்தி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
- இப்புகைப்படங்களில் உள்ளவர்கள் உங்கள் உறவினர்களாக அல்லது நண்பர்களாக இருக்கலாம். எங்கள் நிறுவனத்தைப் பற்றி நீங்கள் அவர்களிடமே கேட்டு அறிந்து கொள்ளலாம்.
- எமது நிறுவனமானது எமது மக்களுக்குக்காக நேர்மையுடனும் உண்மையுடனும் சிறந்த சேவை ஆற்றி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**German Language Academy**
இல. 23, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
077 9707322

**Yal Tech**
Kandy Road,
Chavakachcheri

(C/30413)(10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் பண்டிகை
## ஓர் அறிவியல் நோக்கு

திருமதி அ.நிரூபா
உரும்பிராய்.

தமிழர் வாழ்க்கை பல்வேறு பண்டிகைகளுடன் பின்னிப் பிணைந்ததாகும். வருடா வருடம் நாம் பல்வேறு பண்டிகைகளையும் கொண்டாடுவதுண்டு. இவை நமது கலாசாரத்தைப் பிரதிபலிப்பது ஒரு பக்கம் என்றாலும், இதில் பொதிந்து கிடக்கும் சமூகவியல் மற்றும் அறிவியல் உண்மைகள் இன்னொரு பக்கம் என்று கூறலாம். எம்மில் பலருக்கு அதன் முற்பக்கம் மட்டுமே தெரியும் ஆனால் அதன் அறிவியல் மற்றும் சமூகவியல் பக்கம் தெரிவதில்லை.



### சூழல் சுத்தம்
பண்டிகைக் காலத்தில் வீட்டுச் சுத்தம், சுவர் சுத்தம், உபகரணச் சுத்தம், அயற்சூழல் சுத்தம் என்பன பேணப்படுகிறன. இதனால் பண்டிகைகள் வரும் காலத்தில் எம்மையும், சூழலையும் முற்றாகச் சுத்தப்படுத்தி, பூரணமான தூய்மை நிலையொன்று ஏற்படுத்தப்படுகிறது. இதன் பயனாக பல்வேறு நோய்கள் ஏற்படாமலும் நமது வாழ்க்கையை சிறப்பாக நடத்துவதற்கும் ஏதுவாகிறது.

### மகிழ்ச்சிகரமான நிலை
தைத் திருநாளை மனமகிழ்வுடன் கொண்டாடுவதனால் நம்மைச் சூழவுள்ளவர்களின் மனங்களும் மகிழ்ச்சியடைகிறது. எத்தனை துன்பங்கள் இருந்தாலும் வீட்டில் இந்தப் பொங்கல் பண்டிகை காலத்தில் குழந்தைகளின் மகிழ்ச்சியைக் கண்டு மனம் ஆறுதல் அடையுமல்லவா! இவ்வாறு ஏற்படும் மன மகிழ்[illegible] நிலையானது உடலில் பல் வேறு மாறுதல்களுக்கும் வகை செய்யும். மன மகிழ்வால் மூளையில் சுரக்கும் ஒரு வித ஓமோன் நம் உடலை ஆரோக்கிய மாக வைத்துக் கொள்ள உதவுகிறது. இதயநோய் உட்பட பல்வேறு நோய்கள் எம்மை அணுகாமல் இருப்பதற்கும் மகிழ்ச்சி களம் அமைத்துக் கொடுக்கிறது.

### மண்ணுக்கு முக்கியத்துவம்
பொன்னுக்கும், பொருளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நாம் மண்ணுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாளே பொங்கல் திருநாளாகும். தினசரி வாழ்க்கையில் மட்பாண்டங்களைப் பயன்படுத்தாதவர்கள் பொங்கல் காலத்தில் மண் பானையைக் பயன்படுத்துவதன் மூலம் மண்ணுக்கு மரியாதை கொடுக்கின்றனர். இதன் மூலம் மட்பாண்டத் தொழிலில் ஈடுபடுபவர் வாழ்க்கைக்கு ஒளியூட்டவும் முடியும்.

பொங்கல் தினத்திலே சூரிய மூர்த்தியை தந்தையாகவும், நில மகளைத் தாயாகவும் கொண்டாடி மகிழ்கின்றனர். இதன்போது நிலமகளைக் கோலமிட்டு அழகுபடுத்துவதிலும் ஈடுபடுகின்றனர்.

### பொங்கல் படி மரபு
பண்டைய கிராமிய சமூக அமைப்பில் ஒருவரை ஒருவர் சார்ந்து மகிழ்ச்சிகரமான வாழ்க்கை அமைப்பு இருந்தது. இதன்போது ஒரு குடியானவனின் கீழ் அவனுக்கு ஒத்தாசையாக பல்வேறு தொழில் செய்பவர்கள் இருந்தனர். இத் தொழிலாளர் தமது வீடுகளிலும் தோட்டங்களிலும் உற்பத்தி செய்த உற்பத்திப் பொருள்களை மரியாதையுடன் குடியானவனுக்கு வழங்க, குடியானவன் அரிசி, வெல்லம், மஞ்சள், கரும்பு போன்றவற்றை தாம்பாளத்தில் வைத்து வழங்குவான்.

இந்தப் பரிமாற்றம் குடியானவன் - தொழிலாளி இடையேயான நல்லுறவை வளர்க்கும் செயற்பாடாக அமைந்திருந்தது.

### பொலி நீர் தெளிப்பு:
பொங்கல் பண்டிகை உழவர் திருநாளாகக் கொண்டாடப் படுகிறது. பண்டைக் காலத்தில் உழவர் இப் பண்டிகைத் தினத்தன்று பொங்கல் அரிசி களைந்த நீரை உயர்வாகப் பேணுவர். இந்த நீரை தமது வயல் நிலங்களில் தெளிப்பர். இதன் மூலம் அடுத்த போகத்தில் சிறப்பான விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு.

### தை பிறந்தால் வழி பிறக்கும்:-
தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கு பல்வேறு காரணங்கள் கூறினாலும் இதில் பின்வரும் உண்மையும் பொதிந்து கிடக்கிறது. பண்டைக் காலத்தில் கிராமத் தில் பிரதான வீதியானது குடியிருப்புக்களையும், வயல் நிலங்களையும் ஊடறுத்துச்செல்லும், தை மாதத்தில் அறு வடை ஆரம்பித்ததும் வயல் வெளியூடாக பிரதான வீதிக் கான குறுக்கு வழி பிறக்கும் இவ்வாறான குறுக்குவழி பிறந்த காலத்தையே தை பிறந்தால் வழி பிறக்கும் என்று கூறுவர்.

### இளைய தலைமுறைக்குக் கல்வி
இன்றைய இளம் தலைமுறை நமது பண்டைய மரபுகளாகக் கைகொள்ளும் செயற்பாடுகளை மறந்து வருகின்றனர். இக் காலத்தில் இளம் தலைமுறையினருக்கு தோரணம் செய்ய, கோலம் போட ஊக்குவிக்கலாம். நிறை குடம் வைக்கும் முறையைப் பழக்கலாம். இதன் மூலம் நமது கலாசாரம் பேணுவதற்கு களமாக்கிக் கொள்ள முடியும்.

### இயற்கையைப் போற்றி வணங்குவோம்
இயற்கையின் சீற்றங்கள் ஏற்படாமலிருக்க வரும் பொங்கல் பண்டிகையில், சூரியனோடு பஞ்ச பூதங்களுக்கும் சேர்த்து பொங்கலிட்டு வணங்குவோம். மழை பெய்ய வேண்டிய காலத்தில் மழைபெய்து நாடுதழைக்கவும் வேண்டுவோம். புயலாக மாறாமல் தென்றலாகத் தவழ்ந்து, பருவக்காற்றை வீசி மேகத்தை அள்ளி வந்து தேவையான பருவ மழையைக் கொடுக்க வாயு பகவானை வேண்டுவோம். பொறுமையின் வடிவமாம், அன்னை பூமியின் வளம் காத்து அவள் நடுங்காமல் இருக்கச் செய்வோம். அக்கினியை ஆக்கத்துக்கும், தீபத்துக் கும் அழைப்போம். சகல கிரகங்களையும் தன்னுள் அடக்கி வானம், எந்த பயமுமின்றி நாம் வாழ மேலிருந்து நம்மைக்காக்க வேண்டுவோம். இவ்வாறு இயற்கைச் சூழலை மனங்கொண்டு பொங்கல் பொங்கி பல்வேறு தெய்வங்களினதும் ஆசியைப் பெறுவோமாக.

சபரிமலை ஐயப்ப சுவாமி
விஷேட தரிசன யாத்திரை சேவை

நாட்கள் 10 யாத்திரீகர்கள் 10 பேர் ஆரம்பம் 10.03.2014 நிறைவு : 20.03.2014

தரிசிக்கும் ஆலயங்கள் : மேல்மருவத்தூர், 9நவக்கிரக ஆலயங்கள், ரா[illegible] கேது, செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சூரியன், சந்திரன், சனிபகவான், தஞ்சைப்பெருங்கோவில், திருச்சி, ஐயப்பசுவாமி, ஸ்ரீரெங்கம், திருவானைக்காவல், சமயபுரம், வெக்காளி அம்மன், இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி, சுந்தரேஸ்வரர், திருப்பரம் குன்றம், பழமுதிர் சோலை, அழகர்கோவில், திருச்செந்தூர், கன்னியா குமரி, பகவதி அம்மன், கன்னியாகுமரி முருகன், விவேகானந்தர் மண்டபம், திருவள்ளுவர் மண்டபம், சுசீந்திரம் ஆஞ்சநேயர், குற்றாலம், குற்றாலீஸ்வரர், **ஆரியங்காவு, பந்தளம், பம்பாநதிநீராடல், ஐயப்பசுவாமிதரிசனம், சோட்டாணிக்கரை, குருவாயூர்,** பழனி, கபாலீஸ்வரர், அஸ்டலெட்சுமி, ஆறுபடை முருகன், பார்த்தசாரதி நேரமிருந்தால் மாங்காடு, திருவேற்காடு, வடபழனி, 40இற்கு குறையாத ஆலயங்களை தரிசிக்கலாம். மேலும் விரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்க.

தென்னிந்திய யாத்திரை

இது தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி ஆகிய மூன்று மாநிலங்களுக்கூடான யாத்திரை.
நாள்கள் 12 யாத்திரீகர்கள் 10 பேர் ஆரம்பம் 07.02.2014 நிறைவு : 19.02.2014

தரிசிக்கும் ஆலயங்கள் : காஞ்சி காமாட்சி, ஏகாம்பரேஸ்வரர், ஐயப்பசுவாமி, வரதராஜப்பெருமாள், மேல்மருவத்தூர், பிரம்மாகோவில், வேளாங்கண்ணி, திருப்பதி, திருத்தணி, அலமேலுமங்கா, திருச்செந்தூர், அழகர்கோவில், மதுரைமீனாட்சி, சுந்தரேஸ்வரர், திருப்பரம்குன்றம், பழனி, மலைக்கோட்டைவிநாயகர், சென்னை சீரடிபாபா, மாங்காடுமாரிஅம்மன், திருவேற்காடுகருமாரிஅம்மன், இராமேஸ்வரம், நவபாஷாணம், தஞ்சாவூர், கூடலளகர்பெருமாள், மதனகோபாலசுவாமி, கறுப்புசுவாமி, பழமுதிர்சோலை, சந்திரன்திங்களூர், சுவாமிமலை, ஸ்ரீரெங்கம், திருவானைக்காவல், வடபழனி, கபாலீஸ்வரர், பார்த்தசாரதி, காளகஸ்திரி, வேலூர்பொற்கோவில், திருவெண்ணாமலை, கிரிவலம், ரமணமகாரிஷிஆச்சிரமம், சிதம்பரம், வைத்தீஸ்வரன்கோவில், திருவெண்காடுபுதன், கீழ்பெரும்பள்ளம்கேது, திருக்கடையூர்அபிராமி, திருநள்ளாறுசனிபகவான், அனந்தமங்களம் ஆஞ்சநேயர், கோபாலகிருஷ்ணர், சூரியன்கஞ்சனூர், சுக்கிரன் ஆலங்குடிவியாழன், திருநாகேஸ்வரம்ராகு, உப்பிலியப்பன் மேற்குறிப்பிட்ட ஆலயங்கள் அனைத்தையும் தவறாது தரிசிக்கலாம். அத்துடன் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் தேவாரம் பாடிய திருத்தலங்களையும் தரிசிக்கலாம். தரிசனம் முடித்துவரும் நேரத்தைப் பொறுத்து மிகுதி ஆலயங்களையும் தரிசிக்கலாம். (40 இற்கு குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம்)

கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்
No. 59,C 3/3, Sea Street, Colombo - 11.
Tel : 0777 680102, 0724 - 222989 Web : www.sridevipilgrims.com

2014 இற்கான புதிய அனுமதிகள்
தைப்பூசம் அன்று வித்தியாரம்பம்

BBC 11வது வருடத்தில்

ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

| Play Group | Montessori | Pre School |
| --- | --- | --- |
| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |

10 வருடங்களில் 7500 ற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி பயின்றுள்ளார்கள். 90 % மாணவர்கள் புலமைப்பரிட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

கற்பித்தல் முறை:
- ★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி, English Concert, முத்தமிழ் விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம்: 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| | |
| --- | --- |
| யாழ்ப்பாணம்: 62S, K.K.S வீதி, யாழ்ப்பாணம் (மனோகரா திரையரங்கிற்கு அருகாமை) | நீர்வேலி: 1வது மைல் கல் இராச வீதி |
| கோப்பாய்: பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி | சாவகச்சேரி: சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை |
| மானிப்பாய் 1: 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி. | அச்சுவேலி: அச்சு நகர், சங்கானை வீதி, அச்சுவேலி |
| மானிப்பாய் 2: சங்கரப்பிள்ளை வீதி. (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | சங்கானை: பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி) |
| சுன்னாகம்: Dr. சபாரத்தினம் வீதி சுன்னாகம் | வடமராட்சி: பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. |

British Business College
BRITISH BUSINESS COLLEGE
64, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:077 362 7055, 021 222 4060, 021 222 5796, 077 6646357
British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு நிலையம்.
Registered as an Education & Training Company with the Registrar of Companies- Sri Lanka. Reg. No: P 9718

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர் அகதி வாழ்வில் பொங்கலா?



பொங்கலா? தமிழருக்கா? பொங்கவா முடியும் எங்களால்?
இவ்விடம் தொலைத்த மக்கள் ஏதிலியான வாழ்வு
வாழ்வையே தொலைத்துவிட்டு வகையற்று வாழும் மக்கள்
பொங்கவா முடியும் இந்த இடம்பெயர் அகதிவாழ்வில்

துஞ்ச இடமில்லைத் தூங்கி வெகு நாளாச்சு
கஞ்சிக்கும் வழியில்லை கட்டுதற்குக் கந்தலில்லை
நிவாரணப் பிச்சைக்காக நின்று கையேந்தும் நாங்கள்
பொங்கவா முடியும் இந்த இடப்பெயர் அகதிவாழ்வில்

பயன் மிகுந்த எங்களது பண்பாட்டுப் பூமியெல்லாம்
பாதுகாப்பு வலயத்துள் பாழ்பட்டுக் கிடக்கிறது
எங்கள் தமிழ்ப் பூமியெல்லாம் அபகரிக்கப்படுவதற்கு
எல்லைக் கற்களாய்ப் புத்தர் சிலைகள் அம்மா

அகதியாய் மக்கள் அல்லற்பட்டலைகிறார்
போர் செய்த கொடுமையால் இடம்பெயர்ந்தலைகிறார்
நிம்மதியைத் தொலைத்துவிட்டு நிலையற்று வாழும் மக்கள்
பொங்கவா முடியும் இந்த இடம்பெயர் அகதிவாழ்வில்

# துன்பங்களும் அள்ளி தெளிக்கப்படட்டும்..!

தை பிறந்தால்
வழி பிறக்கு மென்பர் முன்னோர்
எம்மவர்கள் வாழ்வில்
எத்தனை தை பிறந்தும் - நல்
வழி பிறக்க வில்லையே !..!..!

இம் முறையாவது
தை மகளே உன்னிடம்
வினயமாய்க் கேட்கிறோம்
நல் வழியொன்றைக் காட்டிடாயா?

வழமையான எதிர்பார்ப்போடு
வலிகளை மறந்து
வாசல்கள் தோறும்
மாவிலை, தோரணங்கள் கட்டிய
மன நிறைவோடு நிறைகுடம் வைத்து
உற்றார், உறவுகள் கூடி
பொங்குகிறோம் பொங்கலோ, பொங்கல்...

அள்ளித் தெளிக்கும்
பொங்கல் நுரையில் - எங்கள்
துன்பங்களும்
அள்ளித் தெளிக்கப்படுமென்ற
நம்பிக்கையோடு நாமின்று
பொங்கிப் படைத்திடுவோம்

*து.திலக் (கிரி) உரும்பையூர்*

டயானா
எமது இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
Dayana Recycle Plastic Industries
பிளாஸ்ரிக் தொழிலகம்
புதிய வடிவிலான கீடெக் வியாபார ஸ்தாபனங்களுக்கு அவர்களின் விலாசம் இடப்பட்டு தொகையாகவோ சில்லறையாகவோ செய்து கொடுக்கப்படும்
ஓடர்களுக்கு முந்துங்கள்
இல. 06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: இல, 30/27, முத்த விநாயகர் இரண்டாம் ஒழுங்கை, நல்லூர்.
Tel: 021 222 8680, 0775925088, 0750407430 E-mail: dayanaplastic0@gmail.com
(C/10405)(10.6.3)

அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்!
பண்டிகைக்காலத் தெரிவுக்கு....
ஆடவர், நங்கையர், சிறுவர்கள் மற்றும் பெரியவர்களே!
உங்கள் விருப்பத்துக்கு ஏற்றவகையில்
ஆடைகளைத் தெரிவுசெய்ய நாடவேண்டிய இடம்:
பெஸ்ட் இன் ரெக்ஸ்ரைல்
Best In's Textiles
59/2, பெரியகடை, யாழ்ப்பாணம். 8V, பெரியகடை, யாழ்ப்பாணம்.

இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்..
அலுமினியம் பிற்றிங் மற்றும் அனைத்து அளவிலான படம் பிறேம் போடுதல் மற்றும் பல சேவைகளை எம்மிடம் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
கண்ணாடி வகைகளின் ஏக விநியோகஸ்தர்
பட்டாபி படமாடம்
64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7821
(C/10404)(10.6.3)
இல. 225, 227 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4351

IELTS Special Class
March - 8ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் திங்கள் தொடக்கம் காலை 7 மணி முதல் 8.30 மணி வரை 3 மணி – 5 மணி வரை நடைபெறும்
ஆரம்பம் 06-01-2014
* INDIVIDUAL TRAINING
* UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
* WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
* MORE THAN 10 YEARS EXPERIENCE
* VOCABULARY and GRAMMAR
* EXTENDED SPEAKING PRACTICE
THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5
IELTS™
BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவுக்குச் சமீபமாக)
Tel 0755435089 0778803887

OLYMPIA SALON
FULL AIR CONDITIONER
Gents & Ladies Hair Cutting
Dye & Colouring, Massage
Facial & Cleanups, Curling
Steam Facial, Straightening
உதிக்கும் தைத்திருநாளில் சகல சுபீட்சமும் பெருக
எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்
SANTHIYA Multi Courtyard
Dealers in Fancy & Gift Items
No.531, Point Pedro Road, Nallur, Jaffna. 0094 021 222696
E-mail. santhiyajaf@walla.com
WESTERN UNION MONEY TRANSFER
MMBL Money Master

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடைத் திருநாள்

- சங்கரி



தமிழர்களின் கலாசார அடையாளமாய் நிமிர்ந்து நிற்கிறது பொங்கல் விழா. பொங்கல் விழா தமிழர் விழாவாக பெருமையுடன் கொண்டாடப்படும் அதே வேளையில் பொங்கல் விழாவின் அர்த்தத்துடனான விழாக்கள் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

ஆதிகாலத்திலேயே விவசாயிகள் அறுவடை விழா கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இதற்குப் பல காரணங்கள் இருந்தன. பயிர்களில் ஆவிகள் இருப்பதாகவும் அவை மனம் குளிர்ந்தால் விளைச்சல் அமோகமாகவும். இல்லையேல் குறைவாகவும் இருக்கும் என்று மக்கள் நம்பினார்கள். அதுபோல ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு காவல் தேவதை இருப்பதாகவும் அதனிடம் வேண்டுதல் செய்தால் அறுவடை அதிகரிக்கும் என்றும் நம்பினார்கள். அறுவடை செய்யும் போது பயிர்களிலுள்ள ஆவி கோபமடையும்என்பதும், அந்தக்கோபத்தை குறைக்க அவற்றுக்குப் படையல் செலுத்த வேண்டும் என்பதும் கூட ஆதியில் இருந்த நம்பிக்கைகளில் ஒன்று.

இதனடிப்படையில் தான் ஆதியில் அறுவடை விழாக்கள் இயற்கைக்கும், இயற்கையைப் பராமரிக்கும் தெய்வங்களுக்கும் ஆனந்தமளிப்பதற்காக நடத்தப்பட்டன. கிரேக்க, ரோம, எகிப்திய, எபிரேயக் கலாசாரங்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறுவடை விழா கொண்டாடியிருக்கின்றன.

கொரியாவில் அறுவடை விழா சூசாக் என்னும் பெயரில் கொண்டாடப்படுகிறது. செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில் கொண்டாடப்படும் இந்த விழா நன்றி விழாவாக கொரிய மக்களால் கொண்டாடப்படுகிறது.

ஜப்பானியர்கள் நவம்பர் மாதத்தில் டோ ரி-னோ-இச்சி என்னும் பெயரில் அறுவடை விழா கொண்டாடுகிறார்கள். இரவு முழுதும் ஆட்டம் பாட்டமாய் இந்த விழா குதூகல மூட்டுகிறது.

அமெரிக்காவில் நவம்பர் மாதத்தின் நான்காவது வியாழக் கிழமை நன்றி செலுத்தும் விழா கொண்டாடப்படுகிறது. சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்ட இந்த விழா விளைச்சலுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில் மக்கள் வாழ்த்துக்கள் பரிமாறிக் கொள்கிறார்கள். அமெரிக்கா வழி செல்லும் கனடாவில் ஒக்டோபர் மாதம் இரண்டாவது திங்கட் கிழமை இந்த விழா கொண்டாடப்படுகிறது.

சீனாவில் மக்கள் ஒகஸ்ட் நிலா விழா கொண்டாடுகிறார்கள். இந்த விழாவின் முக்கிய உணவான மூன்கேக்குகளை மக்கள் பகிர்ந்து. பரிசளித்து மகிழ்கிறார்கள்.

வியட்நாமில் - தெட் திராங்து என்னும் பெயரில் எட்டாவது லூனார் மாதத்தின் பதினைந்தாம் நாளில் கொண்டாடப்படுகிறது. பெற்றோர் தங்கள் விவசாய காலம் முடிந்து குழந்தைகளுடன் ஆனந்தமாய் ஒன்றித்திருக்கும் விழாவாக இந்த விழா அமைந்து குழந்தைகளை மையப்படுத்துகிறது.

இஸ்ரேலில் எபிரேய மாதமான திஸ்ரியின் பதினைந்தாவது நாள் சுக்கோத் விழா கொண்டாடப்படுகிறது. அறுவடை விழாவான இது நன்றி தெரிவித்தல் விழாவாகவும் கொண்டாடப்படுகிறது. சுமார் மூவாயிரம் ஆண்டுகளாக யூதர்கள் இந்த அறுவடை விழாவைக் கொண்டாடி வருகிறார்கள். இந்த விழா இன்று கிறீஸ்தவர்களாலும் கொண்டாடப்படுகிறது.

ஆபிரிக்காவில் யாம் என்னும் பெயருடன் இந்த விழா நடைபெறுகிறது.

ரோமர்கள் ஒக்டோ பர் நான்காம் நாள் செரிலியா என்னும் விழாவைக் கொண்டாடுகிறார்கள். இது தங்களுக்கு நல்ல விளைச்சலைக் கொடுத்ததற்காக சோளப் பயிரின் பெண் தெய்வமான சீரஸ் என்பவருக்கு நன்றி செலுத்தும் விழா. தங்கள் தெய்வத்துக்கு புதிய காய்கறிகள், பழங்கள் , பன்றி போன்றவற்றைப் படைத்து, இசை, விளையாட்டு, நடனம் என விழாவை கொண்டாடுகிறார்கள். வினாலியா என்றொரு விழாவையும் இவர்கள் கொண்டாடுகிறார்கள். தங்கள் திராட்சைத் தோட்டங்களில் விளையும் முதல் திராட்சைக் குலையை இறைவனுக்குப் படைத்து அந்த விளைச்சல் காலத்தை ஆசீர்வ திக்க ஆண்டவனை வேண்டுகிறார்கள்.

எகிப்தியர்கள் விளைச்சல் விழாவில் காய்கறிகள் மற்றும் வளம் தரும் கடவுளை வழிபடுகிறார்கள். இசை, நடனம் என கோலாகலப்படுகிறது எகிப்தியர் களின் இந்த அறுவடை விழா.

ஆஸ்திரேலியாவிலும் ஏப்ரல் மாத கடைசியில் திராட்சை அறு வடை விழாவும், ஜனவரி மாதத் தில் லாவண்டர் மலர் அறுவடை விழாவும், மார்ச் மாதத்தில் ஆப்பிள் அறுவடை விழாவும், டிசெம்பர் - ஜனவரி காலத்தில் கோதுமை அறுவடை விழாவும் கொண்டாடப்படுவது பல இடங்களில் வழக்கத்தில் உள்ளது.

ஜேர்மனியில் அறுவடை விழா ஒக்டோபர்விழா என்று அழைக்கப்படுகிறது. இந்த விழா திராட்சை அறுவடையின் கடைசியில் கொண்டாடப்படுகிறது. ஒக்டோபர் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை இந்த விழா கொண்டாடப்படுகிறது. வண்ண மயமான பேரணிகளும், நடனங்களும் இந்த விழாவில் முக்கிய இடம் பிடிக்கின்றன.

மலேஷியாவில் ஜூன் மாதம் இரண்டாம் நாள் அறுவடை விழா கொண்டாடப்படுகிறது. அரிசி விளைச்சலுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்தும் விழாவாக இந்த விழா கொண்டாடப்படுகிறது. புதிய அரிவாள்களுடன் அறுவடை செய்து, வயல்வெளிகளில் கூடி இந்த விழாவை இவர்கள் கொண்டாடுகிறார்கள்.

இங்கிலாந்தில் அறுவடைவீடு என்னும் பெயரில் இந்த விழா கொண்டாடப்படுகிறது. செப்ரெம்பர் மாதம் கொண்டாடப்படும் இந்த விழாவில் பழங்களையும், காய்கறிகளையும் இறைவனுக்குப் படைக்கும் விழாவாகவும், நன்றி செலுத்தும் விழாவாகவும் இது கொண்டாடப்படுகிறது.

ஆலயங்களை எல்லாம் அலங்கரித்து மக்கள் அறுவடை செழிக்க வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறார்கள்.

இவ்வாறு உலகெங்கும் கொண்டாடப்படும் அறுவடை விழாக்கள் இயற்கையோடு மனிதனுக்கு உரிய தொடர்பையும், இறைவனோடும் சக மனிதனோடும் மனிதன் கொள்கின்ற உறவையும் வெளிப்படுத்துபவையாக திகழ்கின்றன.

எந்த ஒரு விழாவும் வெறும் அடையாளத்தை மட்டும் அணிந்து கொண்டு அதன் அர்த்தத்தை இழந்து விடுமெனில் பயனற்றதாகி விடுகிறது. விழாக்கள் அதன் அர்த்தங்களை அறிந்து கொள்ள அழைப்பு விடுக்கின்றன. மனிதனோடும், இயற்கையோடும், இறைவனோடும் கொண்டுள்ள உறவை உறுதிப்படுத்தவும், சீரமைக்கவும் இந்த விழாக்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன.

## பொங்கிடும் வெடி ஓசை

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)



**தோட்டப்பொங்கல்**

தைப்பொங்கலை சிலர் இப்படியும் கொண்டாடுவர். அதுதான் தோட்டப்பொங்கல். தமது தோட்டக் காணியில் விளையும் காய்கறிகளைக் கொண்டு புதுப்பானை வைத்து கூட்டுப்பொங்கல் பொங்கி சூரியக்கடவுளுக்கு படைத்து அயல் தோட்டக்காரர்களையும் அழைத்து பரிமாறி மகிழ்வர்.

பொங்கல் தண்ணீர் தோட்டம் முழுவதும் தெளிக்கப்பட்டு அன்று புனிதமடையும் தோட்டத்தில் பயிர்கள் செழித்தோங்கிவளரும் என்பது அவர்களது நம்பிக்கை. அந்த நம்பிக்கையுடன் புதியவருடம் ஆரம்பிக்கும்.

இது பாரம்பரியமாக சில இடங்களில் நிகழ்கிறது. தோட்டப்பயிர்களை நம்பிவாழும் குடும்பங்களின் மகிழ்தல் இந்த விருந் தோம்பலில்தான் தங்கியிருக்கிறது.

**துன்பம் தீர பொங்குவோம்**

கடந்துபோன துன்பநாள்களை மறக்கமுடியவில்லை. சிறுவயதில் கூடிக்குலாவிய நண்பர்கள் எங்களுடன் இப்போது இல்லை. உற்றம் சுற்றத்தாரும் அப்படித்தான். தோல்வியின் தருணங்களை எண்ணி வெற்றியின் விளிம்புகளை தவறவிட்டுவிடலாகாது. தமிழர் திருநாளில் புதியதாய் பொங்கல் உண்டு புதிய தாய் தொழில் தொடங்கி புதியதாய் வாழ்வோம். மறுக்கப்பட்ட மறுக்கப்படும் உரி மைகளுக்காக குரல்கொடுக்கவும், சிலர் திட்டமிட்டு அழிக்கமுனையும் தமிழர் பாரம்பரியங்களைப் பேணவும் தலைப்படுவோம். புதியதாய் பொங்கலுண்டு புதுயுகம் படைப்போம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ பண்டிகைகளை, நாம் இந்த மண்ணில் கொண்டாடினாலும் தமிழர்களின் பொங்கல் விழா, மற்றெல்லா விழாக்களையும் விட வித்தியாசமானது. மதம், இனம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் மனிதர்களால் பண்டிகைகள் வடிவமைக்கப்பட்டன. ஆனால் பொங்கல் பண்டிகை என்பது ஒட்டுமொத்தத் தமிழர்களின் கலாசார விழா வாக, தொன்மையை விளக்கும் ஓர் ஆத்மார்த்த நிகழ்வாக, பாகுபாடுகளை எல்லாம் களைந் தெறியும் ஓர் இனத்தின் விழாவாக எப்போதும் மிளிர்கின்றது.

விவசாயம் சார்ந்த ஓர் இயற்கை வாழ்வினை வாழ்ந்து அதைச் சிறப்பித்து நன்றி கூறும் ஓர் ஒப்பற்ற நிகழ்வாய் தமிழர்களுக்குப் பொங்கல் விழா அமைந்ததுடன் அவர்களது கலை, வீரம், பண்பாடு ஆகியவற்றையும் ஒன்று சேர உலகத்துக்கு எடுத்தியம்பும் ஓர் அற்புதமான விழா இது. மனிதர்கள் மனிதர்களை நேசிப்பதும் தத்தம் மதங்கள் போதித்தவற்றைப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடுவதும்தான் உலகின் வழமையான கொண்டாட்டங்களாகும்.

சூரியனில் இருந்து தெறித்து விழுந்த இந்தப் பூமி இறுகிக் குளிர்ந்து மண்ணாய் மாற்றமடைந்து அந்த மண்ணில் இருந்து இன்று செழித்து வளர்ந்து நிற்கும் பல்வேறு பரிணாம மாற்றங்களின் வெளிப்பாடுதான் மனி தன். மண்ணிலிருந்து வந்த உயிர்கள் எல்லாம் மண்ணைச் சார்ந்து வாழ்ந்து, வெளிச்சம் தரும் சூரிய ஒளியினைச் சக்தியாகப் பெற்றும் விண்ணிலிருந்து பொழியும் மழை நீரைப் பெற்றும் உயிர் வாழ்கின்றன.

மண்ணோடு மண்ணாக மனிதன் உறவாடி உழவு செய்து மானுடர்க்கு எல்லாம் உணவு கொடுக்கும் உலகின் ஆதித் தொழிலாக விவசாயம் திகழ்கின்றது.

எப்போதும் ஒளிதந்து தாம் விளைவித்த பயிர் பச்சைகளுக்கு உயிர் கொடுத்துக் காத்தருளிய அந்த ஆதவனை உயிராய்ப் பாவித்து நன்றி செய்யவும், தமக்கு விவசாயத் தின்போது உதவிய மாடு, ஆடுகளை நெஞ்சார நேசித்து காலமெல்லாம் அவை செய்த விசுவாசத்துக்கு நன்றி சொல்லவும் இந்தப் பொங்கல் விழா உதவுகின்றது.

தன் இனத்தின் வீரத்தை வெளிக்காட்டிக்கொள்ள ஏறு தழுவுதல் என்னும் விழாவின் மூல மாகக் காளை களைத் துன்புறுத்தாமல் அவற்றைச் சீற்றமுடன் வளர்த்து மாடு பிடித்தலை விழாவாகவும் தமிழர்கள் அமைத்துக் கொண்டனர்.

தமிழர்களின் கலாசார விழாவான பொங்கல் திருவிழா வெறும் உறவுகள் கூடிக்களிக்கும் ஒரு விழா மட்டுமல்ல அது உணர்வுகளின் சங்கமம். மண்ணை எடுத்து அந்த மண்ணில் பாண்டம் செய்து அந்தப் பாண்டத்தில் பொங் கல் செய்து அவன் மகிழ்ந்த போது இயற்கையின் முழுச் சுற்றையும் தன் விழாவுக்காக அவன் பயன்படுத்தி முடித்திருந்தான். பஞ்ச பூதங்களும், இயற்கையும், மனிதரும்கால்நடைகளும் சேர்ந்து கொண்டாடும் ஒரு பண்டிகையாக அகில உல கத்திலேயே தமிழர் களின் பொங்கல் விழா மட்டுமே இருக்க முடியும்.

இதன் மூலமாக எமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் உலகோர் அறிய நாம் செய்ய வேண்டும். தமிழ்ப் புத் தாண்டாய் இருக்கட்டும் அல்லது தமிழர் திருநாளாய் இருக்கட்டும் அல்லது உழவர் திருநாளாய் இருக்கட்டும்... பொங்கல் என்னும் தமிழர்களின் உணர்வுத் திருநாளை நாம் அனைவரும் ஒற்றுமையாய் சிறப்பாய் கொண்டாடுவோம்....! விவசாயம் என்பது தொழில் மட்டுமல்ல அது நமது ஆதிப் பண் பாடு என்பதையும் தமிழர்கள் அனைவரும் உணரவேண் டும்...!

வரப்போகும் காலங்களில் விவசாயம் இன்னமும் செழித்தோங்கி வளர இளைஞர்களும் விவசாயத்தில் ஈடுபட்டு எமது தமிழ் தேசம் செழிக்க வழி செய்வோம்.



# பொங்கலோ பொங்கல்

- அருந்ததி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தை மகளே வருக...

பார்மகள் மகிழ
பூமணம் கமழ
வானம் சிவக்க
வண்ணம் மயக்க
பூமித் தாயின்
தை மகளே வருக...

கதிரவன் விரும்பி
கதிரினைத் தந்த
நெல் மணியின்
தலைமகளே
தைமகளே வருக..

உவகை பொங்க
உலகுக்கு
உணவு தந்த
ஈடில்லா உழவனின்
தமிழ் மகளே
தை மகளே வருக

பழையவை யாவும்
காற்றோடு
போகட்டும்
புதியவை இங்கும்
மண்ணில்
தழைக்கட்டும்
நீல மகளே
தை மகளே வருக..

இளைத்தவை எல்லாம்
ஓங்கி வளரட்டும்
இனியவை எல்லாம்
பொங்கிப் பெருகட்டும்
தை மகளே வருக
இன்பங்கள்
எல்லாம் தருக...

தமிழ்நிலா
சாவகச்சேரி.

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய நாள் தமிழர் திருநாளாக, உழவர் திருநாளாக மட்டுமன்றி உறவினர் மகிழ் நாளாகவும் கருதி தூர இடங்களில் உள்ள வர்களின் இல்லங் களுக்குத் தமது வீட்டுப் பொங் கலுடன் சென்று சேர்ந்து உண்டு மகிழ்வ தும் ஒரு முக்கிய கடமையாக இருந்து வந் துள் ளது. இந்த நிலை இப்போதும் ஓர ளவு தொடர்ந்து கொண்டு வருவது கண்கூடு.



# பொங்கல்

## அன்றும் இன்றும்

லக்ஸ்மன்

அந்த நாளில நான் சின்னப் பொடியனாக இருக் கேக்கை பொங்கல் பண்டிகையை ஒரு முக்கியமான தினமாகக் கொண் டாடுவம்.

அப்பு. விடிய முன்னம் எழும்பி பொங்கலுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் சேர்த்து வைத்துவிட்டு முற்றத்திலை பொங்கிற இடத்தைத் தானா கவே மெழுகி பொங்கலுக்கென்று பிடித்து வைத்த அடுப்புகளை வைத்து எல்லா ஆயத்தங்களையும் செய்து விட்டு. கையோடை எங்களையும் எழுப்பி அந்தக் குளிரிலும் குளிச்சுப் போட்டு வாருங்கடா என்று கலைத்துவிடுவார்.

நாங்களும் அப்புவைத் திட்டியபடி குளிச்சுப்போட்டு புதிய ஆடை களை அணிந்து கொள்ளுவம். அதன் பின் கோயிலுக்குச் சென்று பூசை செய்து கும்பிட்டு வீட்டுக்கு வந்த பின்னர் பொங்கலுக்குரிய ஆயத்தங்களைச் செய்வம். இண் டைக் கெல்லாம் அப்படி எதுவும் கிடையாது என இப்போது வயதில் முதியவரான தருமரத்தினம் கூறுகிறார்.

ஐம்பது வருடங்களுக்கு முன்பு பொங்கல் திருநாளன்று முன்ன தாக கோயில்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்து அதன் பின்னரே வீடுகளில் பொங்கல் செய்யும்வழக்கம் இருந்தது. இன்று வயல் நிலங்களையும் பறி கொடுத்து விட்டு. வரப் போகும் பொங்கல் பண்டிகை யைத் 'தமிழர் திரு நாள்'. 'உழவர்கள் பெரு நாள்' என்று பெருமையுடன் கொண்டாட முடிய வில்லையே என்ற ஏக்கம் தமிழ் மக்களுக்கு குறிப்பாக உழவுத் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு இருக்கின்றது.

முன்னரெல்லாம் வருஷம். தீபாவளி என்று தினங்கள் வந்தாலும் தமிழ் மக்கள் பொங்கல் தினத்துக்கே பெரும் முக்கி யத்துவம் வழங்கி வந்துள்ளனர்.

நகர்ப்புறங்களில் கடைகளில் வாங்கி உலைக ளில் போடும் பொங்கல் பண்டிகைகளே இடம் பெற்று வந்தது. கிராமப்புறங்களில் தங் களால் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லைக் குற்றி எடுத்த புத்தரிசி கொண்டு சூரியனை வரவேற்று இடம் பெறும் பொங்கல் பண்டிகை யையே உழவர் திருநாள் என்று அழைக்கப்பட்டது.

அதிகாலையில் எழுந்து பொங்கலுக்கான அனைத்து ஏற்பாடு களும் செய்யப்பட்டு சரியாக சூரிய உதயத்தின் போது பசும்பால் பொங் கும் காட்சி கிராமப்புறத்துக்கு மட்டுமே சொந்தமான காட்சி என தீவகத்தைச் சேர்ந்த சில முதிய வர்கள் தெரிவித்தனர். இன்று அத்தகைய காட்சி களைக் காணமுடிவதில்லை. அநேக வீடுகளில் சூரியபகவான் உச்சிக்கு வரும் போதுதான் பொங்கல் நிகழ்வு இடம்பெறுகின்றது என்பதுடன் பொங்கலுக்கு முன் கோயிலுக்குச் சென்று வழிபடும் முறையும் தொலைந்து விட்டதாகவும் அவர் கள் தெரிவித்தனர்.

பண்டைக் காலத்தில் உழவுத் தொழி லுக்கு வழங்கப்பட்ட முக்கியத்து வம் இன்றைய சமூகத்தால் இப் போது பெரிய அளவில் வழங்கப் படுவதில்லை.

*கார் நடக்கும்படி நடக்கும்*
*காராளர் தம்முடைய*
*ஏர் நடக்கும் எனின் புகழ் சேர்*
*இயலிசை நாடகம் நடக்கும்*
*சீர் நடக்கும், திறம் நடக்கும்*
*திருவறத்தின் செயல் நடக்கும்*
*பார் நடக்கும், படை நடக்கும்*
*பசி நடக்க மாட்டாதே*

என்ற பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் ஏரின் பெருமையை எடுத்துக் காட்டும் தமிழர் திருநாள் எனக் கொண்டாடப்படும் உழவர் விழா வான பொங்கல் விழா இன்று உரிய முறைப் படி இடம் பெறுவதில்லை என்பதும் மூத் தோர் களின் மன வருத்தமாகவே தென் படுகின்றது.

முன்னைய காலங்களில் பொங்கல் பண் டிகையையொட்டி அப் போதைய இளைஞர்களால் சன சமூக நிலையங்கள் மற்றும் கிராமத்தில் உள்ள பொதுத் தாப னங்களூடாக மாட்டு வண்டிச் சவாரி, நீச்சல், முட்டியுடைத்தல், கபடி போன்ற பாரம் பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

உழவர்களின் பெருமையையும் அதற்கு உறுதுணையாகவுள்ள காளை மாடுகள், பசு மாடு களை திருநீறு, சந்தனமிட்டு மாலைபோட்டு மகிழ்ச்சியுடன் அவை களுக்கும் பொங்கல் படைத்து நன்றியைத் தெரிவிக்கும் நிகழ்வு களும் இடம்பெற்றன. உழவின் மகத்துவம் குறித்து கவியரங்கம், பட்டிமன்றம் நடத்தி பொங்கல், பட்டிப் பொங்கல் எனப்படும் மாட்டுப் பொங்கலையும் நடத்தி மகிழ்ந் துள்ளனர்.

அன்றைய நாள் தமிழர் திரு நாளாக, உழவர் திருநாளாக மட்டுமன்றி உறவினர் மகிழ் நாளாகவும் கருதி தூர இடங்களில் உள்ளவர்க ளின் இல்லங்களுக் குத் தமது வீட்டுப் பொங் கலுடன் சென்று சேர்ந்து உண்டு மகிழ்வ தும் ஒரு முக்கிய வழக்கமாக இருந்து வந்துள்ளது. இந்த நிலை இப்போதும் ஓரளவு தொடர்ந்து கொண்டு வருவது கண்கூடு. இது தமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது என்பதும் முதியவர் களின் கருத்தாகும். இப்போது நகர்ப்புறங்களில் மட்டுமல்ல கிராமப் புறங்களிலும் கூட கடையில் வாங்கி உலையில் போடும் பொங்கல்தான் இடம்பெறுகின்றது என்ற வருத்தமும் இல்லா மலில்லை.

உழவுத் தொழிலின் நுட் பங்களைப் பெருக்கி நில வளம், நீர் வளத்தால் பயிர் வளமும் உயிர் வளமும் பெருக் கிய பழந்தமிழர்களின் திருநாளான பொங்கல் நாள் தனது பழம் பெருமையை இழந்து கொண்டி ருக்கின்றதோ என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொய்த்துப் போன காலநிலை

## ஏமாற்றத்தில் விவசாயிகள்

செபஸ்தியாம்பிள்ளை கலிஸ்ரன்
எம்.ஆர்.ரி.சி.

உழவர்களின் திருநாளான தைப்பொங்கல் தினத்தில் உழவர்கள் தமது மனதின் பாரத்தை சுமந்தபடி சூரியனுக்கு நன்றி செலுத்த வேண்டிய தைப்பொங்கலாக இந்த வருடத்தைப் பொங்கல் அமைந்திருக்கின்றது.

பொங்கியெழும் நுரையிலே புதிய வாழ்வைக் கண்டு மகிழும் இந் நாளிலே எதிர்காலத்தை கேள்விக் குறியோடு பார்க்க வேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளமை பெரும் வேதனையே.

இலங்கையில் வடக்கு மாகாணத்திலே பெரும்பான்மையான விவசாயச் செய்கை பாதிப்படைந்துள்ளது. காலபோக வேளாண்மைக் காலத்தில் ஏற்பட்ட பெரு வறட்சியும் காலம் கடந்து பெய்த மழையுமே இவ்வாறான ஒரு பாதிப்புக்குக் காரணமாக அமைந்தது.

இம்முறை யாழ்.மாவட்டத்தில் 11358.85 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் கமநலசேவைகள் திணைக்களப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் யாழ்.மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கை பாதிப்படைந்துள்ள நிலையில் அதன் அழிவு பற்றிய சரியான புள்ளி விவரங்கள் இன்னமும் வெளிப்படவில்லை. அதே நேரம் யாழ்குடாநாடு மட்டுமல்ல வன்னி உட்பட இலங்கையின் பெரும்பாலான பிரதேசங்களில் இந்த அழிவு ஏற்பட்டுள்ளது. ஆழிப் பேரலை ஏற்பட்டு 10 வருடங்கள் கடந்து சென்ற நிலையில் வானிலை மாற்றங்கள் காரணமாகக் கடந்த 6, 7 வருடங்களாகச் சீரற்ற காலநிலையும் காலபோகச் செய்கையின் போது ஏற்பட்ட மழையற்ற தன்மையும் இந்த வருடம் நோய்த் தாக்கத்தை ஏற்படுத்தியதில்லை. வளர்ந்து வரும் நவீன உலகில் காடுகள் அழிக்கப்பட்டு அந்தப் பிரதேசம் கொங்கிறீற் காடுகளாக மாற்றப்பட்டு வருவதும் அதன் சமநிலைத் தன்மையை தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளது. இவ்வாறான நவீனமயமாக்கலினால் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு அவற்றின் மூலம் பெறப்படும் மழையைப் பெற முடியாதுள்ளது. விவசாயிகளால் பயிர் நிலங்களுக்குச் செலவிடப்பட்ட உரம், கிருமிநாசினி மற்றும் இதர செலவினங்களை ஈடுசெய்து நல் விளைச்சலை பெறமுடியாதவகையில் யாழ்ப்பாணத்தின் 40 வீத நெற்செய்கை நிலங்கள் விளைச்சலைக் கொடுக்கவில்லை.

யாழ்.குடாநாட்டின் பெரும்பாலான இடங்களில் விவசாயம் அழிவடைந்துள்ள நிலையில் வலிகாமம் தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசமான கல்லுண்டாய் பிரதேசத்தில் பயிர்ச் செய்கையின் பாதிப்பை நேரில் சென்று பார்வையிட முடிந்தது.



சுமார் 350 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நெல் வயல்கள் முற்று முழுதாக அழிவடைந்த நிலையில் காணப்பட்டன. இது குறித்து அந்தப் பிரதேசத்தில் விவசாயச் செய்கையை மேற்கொண்டு பாதிப்படைந்த குமாரசாமி என்னும் விவசாயியைச் சந்தித்த போது அவர் தன்னுடைய மன ஆதங்கத்தை வெளிப்படுத் தினார்.

நான் நீண்டகாலமாக விவசாயச் செய்கையை மேற்கொண்டு வருகின்றேன். இந்த வருடம் 10 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயச் செய்கையினை மேற்கொண்டிருந்தேன். 'ஆட்டக்காரி' எனப்படும் நெல்லினத்தையே பெருமளவில் விதைத்திருந்தேன். இந்த கால போகச் செய்கையை மழையை நம்பி மேற்கொண்டிருந்த போதிலும் மழை பொய்த்துப் போனதால் ஆரம் பத்தில் பயிருக்கு சீரான முறையில் நீரைக் கட்டுப்படுத்த முடியாமையினால் பயிர்கள் அதன் ஆரம்ப வளர்ச்சிப் பருவத்திலேயே பாதிப்பை எதிர் நோக்கின. பயிரை மிஞ்சிய களைகளின் வளர்ச்சியே வயல் முழுவதும் காணப்படுகின்றது. மேலும் மழை இல்லாத போதும் பசளை இடவேண்டிய காலத்தில் பசளைகள் இட்டுப் பராமரித்து வந்தேன். பசளை இட்ட காலத்தில் ஓரளவேனும் மழை அவசியம். ஆனால் மழையை எதிர்பார்த்துக் காத்திருந்து அது குறிப்பிட்ட வளர்ச்சிக் காலத்தில் பொய்த்துப் போனமையினால் பயிர்கள் முற்றாகக் கருகிப் போயுள்ளன. குறிப்பாக எமது வயல் பிரதேசம் காக்கைதீவுக் கடலுக்கு அண்மையில் காணப்படுவதனால் உவர் நிலமாகவே காணப்படுகின்றது. சாதாரண விவசாய நிலங்களைப் போல் அல்லாது உவர் நிலத்துக்குப் போதிய அளவு நீர் அவசியம். ஆனால் இயற்கை இந்த முறை பொய்த்துப் போனதால் இந்தப் பிரதேச விவசாயம் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்குக்கூட அதனுடைய பயனை எதிர்பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நான் விவசாயம் செய்த 10 ஏக்கர் நிலப்பரப்பில் இருந்தும் 10 பரப்பு நெல்லின் விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியுமா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. கடந்த வருடங்களில் விவசாயம் சாதாரணமான அளவு வீழ்ச்சிப் போக்கைச் சந்தித்திருந்தாலும் இந்த வருடத்தின் விளைச்சல் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இவ்வாறானதொரு வறட்சி நிலை இற்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன் னரும் ஏற்பட்டது. இம் முறையும் அதே வறட்சி நிலைமை காணப்படு கின் றது. இந்த நிலைமை நாட்டின் பொருளாதாரத் தைப் பாதித்துள்ளது என்பதைவிட எமது தனிப்பட்ட பொருளாதார வாழ்வில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்றார் அந்த விவசாயி.

> இவ்வாறானதொரு வறட்சி நிலை இற்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன் னரும் ஏற்பட்டது. இம் முறையும் அதே வறட்சி நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலைமை நாட்டின் பொருளாதாரத்தைப் பாதித்துள்ளது என்பதைவிட எமது தனிப்பட்ட பொருளாதார வாழ்வில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஆனைக்கோட்டை விவசாய சம்மேளனத் தின் செய லாளர் மாதன் மயில்வாகனம் கருத்துத் தெரிவிக்கும் போது;

எமது பிரதேசத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வயல் நிலங்களின் மொத்த நிலப்பரப்பாக சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்புக் காணப்படுகின்றது. இந்த 250 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த முறை விவசாயம் செய்யப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் கடைசிப் பகுதியிலே விவசாயிகள் விவசாயச் செய்கையை மேற்கொண்டனர். விவசாயச் செய்கை முடிவடைந்து அதன் பின்னர் பயிர் வளர்ந்து விடலைப் பருவத்தில் பயிருக்குப் போதிய அளவு நீர் கட்ட வேண்டிய தேவையுள்ளது. ஆனால் அந்தக் காலப் பகுதியில் இருந்து சுமார் ஒன்றரை மாத காலமாக மழை நீர் கிடைக்கவில்லை. அதனால் முற்றுமுழுதான விவசாய நிலங்களும் அழிந்து போயுள்ளன. இந்த முறையும் தை, மாசி உட்பட்ட காலங்களில் நெல் அறுவடைக் காலம். தற்போது காலம் கடந்து பெய்த மழையினால் வயல் நிலங்கள் எங்கும் நெல்லுக்குப் பதிலாக களைகளே வளர்ந்துள்ளன.

பல விவசாயிகள் கடன் அடிப்படையிலேயே கடன்பெற்று விவசாயம் மேற்கொண்டனர். தற்போது விளை நிலங்களில் இருந்து வருமானங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வங்கிக் கடன்களைச் செலுத்த முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

மேற்படி தமது சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு அமைவாகப் பெறப்பட்டமையால் குறிப்பிட்ட கடன் நிறுவனங்களில் இருந்து சலுகைகளை எதிர்பார்க்க முடியாத நிலை தோன்றியுள்ளது. இந்த முறை எமது பிரதேசம் மட்டுமல்ல எல்லா இடங்களிலும் பயிர்கள் அழிவடைந்துள்ளன. எனினும் அரசிடம் இருந்து எந்த உதவியையும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் கடந்த வருடங்களில் குறிப்பிட்ட சில இடங்களில் காலநிலைப் பாதிப்பு ஏற்பட்ட போதிலும் அரசினால் உதவிகள் எதுவும் வழங்கப்பட வில்லை. இம்முறையும் விவசாயிகள் தமது சேத விவரத்தினை எமது விவசாய சம்மேளனத்தில் பதிவு செய்துள்ளனர். கடந்த வருடம் விவசாயிகள் பாதிக்கப்பட்ட போதும் அரசு ஒரு மூடை விதை நெல்லுக்கு எந்தவித விலைக் குறைப்பும் செய்யாது 3000 ரூபாவுக்கு விவசாயிகளுக்கு வழங்கியிருந்தது. இந்நிலையில் இந்த வருடம் பல இடங்களிலும் விவசாயம் பாதிப்படைந்துள்ளமையினால் அரசு நட்டஈட்டை வழங்குமா என்பது சந்தேகமே. இவ்வாறான சூழ்நிலையில் சாதாரண விவசாயிகளால் பொங்கல்திருநாளை எப்படி மன மகிழ்வோடு கொண்டாட முடியும்? என்றார்.

விவசாயிகளுக்கு ஓரளவேனும் நட்டஈட்டை வழங்கி அவர்களது வாழ்வாதாரத்துக்கு வழிகாட்ட வேண்டும் என்பதே விவசாய சம்மேளனத்தின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இந்த முறை சேதமடைந்த நெல் வயல்களில் எஞ்சியுள்ள பயிர்களைப் பாதுகாப்பது என்பது பெரும் சவாலாகவே உள்ளது. தற்போது பெய்த மழையினால் மிஞ்சியுள்ள பயிர்களையும் களைகள் மேவி நிற்கின்றன. அந்தப் பயிர்களையும் பாதுகாக்க முடியுமா என்பதே தற்போது விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையாகவுள்ளது. தற்காலத்தில் நாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதனாலும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் காணப்படுவதனாலும் விலைவாசி உயர்வை விவசாயிகள் மட்டுமல்ல ஒவ்வொரு தனிநபர்களும் கட்டாயம் சந்தித்தே ஆக வேண்டும் என்ற செய்தியை இந்த வருட தைப்பொங்கல் கூறி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஏரினில் உழுது பயிர் நாட்டி
ஏழைகள் உயர்ந்திட வழி செய்து
சூரியக் கடவுளின் துணையாலே
சூழ்ந்திடும் வையம் ஒளி பெறவே
பாரினில் உள்ள யாவர்க்கும்
பசியைப் போக்க வழி செய்யும்
சீரிய உழைக்கும் வர்க்கத்தின்
சிறப்பே தைத்திரு நாளினிதே !

முளைத்த கதிர்கள் மணியாக
முதிர்ந் தெழுந்து பயிராகி
விளைந்ததுவே நல் நெல் மணிகள்
வியர்வைக் கரங்களின் கண் மணிகள் !

உழைக்கும் மக்கள் உய்திடவே
ஊர்கள் எல்லாம் செழித்திடவே
தளிர்க்கும் தைத்திரு நாளிதுவே
தரணி தளிர்த்திடும் பொங்கலி(னி)தே !

நித்திலமே உழைப்பாளர்
நிகரதனை ஏற்றும்
வித்தகமே உழைப்பதனின்
விளை திறனைப் போற்றும் !
தித்திக்கும் தைப் பொங்கல்
தீந் தமிழின் அங்கம்
எத்திக்கும் தமிழ் பொங்கும்
எம் தமிழர் சங்க(ம)ம் !

மானியூர் ரட்ணேஸ்

## தலைமகனே புசித்திடும்.... !

பொங்கட்டும்
பொங்கட்டும்
புதுப்பானைப் பொங்கல் - எம்
மனங்களும்
மனைகளும்
மகிழ்வினைக் காவட்டும்..

பகலவன் பார்வையில்
மண் வளம் செழிக்கட்டும்
வானத்து அரசன் வருகை கண்டு
பயிர்கள் பச்சைப் பசேலென
மிளிரட்டும்
கோடி கோடியாய்
உழவர்கள் உள்ளங்கள்
குதூகலிக்கட்டும்....

காசினி இருளைப் போக்கும்
கதிரவனே... உன்
அருளால் கிடைத்த
புதிரெடுத்துப் பொங்குகிறோம்
புதுப் பானைப் பொங்கல்...

பட்டாசு வெடி கொளுத்தி
புத்தாடை அணிந்திங்கே
தலை வாழையிலைப் படையல்
செய்து
மகா கிரி வலமாய் வந்து
தலைமகனே புசித்திடுமென்று
கரம் கூப்பித் தொழுகின்றோம்
செங்கதிரவனே நீ வருக !..
மண் வளம் பெருக கருணை நீ
புரிக.... !!

து.திலக் (கிரி)
யாழ். உரும்பையூர்

## தைமகளே வந்திடுக

பொங்கல் திருநாளே
புதுயுகம் படைத்திடவா
எங்கள் திருநாடு
என்றும் மகிழ்ந்திருக்க
சங்கத் தமிழ்க் கலைகள்
தமிழர் தம்
பெருமையெலாம்
பொங்கிப் பெருக வைக்க
தை மகளே வந்திடுக

த.நாராயணன்



பொங்கலோ பொங்கல்!



இத் தரணியில் வாழும் மக்களின் தேவையறிந்து கதிரவன் பொழியும் ஆசி மழைக்கு உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் நன்றி கூறும் ஒளிமயமான இச் சூரியப் பொங்கல் தினத்தில், என்றும் மக்கள் மனமறிந்து சேவையாற்றும்

மக்கள் வங்கியின் சௌபாக்கியம் பொங்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

2014 ஜனவரி 14ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தினை முன்னிட்டு கீழ்காணும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் கொடுக்கல் வாங்கல்களின் நிமித்தம் காலை 9.00 மணி முதல் பி.ப. 12.00 வரை திறந்திருப்பதுடன், கொட்டாஞ்சேனை கிளையில் விஷேட தைப்பொங்கல் வைபவமொன்றும் நடைபெறும்.

கண்டி மாவட்டம் - கண்டி | அம்பாறை மாவட்டம் - காரைத்தீவு, திருக்கோவில் | யாழ்ப்பாண மாவட்டம் - சாவகச்சேரி | பதுளை மாவட்டம் - ஹப்புத்தளை | திருகோணமலை மாவட்டம் - திருகோணமலை நகர் | கொழும்பு மாவட்டம் வடக்கு - கொட்டாஞ்சேனை | கொழும்பு மாவட்டம் தெற்கு - வெள்ளவத்தை, கிருளப்பனை | கொழும்பிற்கு அப்பால் - தெஹிவளை காலி வீதி | வன்னி மாவட்டம் - வவுனியா, கிளிநொச்சி, மல்லாவி சே.நி. | கேகாலை மாவட்டம் - புலத்கொஹூபிட்டிய | நுவரெலிய மாவட்டம் - ஹற்றன் | புத்தளம் மாவட்டம் - உடப்புவ சே. நி. | மட்டக்களப்பு மாவட்டம் - கல்லாறு | மாத்தளை மாவட்டம் - மாத்தளை | இரத்தினபுரி மாவட்டம் - பலாங்கொடை | களுத்துறை மாவட்டம் - பாணதுறை பிரதான கிளை

AA- Brand Finance Rating, AA+ Fitch Rating

மக்கள் வங்கி

www.peoplesbank.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org